
கல்கி



KALKI 26.11.1972 45 காசு

கல்கி

சிறுகதைச் சிறப்பிதழ்



பொருளடக்கம்

பரிதாபி, கார்த்திகை 11 - நவம்பர் 26, 1972

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

கல்கி

மலர் 32

இதழ் 17

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
— பாரதியார்

தமிழ்நாட்டின் தீர்ப்பு

தி. மு. க. ஆட்சியை மக்கள் விரும்பவில்லை என்பதைத் தமிழ்நாடு முழுமையும் அமைதியாகவும், பரிபூரணமாகவும் நடைபெற்ற ஹர்த்தால் நிரூபித்து விட்டது.

தமிழ் நாட்டை இப்போது ஆளும் கட்சியினர் மீது எல்லாத் தரப்பைச் சேர்ந்த பொதுமக்களும் தங்கள் அதிருப்தியைத் தெரிவித்துக் கொள்வதற்காக நடத்திய ஹர்த்தால் முழு வெற்றியைப் பெற்றுவிட்டது. வன்முறைகள் எதுவும் இல்லாமல், தமிழக அரசு கொண்டு வந்து குவித்த மத்திய போலீஸுக்கு எந்த வேலையும் வைக்காமல், ஹர்த்தால் நடத்தியவர்கள் அதை மிகவும் அமைதியாகவும் முழுமையாகவும் நடத்திவிட்டார்கள்.

நவம்பர் 13ந் தேதி கூடிய சட்டமன்றக் கூட்டத்தில் எம். ஜி. ஆரைத் தலைவராகக் கொண்ட அ. தி. மு. க. உறுப்பினர்கள், எதிர்க்கட்சி வரிசையில் இடம் கேட்டு அமர்ந்தனர். ஒரு மணி நேரத்துக்கு மேல் அடுத்தடுத்து ஒழுங்குப் பிரச்னைகள் எழுந்தபின் சபை திடீரென்று ஒத்தி வைக்கப்பட்டது. ஹர்த்தாலையடுத்து நவம்பர் பதினைந்தாந்தேதி மீனம்பாக்கம் விமான நிலையத்தில் அ.தி.மு.க.வில் சேர்ந்திருக்கிற பாராளுமன்ற உறுப்பினர் திரு நாஞ்சில் மனோகரன் தாக்கப்பட்ட சம்பவம் தி. மு. க.விற்குத் தலைகுனிவை ஏற்படுத்தி யிருக்கிறது. அதே தினம் காலையில் போலீஸ் தடையை மீறித் தி. மு. க. வினர் ஊர்வலமாகச் சென்றிருக்கிறார்கள். பேருக்கு அவர்களைக் கைது செய்தாற்போல் கண்துடைப்பு நடத்தி விடுவித்து விட்டார்கள்.

தேர்தல் காலத்து வாக்கெடுப்பு முறையில்கூட மக்கள் அபிப்பிராயம் இரகசியமாகத்தான் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இந்த ஹர்த்தாலில் எல்லாரும் காணும்படி மக்கள் தங்கள் அதிருப்தியை வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த அதிருப்தியும் ஒரு வாக்கெடுப்பு மாதிரியே நடந்து முடிந்திருக்கிறது. இதற்குப் பின்னும் இந்த அரசு பதவியிலிருந்து விலகாமல் இருப்பதற்கு நியாயமே யில்லை. ஜனநாயகத்தில் மக்கள் ஆதரவைப் பெற்றதன் மூலம் பதவிக்கு வந்தவர்கள் அந்த ஆதரவு குன்றும்போது தாங்களாகவே பதவி துறந்து மீண்டும் மக்கள் கட்டளை எப்படி என்று அறிவதே முறை. 'வெற்றி பெற்று வந்துவிட்டோம், ஐந்தாண்டுக் காலத்துக்கு யார் எதைச் சொன்னாலும், எத்தனை ஊர்வலமும், ஹர்த்தாலும் நடத்தினாலும், பதவியில் அட்டைபோல் ஒட்டிக் கொண்டிருப்போம்' என்று நினைப்பது விவேகமாகாது. இந்த விஷயத்தில் திரு எம். ஜி. ஆரின் எச்சரிக்கையும் வேண்டுகோளும் அனைவரின் சிந்தனைக்கும் உரியவை.


"மக்கள் தங்கள் தீர்ப்பை வழங்கி விட்டார்கள். இனியும் இந்த அரசு பதவியில் இருக்கக் கூடாது" என்று எம்.ஜி.ஆர் ஹர்த்தால் முடிந்ததும் அறைகூவல் விட்டிருக்கிறார்.

ஆனால் தமிழக முதல்வரோ, 'இந்த ஹர்த்தால் மக்கள் மன நிலையில் எந்த மாறுதலையும் குறிக்கவில்லை' என்று மறுப்புகிறார். மக்கள் மன நிலை மாறியிருந்தாலும் கலைஞர் மனநிலை இன்னும் மாறவில்லை என்றே இதிலிருந்து நமக்குப் புரிகிறது.


இப்போது தமிழ் நாட்டில் நிலவும் அசாதாரண நிலையை உணர்ந்தே, ராஜாஜி அவர்களும், "அன்று தி. மு. க.வுக்கு அதிகமான மக்களின் ஆதரவு இருப்பது நிரூபிக்கப்பட்டு விட்டது. இனியும் கருணாநிதி அரசு பதவியில் தொடர முடியாது" என்று கூறியுள்ளார்.


எனவே ராஜாஜி அவர்கள் கூறியுள்ளபடி சிறிது காலத்துக்கு ஜனாதிபதி ஆட்சி நடைபெற்ற பின்புதான் தமிழ் நாட்டில் இடைத் தேர்தல் அமைதியாகவும், சகஜமாகவும் நடக்க முடியும். இல்லாவிட்டால் தேர்தலில் பல தவறுகளும் குழப்பங்களும் இருக்குமாதலால் இப்போதுள்ள தி. மு. க. அரசை நீக்கி உடன் ஜனாதிபதி ஆட்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதன் பின்பு சிறிது காலம் பொறுத்தே பொதுத் தேர்தல் நடப்பது நல்லது.

பழையபடி வேதாளம்...!




தந்தை மகற்கு ஆற்றும்...





"அவசியமானால் அரிசி, கோதுமை, பருப்பு வகைகள் இறக்குமதி செய்யப்படும்" என்று சவான் கூறினார்.

— செய்தி







மேயர் திரு ஆர். ஆறுமுகம்

★ இந்த ஆண்டு நேரு ஜெயந்தியன்று (நவம்பர் 14ந் தேதி) நேரு நினைவுப் பரிசை, பாரத ஜனாதிபதி வி. வி. கிரி, புனித அன்னை தெரீஸாவுக்கு வழங்கினார். அன்னை தெரீஸா கல்கத்தாவில் பல ஆண்டுகள் வீடு வாசலற்ற ஏழை அனாதைகளுக்கு அருந்தொண்டாற்றி அனாதை இல்லங்களைத் தோற்றுவித்துப் பணியாற்றியிருக்கிறார்.

★ சென்னை நகர மேயராக திரு ஆர். ஆறுமுகமும் உதவி மேயராக திரு எஸ். கன்னியப்பனும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நமது வாழ்த்துக்கள்.

★ திரு எம். ஜி. ஆர். விடுத்த வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து, தமிழக ஆட்சிக்கு எதிராகத் தமிழகமெங்கும் ஒரு நாள் ஹர்த்தால் மிக அமைதியான முறையில் வெற்றிகரமாக நடைபெற்றது. சென்னை அண்ணாசாலை வெறிச்சோடிக் கிடப்பதைப் படத்தில் காணலாம்.

★ பிரிட்டனின் இரண்டாவது பெரிய நகரமான பர்மிங்ஹாமில் பல்வேறு நாட்டுக் கலாசாரங்கள், கலைகளைப் பிரதிபலிக்கும் நிகழ்ச்சிகள் ஆண்டு தோறும் குறிப்பிட்ட ஒரு வாரத்தில் நடக்கும். இவ்வாண்டு இந்திய கலாசாரத்தின் பிரதிபலிப்பாக சாகுந்தலத்தைப் புனித ஜார்ஜ் வி. ஈ. காம்ப்ரஹன்சிவ் பள்ளி மாணவர்கள் நடித்தனர்.



உதவி மேயர் திரு கன்னியப்பன்



துஷ்யந்தன் ஒரு சீக்கியர் போல் தோற்றமளிப்பது வேடிக்கைதான் என்றும் இரீஷ்பரேக் என்பவர் சிங்கமாக நடித்திருக்கிறார் என்பது அதைவிட விநோதமல்லவா ?



தமிழ் நாட்டிலே...

தீரன்


வாக்காளருக்குக் கார்டு

திண்டுக்கல் தொகுதியில் நடைபெற இருக்கும் பாராளுமன்ற உபதேர்தலில் 'கார்டு முறை' அமுல் செய்யப்பட விருப்பதாக அரசாங்க அறிவிப்பிலிருந்து தெரிகிறது. இம்முறையினால் சில பிழைகள் நேராமல் தவிர்க்கப்பட வழி இருக்கிறது. வாக்காளர்களைப் பற்றிய கணக்கு எடுக்கும் பணி முடிந்தபின் ஒவ்வொரு குடும்பத்துக்கும் தனித் தனி வாக்காளர் கார்டுகள் விநியோகிக்கப்படும் என்றும், ஒவ்வொரு குடும்பத்தையும் சேர்ந்த வாக்காளர் பற்றிய விவரங்கள் அந்தக் கார்டுகளில் இருக்கும் என்றும், கணக்கு எடுத்த பணியாளரும், குறிப்பிட்ட குடும்பத்தின் தலைவர் அல்லது மூத்த உறுப்பினரும் அந்தக் கார்டில் கையெழுத்திட்டிருப்பார்கள் என்றும் தெரிகிறது.

வாக்காளர் கணக்கு எடுப்பின்படி தயாரிக்கப்பட்ட பட்டியலில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் இந்தக் கார்டு தரப்படும் என்றும் இதை ஒவ்வொரு குடும்பத்தினரும் பத்திரப்படுத்தி வைத்திருக்க வேண்டும் என்றும் அறிவித்திருக்கிறார்கள். தேர்தல்களில் சகஜமாக நடந்த — நடக்கிற — சில தவறுகள் இந்தக் கார்டு முறையினால் நீங்கும் என்று எதிர்பார்க்கலாம் அல்லவா?

கோயில் நந்தவனத்தில் கள்

தஞ்சை மாவட்டத்தில் இருக்கும் திருக்கொள்ளம்புதூர் வில்வாரண்யேசுவரர் கோயிலில் நூற்றுக்கு மேற்பட்ட தென்னை மரங்கள் இருப்பதாகவும் அவற்றிலிருந்து அனுமதியின்றியே கள் இறக்கப்படுவதாகவும் பத்திரிகைகளில் புகார்கள் கூறப்பட்டிருக்கின்



றன. இது உண்மையாயிருக்கும்பட்சத்தில் சம்பந்தப்பட்ட கோயில் நிர்வாகிகளும், அறங்காவலர்களும் உடனே கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். கோயில் தென்னை மரங்கள் எங்கிருந்தாலும் அவற்றில் கள் இறக்குவது போன்ற காரியங்கள் நடைபெறலாகாது என்று இந்து அறநிலையத் துறையினர் கடுமையாகக் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். சமீபத்தில் கும்பாபிஷேகம் நடந்த வில்வாரண்யேசுவரர் கோயில் திருஞான சம்பந்தர் பாடல் பெற்ற திருத்தலம் ஆகும். பாடல் பெற்ற ஒரு திருத்தலத்தில் உள்ள தென்னை மரங்கள் இக்கதிக்கு ஆளாக என்ன பாவம் செய்தனவோ தெரியவில்லை.

படி அரிசி பற்றி ஓர் உண்மை

தி. மு. க. பதவிக்கு வர ஏழை மக்களுக்கு அளித்த கவர்ச்சியான வாக்குறுதிகளில் ஒன்றான படி அரிசித் திட்டத்தை ஏன் கைவிட்டது என்பது பற்றிய ஓர் உண்மையை இப்போது தி. மு. க.விலிருந்து வெளியேறியபின் திரு எம். ஜி. ஆர். பகிரங்கமாகக் கூறியிருக்கிறார்.

''ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தைத் தமிழ் நாடு முழுவதும் விஸ்தரிக்க வேண்டும்



என்று நான் கோரினேன். ஆனால் கருணாநிதி படி அரிசித் திட்டத்தைக் கைவிட்டதோடு, 'மக்கள் மறந்து விடுவார்கள். நீங்களாக அதைப் பற்றி எங்கும் நினைவூட்டிப் பேச வேண்டாம்' என்று என்னைக் கேட்டுக் கொண்டார்'' என்பது போல் பேசியுள்ள எம்.ஜி.ஆரின் சொற்களைக் கவனிக்கும்போது மக்களின் மறதியில் முதலமைச்சர் எவ்வளவு நம்பிக்கை வைத்துக் காரியங்களைச் செய்து வருகிறார் என்பது விளங்குகிறது.

அர்ச்சனையும் அமைச்சரும்

சர்ச், மசூதி போன்ற இடங்களில் வழிபடுகிறவர்களின் மொழி விஷயத்தில் நமது அரசு தலையிட விரும்பாது. ஆனால் இந்துக் கோயில்களில் இவர்களுக்கு மதிப்பும் இல்லை. தலையீடும் அதிகம். ''ஆலயங்களில் கட்டாய

மாகத் தமிழில் அர்ச்சனை நடத்த வேண்டும் என்று உத்தரவு இடப்பட்டிருந்தும் தொடர்ந்து வடமொழியிலேயே நடத்துவது சரியல்ல. அமைச்சர்கள் வரும்போதாவது தமிழில் நடத்த வேண்டும்'' என்று ஓர் அமைச்சர் பேசியுள்ளார். இதில் 'கட்டாயம்' என்ற பேச்சுக்கு இடம் ஏது? அர்ச்சனை டிக்கெட் வாங்குகிறவரின் விருப்பம்தான் முக்கியம். அதற்குக் குறுக்கே நிற்க அமைச்சருக்கு ஏது உரிமை?

சமீபத்தில் ஒரு கோயிலில் விபூதி குங்குமம் போன்ற பிரசாதங்களை எல்லாம் வேண்டாம் என்று மறுத்த அமைச்சர்கள் விலை உயர்ந்த ஜரிகை பரிவட்டம் (ரூ. 250 பெறுமானம் இருக்கலாம்) கட்டப்பட்ட போது மட்டும் மறுக்காமல் ஏற்று ஞாபகமாக அவற்றை எடுத்துக் கொண்டு போனார்களாம்.

ஆங்கிலத்தின் அவசியம்

வேலூர் 'ரோட்டரி' கூட்டத்தில் மத்திய மந்திரி மோகன் குமாரமங்கலம் ஆங்கிலத்தின் அவசியம் பற்றி வலியுறுத்திப் பேசியிருக்கிறார்.

''கல்வி, நீதி, நிர்வாகம் போன்ற துறைகளில் தாய்மொழி பயன்படுத்தப்பட வேண்டும் என்றாலும் ஆங்கிலத்தை விட்டுவிடும் அளவுக்குக் காலம் இன்னும் கனியவில்லை. விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் பிற நாடுகள் எல்லாம் அடைந்துள்ள முன்னேற்றத்தையும் புதிய புதிய ஆராய்ச்சி முறைகளையும், ஆங்கிலத்தின் உதவியின்றி இங்கு நாம் பயன்படுத்திக் கொள்ள முடியாமல் போய்விடும். முன்னேற்றம் அடைந்த பிற நாடுகளில்கூட ஒரு சர்வதேச மொழியைக் கற்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. மேற்படிப்புக்குச் செல்லும் வரை அதற்குத் தகுதியான ஒரு நிலையை அடைய ஆங்கிலத்தைக் கற்பது மிக முக்கியம். பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு வகுப்புகள் ஆங்கில அறிவை அடிப்படையாகக் கொண்டவை'' என்பதுபோல் அமைச்சர் கூறியுள்ள கருத்துக்கள் மாணவ சமூகத்துக்கும், கல்வித் துறையினருக்கும் பயன்படக் கூடியவை.

இதில் என்ன பெருமை ?


தமிழ்ப் பண்பு, பரந்த மனப்பான்மை பற்றி அடிக்கடி பேசும் தமிழக முதல்வர் கவனத்துக்கு ஒரு விஷயத்தைக் கொண்டு வர விரும்புகிறோம். 10–11–72 அன்று எம். ஜி. ஆர். நடத்திய ஊர்வலத்தின்போது அவர் அண்ணாதுரை சிலைக்கு மாலை அணிவிக்க முடியாமல் போக வேண்டும் என்றோ என்னவோ அங்கே வழக்கமாக இருக்கும் படிக்கட்டு ஏணி அகற்றப்பட்டிருந்தது. அதே தினம் காலை பத்து மணிவரைகூட அங்கே இருந்த அந்த ஏணியை எம். ஜி. ஆர். மாலை அணிவிக்கக் கூடாது என்பதற்காகவே அகற்றிவிட்டது போல் பகலில் இல்லாமல் செய்ததன் மூலம் தி.மு.க. அரசு எதைச் சாதித்துக் கொண்டதோ, தெரியவில்லை. சீப்பை ஒளித்து வைத்துவிட்டால் கல்யாணம் நின்று போய்விடுமா?

தமிழாசிரியர் உண்ணாவிரதம்

'கொண்டைத் தமிழ் — வற்றிக்கத் தமிழாசிரியரா?' என்ற கேள்வியுடன் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர் கழகத்தின் சார்பில் நேரு பிறந்த தினத்தன்று நேரு ஸ்டேடியத்தின் முன் உண்ணாவிரதம் இருந்து தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்தினார்கள் தமிழாசிரியர்கள். ஒரே வகைப் பட்டம் பெற்று ஒரே பணியினைச் செய்கிற தமிழாசிரியர்களை இரண்டு தரமாகப் பிரித்து நூறு ரூபாய்க்கு மேல் ஊதிய ஏற்றத் தாழ்வையும் வைத்திருக்கும் அரசின் பாரபட்சப் போக்கைக் கண்டிப்பதாகவும் போராட்டம் வெற்றி பெறவும் பாரபட்சம் நீங்கவும் எல்லாத் தமிழாசிரியர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் இக் கழகச் செயலாளர் வேண்டிக் கொண்டிருக்கிறார்.

திருவிசநல்லூர் திருவிழா

திருவிசநல்லூர் ஸ்ரீதர அய்யாவாளின் திருநாமமானது நாம சித்தாந்தமும் பஜனை பத்ததியும் உள்ளளவும் வையத்தில் வாழும். சிவநாம மகிமையை எடுத்தியம்பிய இம்மகானின் சிவமயமான உள்ளத்தை வெளிக் காட்டும் சம்பவம் ஒன்றுண்டு. இவரது பிதிரு சிராத்த தினத்தன்று திவசம் முடியுமுன்பே பசியால் வாடிய ஒரு ஹரிஜனுக்கு உணவிட்டார். அதனால் ஆத்திரமடைந்த ஊரார் இவர் கங்கா யாத்திரை செய்து வந்தாலொழிய இவரைச் சமூகத்தில் சேர்த்துக் கொள்ள முடியாது என்றனர். இவரோ தாம் கங்கைக்கு யாத்திரை செய்யாமல் கங்கையே தம்மைத் தேடி யாத்திரை வருமாறு செய்து விட்டார். இவர் 'கங்காஷ்டகம்' பாட, இவரது வீட்டுக் கிணற்றிலிருந்தே கங்கை குமுகுமுவெனப் பொங்கி வந்தது. இந்த அற்புதம் நிகழ்ந்தது ஒரு கார்த்திகை அமாவாசை தினத்திலாகும். அன்றிலிருந்து சுமார் இருநூறாண்டுகளாகக் கார்த்திகை அமாவாசையன்று திருவிசநல்லூரில் திருவிழா நடக்கிறது. நூற்றுக்கணக்கான பக்தர்கள் அன்று அய்யாவாள் வீட்டுக் கிணற்றில் நீராடுவர். பஜனை, இசைக் கச்சேரி, இதிகாச புராணப் பிரவசனம் எல்லாம் நடைபெறும். இவ்வருடம் கார்த்திகை அமாவாசை டிசம்பர் 5ந் தேதி நிகழுகிறது. நவம்பர் 26லிருந்தே உற்சவம் நடைபெறுகிறது. அன்பர்கள் கலந்து கொண்டும் பொருள் உதவி செய்தும் புண்ணியம் பெறவேணும். பொருள் அனுப்ப வேண்டிய முகவரி: நிர்வாகி, ஸ்ரீதர அய்யாவாள் மடம், திருவிசநல்லூர், வேப்பத்தூர் வழி, தஞ்சை மாவட்டம்.



ஸ்வாமி என்றால் என்ன?

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சிகாமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள்

ஸ்வாமி என்றால் என்ன? 'ஸ்வம்' என்கிற வார்த்தைக்கு 'உடைமை', 'சொத்து' என்று அர்த்தம். கோயிலைச் சேர்ந்த சொத்தைக் கேரளத்தில் 'தேவஸ்வம்' என்கிறார்கள் அல்லவா? உடைமைக்குச் சொந்தக்காரர் யாரோ அந்த உடையவர்தான் 'ஸ்வாமி'. ஸ்வாமி என்பதற்கு நேர் தமிழ் வார்த்தை 'உடையார்' என்பது. முன் காலத்தில் கோயில் சுவர்களில் வெட்டப்பட்ட கல்வெட்டுக்களிலெல்லாம் திருச்சிற்றம்பலமுடையார், திருவேங்கடமுடையார், திருநாகேச்சரமுடையார், கபாலீச்சரமுடையார் என்பது போலவே 'உடையார்' என்ற பெயரில் தெய்வங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

குருவும் ஸ்வாமியும் ஒன்று என்பதால் தான் வைஷ்ணவர்கள் ஸ்ரீ ராமாநுஜரை, 'உடையவர்' என்றே சொல்கிறார்கள். உங்களுக்குத் தெரியாத இன்னொரு விஷயம் சொல்கிறேன். நமது ஆதிசங்கர பகவத்பாதர்களுக்கும் ''சிக்குடையார்'' என்று பெயர் வழங்கியிருக்கிறது. கன்னடத்தில் 'சிக்க' என்றால் 'சிறிய' என்று அர்த்தம். அப்படியானால் 'பெரிய' உடையார் ஒருத்தரும் இருந்திருக்க வேண்டும். அவர் யார்? அவர்தான் 'தொட்ட உடையார்' என்று சாஸனங்களில் சொல்லப்படும் 'காஞ்சி ஏகாம்பரநாதர். காஞ்சிபுரத்தில் அவர் பெரிய உடையார்; நம் ஆசாரியாள் சிறிய உடையார்! இந்தச் சென்னைப் பட்டணத்தைச் சுற்றியுள்ள திருவள்ளூர் முதலிய மூன்று தாலுக்காக்களில் 'சிக்குடையார்' என்ற சின்ன ஆசாரியர்களுக்குக் குடிமக்கள் அரசனுக்குத் தருகிற 'ஒரு கலம் தீர்வையில் ஓர் ஆழாக்கு விதம் வர்த்தனை கொடுக்கணும்' என்று பழைய மகாராஜாக்களின் சாஸனம் இருக்கிறது. நமது இந்த மடத்துக்கு . அந்தப் பிரகாரம் இப்போதும் வருமானம் கிடைத்து வருகிறது. இது நிலத்தின்மீது ஏற்பட்ட வர்த்தனையானதால், சம்பந்தப்பட்ட நிலம் எந்த மதல்தரிடம் கை மாறி, நடுவே தீர்வை நின்று போயிருந்தாலும், பிறகு சமீபத்தில் பிரிட்டிஷ் ராஜாங்கத்திடம் தெரியப்படுத்திய போது மறுபடியும் அவர்களை மடத்துக்குத் தீர்வை செலுத்தும்படி ராஜாங்கத்தினர் உத்தரவு செய்தார்கள். அது ஒரு பக்கம் இருக்கட்டும்.

'ஸ்வாமி' என்றால் சொத்துக்கு உரிமைக்காரர் என்றேன். எந்தச் சொத்து? சகல பிரபஞ்சமும்தான். அதிலுள்ள நாமும் அவன் சொத்துத்தான். உள்ளதனைத்தும் அவன் ஒருவனுக்கே உடைமையாகும். 'எல்லாம் உன் உடைமையே' என்று தாயுமானவரும் பாடினார். நம் சொத்து, பிறர் சொத்து என்றெல்லாம் பாத்தியதை கொண்டாடுகிறோமே, உண்மையில் இந்தச் சொத்தெல்லாம்,-அவற்றுக்குப் பாத்தியதை கோரும் நாம், பிறர் எல்லாருமே—அவனுடைய சொத்துத்தான். அவன் இல்லாவிட்டால் இந்தப் பிரபஞ்சமும் இல்லை, நாமும் இல்லை. நாம் பாத்தியதை சொல்கிற சொத்துக்களும் இல்லை. நாம் வீடு, வண்டி போன்ற சில சொத்துக்களைப் புதிதாக உண்டாக்கினதாக நினைக்கிறோம்.. விஞ்ஞானிகள் புதிது புதிதாக இயந்திரங்கள் செய்கிறார்கள். ஆனால் இதற்கெல்லாம் அடிப்படையில் எந்த மூலப்பொருள்களை வைத்துக் கொண்டு செய்கிறோமோ, அவை ஸ்வாமி செய்ததுதான். நாம் அவர் சொத்தை எடுத்து வேறு ரூபத்தில் ஆக்குகிறோமே தவிர புதிதாக எதுவும் செய்யவில்லை. 'மூலப் பொருளைச் செய்' என்றால் எந்த விஞ்ஞான நிபுணராலும் அது முடியாத காரியம். ஏன், இத்தனை மெஷின்கள், குண்டுகள் செய்கிற விஞ்ஞானியால் ஒரு சின்னஞ்சிறிய இலையைச் செய்ய முடியுமோ?

எல்லாவற்றையும் செய்கிற ஒரே ஒருத்தருக்குத்தான் அதெல்லாம் சொந்தம். அதனால்தான் அவர் உடையவர்,' ஸ்வாமி என்று அழைக்கப்படுகிறார். நாமும் அவரது உடைமைகள்தான். நம் சொத்து என்று நாம் நினைத்துக் கொண்டிருப்பதை நம் இஷ்டப்படி விநியோகிக்க உரிமை பெற்றிருக்கிறோம் அல்லவா? அப்படியே ஸ்வாமியின் சொத்தாகிய நாமும் நம்மை அவன் இஷ்டப்படி நடத்தட்டும் என்று விட்டுவிட்டால் நமக்கு எந்தப் பாரமும் இல்லை; ஒரே ஆனந்தம்தான்.



அலை ஓசை

அமரர் கல்கி



15. "இன்னொருவர் இரகசியம்"

மௌனமாக உட்கார்ந்து சூர்யா படித்துக் கொண்டிருந்த அறையின் ஒரு மூலையில் மரத்தினாலான குறுகிய மச்சுப் படிகள் அமைந்திருந்தன. சூரியாவும் தாரிணியும் இருண்ட மண்டபத்திலிருந்து அந்த அறைக்குள் வந்து மச்சுப் படி ஏறி மேலே சென்றார்கள். மாடி அறையில் கிடந்த இரண்டு பழைய பிரம்பு நாற்காலிகளில் உட்கார்ந்தார்கள்.

''கல்கத்தாவுக்கு எப்போது கிளம்புவதாக உத்தேசம்?'' என்று தாரிணி கேட்டாள்.

''இன்றைக்கே புறப்பட்டாலும் புறப்படலாம். போவதற்கு முன்னால் சீதாவின் விஷயத்தைப் பற்றி முடிவு செய்ய வேண்டும். நீங்கள் டில்லியிலேயே இருக்கப் போகிறீர்களா?'' என்று சூரியா வினவினான்.

''இல்லை; நான் பம்பாய்க்குப் போகப் போகிறேன். பம்பாய் மாகாணத்தில் ஸதாரா ஜில்லாவில் ஆங்கில ஆட்சியின் அடிச்சுவடுகூட இல்லாமல் துடைத்து விட்டார்களாம். ஜனங்களின் குடியரசு சர்க்கார் நடைபெறுகிறதாம். இங்கிலீஷ் சர்க்காருக்கு ஒரு பைசாக்கூட வரிவசூல் ஆவதில்லையாம். அந்த அதிசயத்தை நேரில் போய்ப் பார்த்துவிட்டு வரும்படி எனக்கு உத்தரவு பிறந்திருக்கிறது. ஸதாரா ஜில்லாவில் நடப்பது போல் ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு ஜில்லாவிலும் நடந்தால் போதும். பிரிட்டிஷ் ஆட்சிக்கு மங்களம் பாடி விடலாம்.''

''ஸதாராவுக்கு நீங்கள் தனியாகவா போகப் போகிறீர்கள்?''

''தனியாகப் போனால் என்ன? யார் என்னை என்ன செய்து விடுவார்கள்?''

''அப்படியா நினைக்கிறீர்கள்? ஒரு சமாசாரத்தைக் கேளுங்கள். நேற்று மைதானத்தில் நாம் பேசி முடித்த பிறகு நீங்கள் முதலிலே போய்விட்டீர்கள் அல்லவா? நீங்கள் போய்ச் சிறிது நேரத்துக்கெல்லாம் மூன்று ஆசாமிகள் என்னிடம் வந்தார்கள். உங்களைப் பிடித்துக் கொடுத்தால் ஒரு லட்சம் ரூபாய் தருவதாகச் சொன்னார்கள்! முதலில் என் காதுகளை நான் நம்பவில்லை. அப்புறம் அவர்கள் உண்மையாகவே அப்படிச் சொல்வதாகத் தெரிந்து கொண்டேன்.''

''இது என்ன விந்தை? எனக்காக ஒரு லட்சம் ரூபாய் தருவதாகவா சொன்னார்கள்? அப்படிப்பட்ட பைத்தியக்காரர்கள் யார்? போலீஸ்காரர்களாய் இருக்க முடியாது. புரட்சி இயக்கத்தின் மாபெருந் தலைவருக்கே ஐயாயிரம் ரூபாய்களுக்கு மேல் அவர்கள் பரிசு தர மாட்டார்களே? ஒரு வேளை உங்களைக் 'கோட்டா' செய்வதற்காக அவ்விதம் சொல்லியிருப்பார்களோ!''

''அதெல்லாம் இல்லை. அவர்கள் உண்மையாகவே அவ்விதம் சொன்னார்கள் என்பது நிச்சயம். பிற்பாடுகூட என்னைத் தொடர்ந்து கொண்டிருந்தார்கள். ஏதோ ஒரு சுதேச சமஸ்தானத்து அரண்மனை ஆட்கள் என்று நினைக்கிறேன். யாரோ ஒரு ராஜாவோ நவாப்போ அவர்களுடைய எஜமானராயிருக்க வேண்டும்.''

தாரிணி கலகலவென்று சிரித்து விட்டு, ''நல்ல வேடிக்கை! சூரியா! ஒரு யோசனை! நம் இயக்கத்தை நடத்துவதற்குப் பணம் இல்லாமல் திண்டாடுகிறோம். இப்போது ஒரு வழி கிடைத்திருக்கிறதே? அடித்த அடியில் ஒரு லட்சம் ரூபாய் சம்பாதித்துவிடலாமே? நீங்கள் இன்று கல்கத்தா போவதை ஒத்திப் போட்டுவிட்டு எப்படியாவது அந்தப் பைத்தியக்காரர்களைத் தேடிக் கண்டுபிடியுங்கள். என்னை அவர்களிடம் ஒப்புவித்துவிட்டு ஒரு லட்சம் ரூபாய் வாங்கிக் கொண்டுவிடுங்கள்'' என்றாள்.

''இந்த வழியில் பணம் சேகரித்துப் புரட்சி நடத்திச் சுதந்திரம் பெறுவதைக் காட்டிலும் இந்தியா அடிமை

நாடாகவே இருந்துவிட்டுப் போகட்டும் !'' என்றான் சூரியா.

''எதனாலே அவ்வாறு சொல்லுகிறீர்கள்? கிடைக்கிற பணத்தை வேண்டாம் என்று சொல்லுவானேன்? அப்படியே அவர்கள் பணத்தைக் கொடுத்து விட்டு என்னைப் பிடித்துக் கொண்டு போனால் என்ன செய்து விடுவார்கள் ? நான் என்ன சிறு குழந்தையா? அல்லது என்னைக் கடித்துத் தின்றுவிடுவார்களா?''

''அப்படிக்கூடச் செய்வார்கள்தான்! ஏன் செய்யமாட்டார்கள்? தாரிணி ! இந்த உலகத்தில் மனுஷர்கள் என்ற ரூபத்தில் எத்தனை ராட்சஸர்கள் உலாவுகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாது. எனக்கும் நேற்று இராத்திரிதான் அது துல்லியமாகத் தெரிய வந்தது. சீதா அந்த ராட்சஸ ராகவனிடம் அகப்பட்டுக் கொண்டு பட்டபாட்டைப் பார்த்த பிறகுதான் தெரிந்தது!''

''அது என்ன விஷயம்? முன்னாலேயே நான் கேட்காமல் போனேனே ? நேற்று இரவு சீதாவின் வீட்டுக்குப் போயிருந்தீர்களா? சீதா என்ன சொன்னாள்? ராகவனைப்பற்றி ரொம்பப் புகார் சொல்லியிருக்க வேண்டும் என்று தெரிகிறது'' என்றாள் தாரிணி.

'' சீதா சொல்லி நான் தெரிந்து கொள்ளவில்லை. சீதா முதலில் சொன்னதையெல்லாம் நான் நம்பக்கூட வில்லை. மூளை பிசகிப் போய் உளறுகிறாள் என்றே நினைத்தேன். நேரில் என் கண்ணால் பார்த்த பிறகுதான் சீதா உண்மையில் பத்தில் ஒன்றுகூடச் சொல்லவில்லை என்று அறிந்து கொண்டேன்.''

பிறகு சூரியா சீதாவின் வீட்டுக்குத் தான் போனதிலிருந்து நடந்ததையெல்லாம் விவரமாகச் சொன்னான்.

கதையைக் கேட்டுக் கொண்டு வந்த தாரிணியின் முகத்தில் கவலையும் துயரமும் குடிகொண்டன.

''இதையெல்லாம் நீங்கள் நேரில் பார்த்ததாகச் சொல்லியிரா விட்டால் நான் நம்பவே மாட்டேன். ராகவன் இவ்வளவு மூர்க்கமான மனிதர் என்று நான் நினைக்கவேயில்லை.''

''யார்தான் நினைத்தார்கள் ? இப்படியெல்லாம் ஆகும் என்று தெரிந்திருந்தால் அவர்களுடைய கல்யாணத்தை நான் நடத்தி வைத்திருப்பேனா? சீதாவின் தகப்பனாரிடமிருந்து வந்த தந்தியை மறைத்து வைத்துக் கல்யாணம் தடைப்படாமல் செய்திருப்பேனா ?''

''பிறத்தியாருடைய காரியங்களில் தலையிடுவது எவ்வளவு பிசகு என்று இதிலிருந்து தெரிகிறது. பெண்ணின் தகப்பனார் நன்றாக யோசியாமல் அவ்விதம் தந்தி அடித்திருப்பாரா ? அதில் நீங்கள் தலையிட்டிருக்கக் கூடாது.''

''இப்போது அதைச் சொல்லி என்ன பயன்? இத்தனை நேரம் சீதா மைதானத்துக்கு வந்திருந்தாலும் வந்திருப்பாள். அவளிடம் நான் என்ன சொல்வது? என்னோடு கல்கத்தாவுக்கு அழைத்துக் கொண்டு போகட்டுமா?'' என்று கேட்டான் சூரியா.

''சீதாவின் வாழ்க்கையில் நீங்கள் தலையிட்டு ஒரு தடவை தவறு செய்தது போதாதா? மறுபடியும் அம்மாதிரி செய்ய வேண்டாம். நீங்கள் அவளைக் கல்கத்தாவுக்கு அழைத்துப் போனால் அத்துடன் அவளுடைய வாழ்க்கை முடிந்து விடும். சீதாவுக்கு ஏதாவது தைரியம் சொல்லி அவளை வீட்டில் கொண்டு போய் விட்டு விட்டு நீங்கள் போங்கள். நான் அவளைப் பார்த்துக் கொள்கிறேன். இன்று இரவே ராகவனைப் பார்த்துப் பேசுகிறேன் '' என்றாள் தாரிணி.

''இன்று ராத்திரியே ராகவனை எப்படிப் பார்ப்பீர்கள்?'' என்ற சூரியாவின் கேள்வியில் ஆவலும் கவலையும் தொனித்தன.

''அவர் போகிற பார்ட்டிக்கே நானும் போக எண்ணியிருக்கிறேன்'' என்றாள் தாரிணி.

''இது என்ன விபரீதம்! உங்கள் பெயரில் டில்லிப் போலீஸாரிடம் ஏற்கனவே புகார் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். உத்தியோகஸ்தர்களின் பார்ட்டிக்கு எப்படிப் போவீர்கள்?''

''என் பெயரில்தானே புகார் இருக்கிறது? ஆனால் அந்தப் பெயர் என்னுடையது என்று ஒருவருக்கும் தெரியாது. இன்றைக்குப் பார்ட்டி கொடுக்கிறவர் வைஸராய் நிர்வாக சபை மெம்பர். அவருடைய மனைவி எனக்கு ரொம்பச் சிநேகிதம். இன்றைக்குப் பார்ட்டிக்குப் போய்விட்டு அவர் வீட்டிலேயே இரண்டு நாட்கள் தங்கியிருக்கப் போகிறேன். அவரிடம் கவர்ன்மெண்ட் பாஸ் வாங்கிக் கொண்டுதான் பம்பாய்க்குப் பிரயாணமாவேன்.''

'' உங்களுடைய சாமர்த்தியத்தை நினைத்தாலே எனக்கு மூர்ச்சை போட்டு விடும்போல் இருக்கிறது. நானுந்தான் சிற்சில வேஷங்கள் போட்டுக் கொண்டு ஸி. ஐ. டி.க்காரர்களிடமிருந்து தப்பியிருக்கிறேன். ஆனால் நீங்கள் செய்யும் காரியங்கள் ஒரே பிரமிப்பாயிருக்கின்றன.''

''நாம் ஒருவரை ஒருவர் பாராட்டிக் கொள்வதை அப்புறம் வைத்துக்

கொள்ளலாம். இப்போது உடனே சென்று சீதாவைக் கவனியுங்கள். சீதாவின் தேக நிலைமையையும் மனநிலைமையையும் உத்தேசிக்கையில் அவள் தனியாக மைதானத்துக்கு வருவது பற்றி எனக்குப் பயமாயிருக்கிறது. இப்போது டில்லி நகரில் எங்கே பார்த்தாலும் அந்நிய சோல்ஜர்களும் சுதேசி சிப்பாய்களும்அலைந்தவண்ணம் இருக்கிறார்கள்.''

''சோல்ஜர்களும் சிப்பாய்களும் மட்டுந்தானா? சுதேச சமஸ்தானக் கழுகுகளும் வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. தாரிணி! நீங்களும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.''

''என்னை நான் பார்த்துக் கொள்வேன்; கவலை வேண்டாம். சீதாவைப் பற்றித்தான் கவலையா யிருக்கிறது. தயவுசெய்து நீங்கள் உடனே போங்கள். சீதாவைச் சந்தித்து எப்படியாவது சமாதானப்படுத்தி இன்று ராத்திரி அவள் வீட்டில் கொண்டு சேருங்கள். ராகவனுடைய குணத்தில் இன்றைய தினமிருந்தே மாறுதல் இருக்கும். அதற்கு நான் ஜவாப்தாரி.''

''அந்த மூர்க்கன் ராகவனை நீங்கள் பார்த்துப் பேசுவது என்பது எனக்குப் பிடிக்கவேயில்லை. அவன் வெறும் தூர்த்தன்!''

''எனக்கு மட்டும் ராகவனைப் பார்த்துப் பேசப் பிடிக்கிறதா? சீதாவின் நன்மைக்காக அவ்விதம் செய்யப் போகிறேன்.''

''தாரிணி! ஒரே ஒரு கேள்விக்குப் பதில் சொல்வீர்களா? சீதாவின் விஷயத்தில் நீங்கள் இவ்வளவு சிரத்தை கொண்டிருப்பதன் காரணம் என்ன?''

''அவள் புரட்சி வீரர் சூரியாவின் அத்தங்காள் என்னும் காரணம் போதாதா?''

''என்னுடைய அத்தங்காள் என்பதற்காக அப்படிப் பணிவிடை செய்து அவளுடைய உயிரைக் காப்பாற்றத் தோன்றியிராது. அவளுடைய வசை மொழிகளை யெல்லாம் பொருட்படுத்தாமல் அவளுடைய க்ஷேமத்தைக் கருதவும் தோன்றாது. வேறு ஏதோ ஒரு காரணம் இருக்க வேண்டும்.''

''உங்களுடைய ஊகம் உண்மைதான்! அதற்கு வேறொரு முக்கிய காரணம் இருக்கிறது. உங்களுக்குச் சீதாவிடம் இருக்கும் அக்கறையைக் காட்டிலும் எனக்கு அதிகம் இருக்கக் காரணம் உண்டு. ஆனால் தயவு செய்து அந்தக் காரணம்



என்னவென்று கேட்க வேண்டாம். அது இன்னொருவருடைய ரகசியம்; அவருடைய சம்மதம் இல்லாமல் நான் அதைச் சொல்லக் கூடாது'' என்றாள் தாரிணி.

''போனால் போகட்டும். சீதாவிடம் உங்களுக்கு அவ்வளவு அக்கறை இருப்பதால் பம்பாய்க்குப் போகும்போது சீதாவின் தகப்பனாரைப் பற்றி ஏதாவது தகவல் உண்டா என்று விசாரியுங்கள். அவருடைய பழைய விலாசம் தருகிறேன். சீதாவின் நிலைமையை அவரிடம் தெரிவித்துவிட்டால் நம்முடைய பொறுப்புக் குறையும்.''

''சூரியா! ஆச்சரியப்பட வேண்டாம்! சீதாவின் தகப்பனார் இருக்குமிடம் எனக்குத் தெரியும். ஆனால் அவரால் தற்சமயம் சீதாவுக்கு உதவி செய்ய முடியாது. அவருடைய தற்போதைய நிலைமையைச் சீதா அறிந்தால் சந்தோஷப்படவும் மாட்டாள்.''

சீதாவின் தகப்பனார் ஏதோ பெரிய இரிமினல் குற்றம் செய்து நீண்டகாலத் தண்டனை அடைந்து சிறையில் இருக்கவேண்டும் என்று சூரியா நினைத்துக் கொண்டிருந்தான். தாரிணியின் வார்த்தை அதை உறுதிப்படுத்துவதாக நினைத்தான். ஆனால் சட்டென்று அவனுடைய மனக் கண்ணின் முன்னால் ஒரு முகம் வந்து நின்றது. தாடி வளர்த்துக் கொண்டிருந்த முஸ்லிம் மௌல்வியின் முகம் அது.

''தாரிணி! கீழே ஒரு மௌல்விசாகிப் உட்கார்ந்து குர்ஆன் வாசித்துக் கொண்டிருக்கிறாரே? அவர் யார்? சொல்ல முடியுமா?'' என்று கேட்டான்.

''சொல்ல முடியும்; சூரியா! அந்த மௌல்வி சாகிபுதான் என்னுடைய தகப்பனார்......! தாங்கள் மூர்ச்சையடைந்து விழுவதற்குத் தலையணை மெத்தை கொண்டு வரட்டுமா?'' என்றாள் தாரிணி.

16. சீதாபஹரணம்

அடையாளம் கண்டுபிடிக்க முடியாமல் ஒரே மாதிரி குறுகலாயும் அகத்தம் நிறைந்துமிருந்த சந்துகள் வழியாகச் சூரியாவை முஸ்லிம் லீக் தொண்டர் அழைத்துச் சென்று சற்றுத் தூரத்தில் ஜும்மா மசூதி தெரியும் இடம் வந்ததும், ''அதோ! ஜும்மா மசூதி! இனிப் போய்விடுவீர் அல்லவா?'' என்றார்.

''வந்தனம்! இவ்வளவு தூரம் கூட நீங்கள் வந்திருக்க வேண்டியதில்லை'' என்று சொல்லிவிட்டுச் சூரியா மைதானத்தை நோக்கி நடந்தான். நடக்கும்போதே அவனுடைய கால்கள் தடுமாறின. டில்லி நகரமே அவனைச் சுற்றிச் சுழல்வதுபோலிருந்தது. தாரிணி ஒரு முஸ்லிம் மௌல்வியைத் தன்னுடைய தகப்பனார் என்று சொன்னது அவ்வளவு தூரம் அவனுக்கு அதிர்ச்சி உண்டு பண்ணிவிட்டது. அந்தச் செய்தியினால் அவனுடைய ஆகாசக் கோட்டைகள் பல தகர்ந்து இடிந்து அவன் தலை மீது விழுந்து கொண்டிருந்தன. ஆம்; அந்தச் செய்தி உண்மையானால் அவனுடைய வாழ்க்கையின் போக்கே மாற வேண்டியதுதான். ஒரு முஸ்லிம் பெண்ணை மணந்துகொள்ள வேண்டுமானால் தானும் ஒரு முஸ்லிம் ஆக வேண்டும். ஆயிரமாயிரம் வருஷங்களாக நிலைபெற்று உலகத்துக்கெல்லாம் வழிகாட்டும் ஜோதியாக விளங்கும் சநாதன ஹிந்து தர்மத்தைத் துறந்துவிட அவன் தயாராயில்லை.

''ஒரு வேளை பொய்யாயிருக்குமோ? நமக்குப் போக்குக் காட்டுவதற்காக அப்படிச் சொல்லியிருப்பாளோ?'' என்ற எண்ணம் தோன்றியவுடனே, இன்னொரு விதமான சிந்தனைப் போக்கில் அவன் உள்ளம் ஆழ்ந்தது. ஆகா! அந்தப் பெண்ணை எந்தவிதத்திலும் நம்புவதற்கில்லை. ஒரு பக்கத்தில் புரட்சிக்காரர்களுக்கு மத்தியில் தீவிர புரட்சிக்காரியாக விளங்குகிறாள். இன்னொரு பக்கத்தில் பெரிய பெரிய சர்க்கார் உத்தியோகஸ்தர்களுடன் சிநேகம் வைத்துக் கொண்டிருக்கிறாள். ஆங்கில நவீனங்களிலே யுத்த காலத்தில் அழகு வாய்ந்த பெண்கள் ஒற்று வேலை செய்வதைப் பற்றிப் படித்திருக்கிறோமல்லவா? அவர்கள் எந்தக் கட்சிக்காக ஒற்று வேலை செய்கிறார்கள் என்பதைக் கடைசி வரையில் கண்டுபிடிக்க முடிகிறதேயில்லை. இந்தத் தாரிணியையும் அந்த ரகத்தில் சேர்க்க வேண்டியதுதான். 'என்னைப் பிடித்துக் கொடுத்துவிட்டு ஒரு லட்சம் ரூபாய் பெற்றுக் கொள்ளுங்கள்!' என்று எவ்வளவு சர்வசகஜமாகக் கூறினாள்? வைஸ்ராய் நிர்வாக சபை அங்கத்தினர்களுடன் சாதாரணமாகப் பழகக் கூடியவள் தன்னைப் போன்ற ஏழை வாலிபனிடம் அன்பு கொண்டிருப்பதாகச் சொல்வதை எப்படி நம்புவது? சௌந்தரராகவனிடம் அவளுக்கு இருக்கும் செல்வாக்கைப் பற்றி நினைத்தாலும் பலவித சந்தேகங்களுக்கு இடம் ஏற்படுகிறது. சீதா விஷயத்தில் அவளுடைய உண்மையான மனப்பாங்குதான் என்ன? 'சீதாவின் க்ஷேமத்தில் அவள் அக்கறை கொண்



டிருப்பதாகச் சொன்னதெல்லாம் ஏதோ ஓர் அந்தரங்க நோக்கத்துடன் இருக்குமோ? அப்படியானால் அந்த நோக்கம் என்ன?

அந்தப் பேதைப் பெண் சீதாவை இவர்கள் எல்லாருமாகச் சேர்ந்து ஏறக்குறைய பைத்தியமாக அடித்துவிட்டார்கள்! தாரிணியின் வார்த்தையை நம்பி அந்த அநாதையைக் கைவிட்டு விட்டுத் தான் கல்கத்தாவுக்குப் போய் விடுவது சரியா?

இவ்விதமெல்லாம் யோசனை செய்து கொண்டே ஜும்மா மசூதியைத் தாண்டி அப்பால் வெள்ளி வீதிக்குள் சூரியா பிரவேசித்தான். டவுன் ஹாலை அடைந்ததும் அங்கே வீதி ஓரத்தில் சீதா தன்னந் தனியாக நிற்பதைக் கண்டான். விரைந்து அவளிடம் சென்று, ''சீதா! நீ இங்கே வந்து ரொம்ப நேரமாகிவிட்டதா?'' என்றான்.

''கால்மணி நேரந்தான் ஆயிற்று. ஆனாலும் சாலையில் போகிறவர்கள் என்னை உற்று உற்றுப் பார்த்துவிட்டுப் போவது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. இன்னும் ஐந்து நிமிஷங்களுக்குள் நீ வராவிட்டால் வீட்டுக்குத் திரும்பிப் போய்விடுவது என்று எண்ணிக் கொண்டிருந்தேன். நல்ல வேளையாக நீ வந்து விட்டாய்!'' என்று சொன்னாள் சீதா.

சூரியாவின் மனத்தில் அப்போது, 'ஐந்து நிமிஷங்கள் கழித்து வராமற் போனேனே!' என்று தோன்றியது. அப்படித் தாமதித்திருந்தால் சீதா திரும்பிப் போயிருப்பாள். தனக்குப் பொறுப்பு ஒன்றும் இல்லாமல் போயிருக்கும். மறுகணம் சூரியாவுக்குத் தன்னுடைய சுயநல எண்ணம் வெட்கத்தை அளித்தது. அநாதை சீதாவுக்கு யாருமே சிநேகம் இல்லை; அனுதாபத்துடன் அவளுக்கு உதவி செய்வாரும் கிடையாது. நாமும் இப்படி அவளைக் கைவிட எண்ணினால்?...

இருவரும் டவுன் ஹாலுக்குப் பின்புறமுள்ள சாலையின் வழியாகக் காந்தி மைதானத்தை நோக்கி நடந்தார்கள். முதல் நாள் தாரிணியுடன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த அதே மரத்தடிக்குச் சூரியா சீதாவை அழைத்துச் சென்றான். வழியில் அவர்கள் ஒன்றுமே பேசவில்லை. ஏனெனில் நடக்கும்போது சூரியாவின் மனம் சீதாவின் விஷயத்தில் தன்னுடைய கடமை என்ன என்பதைப் மிகத் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தது.

மரத்தடியில் சென்று உட்கார்ந்ததும் சீதா அக்கம்பக்கம் பார்த்துவிட்டு, ''அம்மாஞ்சி! நீ உடனே இந்த ஊரைவிட்டுப் போய்விடு! உன்னைப் போலீஸார் பிடிப்பதற்குத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். டெலிபோனில் உன் மாதிரி பேசி என்னிடம் விஷயம் தெரிந்து கொள்ள முயன்றவர்கள் போலீஸார்தான். இதை எப்படியாவது உன்னிடம் சொல்லிவிட்டுப் போகத்தான் நான் முக்கியமாக இங்கே வந்தேன். டெலிபோனில் சொல்வதற்கும் பயமாயிருந்தது. நடுவில் யாராவது டெலிபோனில் பேச்சை ஒட்டுக் கேட்டாலும் கேட்கக்கூடுமல்லவா? இன்றைக்கு ராத்திரியே புறப்பட்டுப் போய் விடு, சூரியா!'' என்று படபடவென்று பேசினாள்.

''அத்தங்கா! என்னைப் பற்றி உனக்கு ஏன் இவ்வளவு கவலை? போலீஸார் என்னைப் பிடித்துவிட்டால்தான் என்ன? எந்த நிமிஷமும் கைதாகிச் சிறைக்குப் போவதற்கு நான் தயாராய்த்தான் இருக்கிறேன். உன்னுடைய விஷயத்தைப் பற்றிப் பேசு, சீதா! நேற்றிரவு நான் வாசலில் போவதாகப் போக்குக் காட்டிவிட்டுத் தோட்டத்துக்குத் திரும்பி வந்து ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தேன். உன்னை ராகவன் கைநீட்டி அடித்ததைப் பார்த்தபோது எனக்கு இரத்தம் கொதித்தது. கைத் துப்பாக்கியால் சுட்டுவிடலாம் என்றுகூட எண்ணினேன். நீ உன் அகத்துக்காரர்மீது புகார் சொன்னபோது எனக்கு அவ்வளவு நம்பிக்கை உண்டாகவில்லை. ஸ்திரீகளுடைய சுபாவமே புகார் சொல்வதுதான் என்று மனத்துக்குள் நினைத்துக் கொண்டேன். ஆனால் ராகவன் உன்னை நடத்திய விதத்தைப் பார்த்த பிறகு சந்தேகமில்லாமல் போய் விட்டது. இப்பேர்ப்பட்ட ராட்சதன் உனக்குப் புருஷனாக வாய்த்தானே, நான் அதற்குக் காரணமாயிருந்தேனே என்று எண்ணி எண்ணி நேற்று இரவெல்லாம் நான் தூங்கவில்லை. 'இப்படிப்பட்ட புருஷனை விட்டுவிட்டு நீ ஓடிப் போக எண்ணினால் நான் உன் பேரில் குற்றம் சொல்ல மாட்டேன். நானே உன்னை அழைத்துப் போகத் தயாராயிருக்கிறேன். இன்றிரவு நான் கல்கத்தா புறப்படுகிறேன். என்னுடன் நீயும் வா! அமரநாத்தின் வீட்டில் உன்னை ஒப்புவித்துவிட்டுப் பிறகு நான் என் காரியத்தைப் பார்க்கிறேன். அமரநாத்தும் அவன் மனைவி சித்ராவும் எனக்காக எது வேண்டுமானாலும் செய்வார்கள். உன்னை வைத்துக் காப்பாற்றுவார்கள்......''

க்ளினிக் ஷாம்பூ பிரயோகம் செய்து தலைப்பொடுகினை ஒழியுங்கள்!

க்ளினிக் என்பது ஷாம்பூ ரகங்களில் ஒன்று மட்டுமல்ல. தலைமயிரிலும் அதன் அடியிலுள்ள சருமத்திலும் உள்ள தலைப்பொடுகினை உண்மையாகவே ஒழித்திட அது விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட ஒரு முற்றும் புதிய சாதனமாகும். சக்திவாய்ந்த நுண்மக்கொல்லியாகிய TCC• இதனுள் அடங்கியிருப்பதால், இது முதல் முறை கழுவும்போதே தலைப்பொடுகினை அழித்து விடுகிறது. தவறாது க்ளினிக் பிரயோகம் செய்வதன் மூலம், தலைப்பொடுகு பரவுவதிலிருந்து நீடித்த பாதுகாப்பைப் பெறலாம்.

தலைப்பொடுகினை மட்டுமே க்ளினிக் ஒழிக்கிறதே அன்றி தலைமயிருக்கு எந்தவித சேதமும் ஏற்படுத்துவதில்லை. மற்ற மருந்து கலக்கப்பட்ட ஷாம்பூக்களைவிட அது அதிக இதமளிக்கிறது. ஏனென்றால், அதனுள்ளேயே தலைமயிருக்குப் பாதுகாப்பளிக்கும் சாதனம் அடங்கியுள்ளது. தலைமயிர் அழகாகவும், உறுதியாகவும், பளபளப்புடனும் இருக்க உதவுகிறது க்ளினிக்.


• 0.15% 3.4.4 ட்ரைக்ளோரோ கார்பானிலைட்




க்ளினிக் பிரயோகம் செய்யும் முறை



TCC•என்னும் புதிய நுண்மக்கொல்லி உடனேயே செயல்பட்டுத் தலைப்பொடுகினை அகற்றி விடுகிறது. உபயோகத்திற்கு இடையிடையே பாதுகாப்பளிக்கிறது.



2வது முறை பெருகும் நுரையினைத் தலையிலேயே ஒரு நிமிடம் இருக்க விடுங்கள். அப்பொழுதுதான் க்ளினிக்கின் ஃபார்முலா அடிவரையிலூடுருவிச்சென்று நல்ல சக்தியுடன் செயல்படும்.



அடிவரை ஊடுருவிச் சென்று செயல்படும் இதமான திராவகமானது தலைப் பொடுகினை அழித்து தலைமயிரை அழகுடனும் உறுதியுடனும் வைக்கிறது.



வாரம் ஒரு முறையாவது க்ளினிக் தவறாது பிரயோகம் செய்யுங்கள். தலைப்பொடுகிலிருந்து நீடித்த பாதுகாப்பைப் பெறுங்கள்.


க்ளினிக் ஷாம்பூ

இந்துஸ்தான் லீவர் லிமிடெடின் தரமான தயாரிப்பு

HLC-5141 A



பரிசுத்தமான பாலினால் செய்யப்பட்டது
காட்பரிஸ் சாக்கலேட்
சுவையானது
மட்டுமல்ல...
போஷாக்கு
அளிக்கவும் வல்லது!
Cadbury's
MILK
CHOCOLATE
பரிசுத்தமான பால்,
சத்துள்ள கோகோ,
இவையுடன் சர்க்கரையின்
இனிப்பு—அதுவே
காட்பரிஸ் மில்க் சாக்கலேட்!
காட்பரிஸ்
ஒவ்வொரு சாக்கலேட்டும்
பாலின் குணங்கள் அடங்கியது!
AIYARS-C.142 TM



''பொய்க்கால் குதிரை ஆடுகிறபோது தடுக்கிக் கீழே விழுந்த எனக்கும் பொய்க்கால் குதிரை கட்டு போடுவதா?''

இவ்வளவு நேரம் அரை மனசாகக் கேட்டுக் கொண்டிருந்த சீதா இப்போது குறுக்கிட்டு, ''சூரியா! அந்த யோசனையெல்லாம் இனி வேண்டாம். நான் என்ன செய்வது என்று ஒரு முடிவுக்கு வந்து விட்டேன்!'' என்று சொன்னாள்.

''அத்தங்கா! அந்த மாதிரி முடிவு செய்ய வேண்டாம். நீ எதற்காக உயிரை விடவேண்டும்? ராகவனைப் போன்ற ஈவிரக்கமில்லாத கிராதகனுக்காகவா? என் உடம்பில் மூச்சு உள்ள வரையில் உன்னை நான் சம்ரட்சிப்பேன். இந்த உலகமெல்லாம் உனக்கு விரோதமாக இருந்தாலும் நான் உன்னுடைய கட்சியில் இருப்பேன். ஏதாவது கெட்ட பெயர் வருகிறதாயிருந்தால் அந்தக் கெட்ட பெயரை நான் உன்னுடன் பகிர்ந்து கொள்கிறேன். உயிரை விடுகிற எண்ணத்தை மட்டும் நீ விட்டு விட வேண்டும்!'' என்று சூரியா உணர்ச்சி பொங்கக் கூறினான்.

''சூரியா! உயிரை விடுவது பற்றி யார் பேசினார்கள்? உயிரை விடும் உத்தேசம், என் அகத்துக்காரரை விட்டுப் போகும் உத்தேசம் இரண்டையும் நான் கைவிட்டுவிட்டேன். அவருடைய மனம் போல் நடந்து அவருடைய திருப்தியைச் சம்பாதித்துக் கொள்வது என்று முடிவு செய்துவிட்டேன். உனக்கு ஒருவேளை வியப்பாயிருக்கும். நேற்று ராத்திரி சம்பவத்துக்குப்பிறகு இத்தகைய தீர்மானம் நான் எப்படிச் செய்தேன் என்று ஆச்சரியப்படுவாய். ஒருவேளை நம்பக் கூட மாட்டாய். ஆனாலும் நான் சொல்வது உண்மை. இன்றைக்கு மத்தியானம் ஒரு பத்திரிகையில் கஸ்தூரிபாய் காந்தியின் சரித்திரத்தை வாசித்தேன். அது தான் என் மனத்தை மாற்றிவிட்டது. கஸ்தூரிபாய் காந்தி எப்படி எல்லாம் கஷ்டப் பட்டிருக்கிறாள் தெரியுமா? எழுபதாவது வயதில் ஜெயிலுக்குப் போயிருக்கிறாள்! அவள் அல்லவா உத்தமி? நானும் என் கணவர் இஷ்டப்படி இனிமேல் நடந்து கொள்கிறது என்று தீர்மானித்திருக்கிறேன்.''

சூரியாவின் தலையிலிருந்து ஒரு பெரிய பாரம் நீங்கியதுபோலத் தோன்றியது. சீதாவின் முடிவு அவனுடைய இருதயத்துக்கு உகந்ததாயிருந்தது. ஆனால் அவனுடைய அறிவு அந்த முடிவை ஆட்சேபித்தது. சீதாவைப் பார்த்து அவன் கூறியதாவது: ''ஸ்திரீகளின் மனத்தைக் கண்டுபிடிக்கவே முடியாது என்கிறார்களே, அது வாஸ்தவமாகத்தான் இருக்கிறது. பெண்களின் சஞ்சல புத்தியைப் பற்றிப் பெரியோர்கள் சொல்லியிருப்பதிலும் தவறில்லை. இரண்டுக்கும் நீயே உதாரணமாய் இருக்கிறாய். நேற்று இரவு எப்படிப் பேசினாய்? இன்றைக்கு எப்படிப் பேசுகிறாய்? புருஷன் என்ன கொடுமை செய்தாலும் மனைவி பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்னும் கட்சியை நான் ஒப்புக் கொள்ள முடியாது. அதெல்லாம் பழைய காலம். பெண்களை அடிமைப்படுத்தப் புருஷர்கள் எழுதி வைத்த சாஸ்திரங்கள் சொல்லும் கட்டமை. 'ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமானம்' என்பது இந்தக் காலத்துத் தர்மம். கஸ்தூரிபாய் காந்தியைப் பற்றிக் கூறுகிறாயே? கஸ்தூரிபாயின் கணவர் உலகம் போற்றும் உத்தமர். மகாத்மா காந்தியோடு மற்றவர்களை இணை சொல்ல முடியுமா?''

''சூரியா! காந்திஜியின் இஷ்டத்தைப் போல் கஸ்தூரிபாய் நடந்து கொள்ள ஆரம்பித்தபோது அவர் மகாத்மா ஆகியிருந்தாரா? இல்லையே? ரொம்ப சாதாரண மனிதராகத்தானே இருந்தார்? அப்போது முதல் கஸ்தூரிபாய் கணவரைத் தெய்வம் என்று நினைத்து நடந்தபடியால்தான் காந்திஜி மகாத்மா ஆனார். பெண்களின் சுதந்திரத்தைப் பற்றியும் நான் யோசித்துப் பார்த்தேன். சூரியா! எனக்கு இவர் எல்லாவிதமான சுதந்திரமும் கொடுத்துத்தான் இருந்தார்! நான் எங்கே போனாலும் ஏன் போனாய் என்று கேட்பதில்லை. யாரோடு பேசினாலும் ஏன் பேசினாய் என்று கேட்பதில்லை. நான்தான் அவரை அப்படியெல்லாம் கேட்டு அவருடைய வாழ்க்கையை நாசமாக்கினேன். எனக்கு அவர் பூரண சுதந்திரம் கொடுத்திருந்தார். நான் அவருக்கு எந்தவிதமான சுதந்திரமும் கொடுக்க

வில்லை. யோசிக்க யோசிக்கத் தப்பெல்லாம் என் பேரில்தான் என்று உணர்கிறேன். என்னுடைய மூளை எப்படியோ கெட்டுப் போயிருந்தது. இப்போது நிச்சயமாக முடிவு செய்துவிட்டேன். இனிமேல் நீ என் மனத்தை மாற்ற முயல்வதில் பயனில்லை'' என்றாள் சீதா.

சூரியா திகைத்துப்போய்விட்டான். ''நான் உன் மனத்தை மாற்ற முயலவே இல்லை. எப்படியாவது நீ ராகவனுக்கு உகந்த மாதிரி நடந்து அவனைச் சீர்திருத்தினால் சரிதான். நீயும் ராகவனும் சந்தோஷமாக வாழ்க்கை நடத்தினால் அதைக் காட்டிலும் எனக்குச் சந்தோஷம் வேறில்லை. புறப்படு, போகலாம்! இருட்டிவிட்டது. உன்னை உன்னுடைய வீட்டில் கொண்டு போய் விட்டுவிட்டு நான் என் காரியத்தைப் பார்க்கப் போகிறேன்'' என்றான்.

''நீ என்னுடன் வரவேண்டாம். ஒரு டாக்ஸி பிடித்து என்னை அதில் ஏற்றிவிட்டால் போதும். இல்லாவிடில் நானே பிடித்துக் கொள்கிறேன்'' என்று சீதா சொன்னாள்.

''அது மாத்திரம் முடியாது, சீதா! என்னுடைய கடமையை நான் செய்தே தீருவேன். இப்போதெல்லாம் டில்லியில் எங்கே பார்த்தாலும் அபாயம் அதிகமாகி வருகிறது. ஸ்திரீகள் தனியாகப் போவது உசிதமல்ல. அதிலும் இருட்டிய பிறகு போகவே கூடாது.''

''எனக்கு என்ன அபாயம் வந்துவிடும், சூரியா! நீ எதற்காக என்னைப் பற்றி வீணில் பயப்படுகிறாய்?''

''உனக்குத் தெரியாது: நேற்று சாயங்காலம் தாரிணியும் நானும் இதே மரத்தடியில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம்.....''

''தாரிணியோடு இந்த இடத்திலேயே பேசிக் கொண்டிருந்தாயா? என்னிடம் சொல்லவே இல்லையே?'' என்று கேட்ட சீதாவின் குரலில் இத்தனை நேரம் இல்லாத ஈருஷை தொனித்தது.

''உன்னிடம் சொல்லச் சந்தர்ப்பம் ஏற்படாதபடியால் சொல்லவில்லை. அதனால் என்ன?''

''அதனால் என்ன? ஒன்றுமில்லை. நீயும் தாரிணியும் எதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தீர்கள்? இந்த மரத்தின் அடிக்கு எதற்காக வந்தீர்கள்?''

''தனியாகப் பேச வேண்டியிருந்தது; அதனால்தான் வந்தோம். இன்றைக்கு நாம் இருவரும் வரவில்லையா?''

''தனியாக நீங்கள் என்ன பேசினீர்கள் என்று கேட்டேன்.''

''பல விஷயங்களைப் பற்றியும் பேசினோம். முக்கியமாக, புரட்சி இயக்கத்தை மேலே நடத்துவது பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். உன்னைப் பற்றியும் பேசினோம்.''

''என்னைப் பற்றி என்ன பேசினீர்கள்? தாரிணியுடன் நீ என்னைப் பற்றிப் பேசுவதற்கு அவசியம் என்ன?'' என்று சீதா கேட்டாள்.

''உன்னுடைய உடல் நிலையும் உள்ளத்தின் நிலையும் சரியாயில்லாதது பற்றிப் பேசினோம். உனக்கு எப்படி உதவி செய்வது என்று யோசித்தோம்.''

''எனக்கு ஒரு உதவியும் தேவையில்லை. என்னமோ சொல்ல வந்தாயே, அதைச் சொல்! நீயும் தாரிணியும் இங்கே பேசிக் கொண்டிருந்தீர்கள். அப்புறம்?''

''தாரிணி போன பிறகு நான் உட்கார்ந்திருந்த இடத்துக்கு மூன்று ஆசாமிகள் வந்தார்கள். வந்து லோகாபிராமமாகக் கொஞ்ச நேரம் பேசினார்கள். பிறகு தங்கள் நோக்கத்தை வெளியிட்டார்கள். அதாவது தாரிணியை அவர்கள் கைப்பற்றிக் கொண்டுபோவதற்கு நான் உதவி செய்தால் எனக்கு லட்சம் ரூபாய் தருவதாகச் சொன்னார்கள்! நன்றாயிருக்கிறதல்லவா?''

''இது என்ன அநியாயம்? அப்படிப்பட்ட மனிதர்கள் யாராயிருக்கும்?'' என்றாள் சீதா.

''ஏதோ ஒரு சுதேச சமஸ்தானத்து ஆட்கள் என்று தோன்றியது. இந்த 1943ம் வருஷத்தில் வைஸ்ராய் வேவலின் ஆட்சியின் கீழ் டில்லி நிலைமை இப்படி இருக்கிறது. இருட்டிலே உன்னைத் தனியாக அனுப்ப எப்படி எனக்கு மனம் வரும்?''

''சூரியா! என் விஷயத்தில் அந்த மாதிரி கவலை உனக்கு வேண்டாம். தாரிணியைப் போன்ற அழகிக்கு லட்சம் ரூபாய் தருவதாகச் சொன்னால், எனக்கும் அப்படிச் செய்வார்களா? என் மூஞ்சி இருக்கிற இலட்சணத்துக்கு என்னை ஏலம் போட்டாலும் ஒரு லட்சம் பைசா கூட யாரும் கொடுக்க மாட்டார்கள். என் அகத்துக்காரர் தாரிணியை வேண்டாம் என்று சொல்லிவிட்டு என்னை இஷ்டப்பட்டுக் கல்யாணம் செய்து கொண்டாரே, அதை நினைத்தால் அவருக்கு எவ்வளவோ நான் நன்றியோடிருக்க வேண்டும்.''

''அப்படி நீ இருப்பதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. இன்று உன்னை உன் வீட்டுக்குக் கொண்டுபோய் விட்டு விடுகிறேன். அது என்னுடைய கடமை. இல்லாவிட்டால் என் மனம் அடித்துக் கொண்டேயிருக்கும்.''

''சூரியா! உன்னை வரவேண்டாம் என்று நான் சொல்வது உனக்காகத்

தான். எங்கள் வீட்டுக்கருகில் போலீசார் வட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். நீ அவ்விடம் வந்தால் உடனே உன்னை 'அரெஸ்டு' செய்துவிடுவது என்று காத்திருக்கிறார்கள்...!''

''அரெஸ்டைப் பற்றி எனக்குக் கொஞ்சமும் கவலையில்லை என்றுதான் முன்னமே சொன்னேனே?''

''உனக்குக் கவலையில்லை என்பது சரிதான். நீ எப்போது கைதியாவோம், ஜெயிலுக்குப் போய் நிம்மதியாயிருப்போம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறாய். ஆனால் என் அகத்துக்காரர் சர்க்கார் உத்தியோகஸ்தர் என்பதை நீ கவனித்தாயா? எங்களுடைய வீட்டில் உன்னைக் கைது செய்யும்படி நேர்ந்தால் அவருடைய நிலைமை என்ன ஆகும்? அவருடைய உத்தியோகத்துக்கு ஆபத்து வராதா?''

சூரியா ஒரு நிமிஷம் திகைத்து ஸ்தம்பித்துப் போய் விட்டான். பிறகு ''மன்னிக்க வேண்டும், சீதா! அந்த விஷயத்தை நான் எண்ணிப் பார்க்கவேயில்லை. போகட்டும். நான் உன் வீடு வரையில் வரவில்லை. வீட்டுக்குக் கொஞ்ச தூரம் வரையில் வருகிறேன். அப்புறம் நீ தனியே போய்விடு. இவ்வளவாவது செய்தால்தான் என் மனம் நிம்மதியடையும்'' என்றான் சூரியா.

''நல்லது; அப்படியே செய். உன் மனசு நிம்மதி அடையட்டும்'' என்று சீதா சம்மதித்தாள்.

இருவரும் அந்த மரத்தடியிலிருந்து புறப்பட்டார்கள். மைதானத்திலிருந்து வெள்ளி வீதிக்குப் போகும் சாலை ஜன நடமாட்டம் இல்லாமலிருந்தது. அந்தச் சாலையில் ஓரிடத்தில் ஒரு பெரிய மோட்டார் நின்று கொண்டிருந்தது. அதனுடைய பின்புறத்திலிருந்த 1111 என்னும் நம்பர் சூரியாவின் மனத்தில் பதிந்தது. வண்டிக்குள் இரண்டு பேர் இருந்தார்கள். வண்டிக்கு வெளியில் சாலை ஓரத்து வேலிக்கு அருகில் நின்று இருவர் சுருட்டுப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். வண்டியைத் தாண்டிச் சென்றபோது சூரியாவின் மனத்தில் ஒரு சந்தேகம் உதித்தது. ஆனால் அதைத் தீர்த்துக் கொள்ளும் சந்தர்ப்பம் அதுவல்ல என்பதை உணர்ந்தான். பின்னர் கொஞ்சம் வேகமாகவே நடந்தான்.

சூரியாவும் சீதாவும் வெள்ளி வீதியை அடைந்து மணிக்கூண்டுக்கு அருகில் ஒரு டாக்ஸியைப் பிடித்தார்கள். அதில் ஏறி உட்கார்ந்ததும், வண்டி புது டில்லியை நோக்கிப் போயிற்று.



நாடகங்களை ஆரம்பிக்க, எத்தனை மணிக்குத் திரையைத் தூக்கவேண்டும்? இராச் சாப்பாட்டுக்கு முன்னர் மாலை 6-30 மணிக்கா அல்லது இராச் சாப்பாட்டுக்குப் பின்னர் இரவு 9-30 மணிக்கா என்று ஒரு சர்ச்சை ஒரு சமயம் இங்கிலாந்தில் நடந்தது. இந்தச் சர்ச்சைக்குப் பெர்னாட்ஷா பின்வருமாறு தம் கருத்தைத் தெரிவித்தார்.

''தற்காலத்திய பல நாடகங்களுக்குத் திரை தூக்கப்படவே கூடாது!''

— நாடோடி

அவர்கள் ஏறிய டாக்ஸியைப் பின்னால் ஒரு மோட்டார் வண்டி தொடர்ந்து வருகிறது என்று சூரியா சந்தேகித்தான். அதை நிச்சயம் செய்ய முடியவில்லை. புதுடில்லிச் சாலையில் மோட்டார் வண்டிகள் முன்னும் பின்னும் போகாமலா இருக்கும்? வண்டி வேகமாகச் சென்றது. ஜந்தர் மந்தர் என்னும் வான சாஸ்திர ஆராய்ச்சிக் கூடத்தைக் கடந்ததும் சீதா, ''இங்கேயே வண்டியை நிறுத்தி விடலாம். எங்களுடைய வீடு இன்னும் கொஞ்ச தூரம்தான் இருக்கிறது'' என்றாள்.

''சரி'' என்று சொல்லிச் சூரியா வண்டியை நிறுத்தச் செய்தான். ''நான் இவ்விடம் இறங்கிக்கொள்ளட்டுமா? நீ வீட்டுக்குப் போய் வண்டியை அனுப்பி விடுகிறாயா?'' என்றான்.

''வேண்டாம். டாக்ஸிக் காரில் போய் இறங்கினால் வேலைக்காரர்கள் ஏதாவது நினைத்துக் கொள்வார்கள். நடந்து போனால் வழக்கம்போல் உலாவப் போய் வருவதாக எண்ணிக் கொள்வார்கள். இங்கிருந்து நடந்தே போய் விடுகிறேன். இரண்டு பர்லாங் தூரம் கூட இராது'' என்றாள் சீதா.

''சரி'' என்றான் சூரியா.

சீதா வண்டியிலிருந்து இறங்கியதும் ''இன்று ராத்திரியே கல்கத்தா போகப் போகிறாயல்லவா? கட்டாயம் போய் விடு, சூரியா!'' என்றாள்.

''போகத்தான் போகிறேன், சீதா!''

''நாம் மறுபடியும் எப்போது சந்திக்கிறோமோ என்னமோ? ஆனால் என்னிடம் உனக்குள்ள அபிமானத்தையும் நீ எனக்குச் செய்திருக்கும் உதவியையும் ஒரு நாளும் நான் மறக்க மாட்டேன்'' என்றாள் சீதா.

பத்திரிகை உலக ஜாம்பவான்!

காலஞ்சென்ற பத்திரிகை ஆசிரியர் போதன் ஜோசப் டெக்கான் ஹெரால்ட், டெய்லி டெலிகிராப், இந்துஸ்தான் டைம்ஸ், டெய்லி மெயில், இந்தியன் எக்ஸ்பிரஸ், ஸ்டார் ஆப் இந்தியா, பாம்பே க்ரானிக்கல், நேஷனல் ஹெரால்ட், நேஷனல் ஸ்டாண்டர்ட், ஸ்வராஜ்யா, இப்பொழுது பாகிஸ்தானிலிருந்து வெளிவரும் 'டான்' இவ்வளவு பத்திரிகைகளுக்கும் ஆசிரியராக இருந்திருக்கிறார்.



ஆதாரம்: டைம்ஸ் ஆப் இந்தியா
தகவல்: 'பாலி'

''நானும் உன்னை ஒரு நாளும் மறக்க முடியாது அத்தங்கா!''

சீதா சாலையில் நடந்து போய்க் கொண்டிருந்தாள். சூரியா வண்டியிலிருந்து இறங்கி அவள் போவதையே பார்த்துக் கொண்டு நின்றான்.

வெண்ணிலா துல்லியமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. பக்கத்து வீடுகளின் தோட்டங்களிலிருந்து இரவு பூக்கும் மலர்களின் சுகந்தம் வந்து கொண்டிருந்தது. காற்று மிருதுவாக வீசிற்று. பக்கத்து வீடு ஒன்றிலிருந்து ''ஸோஜா ராஜ குமாரி! ஸோஜா!'' என்னும் கிராமபோன் கீதம் கேட்டுக் கொண்டிருந்தது.

இத்தகைய சூழ்நிலையில் சீதா மேலே மேலே அந்தச் சாலையில் தன்னந் தனியாகப் போய்க் கொண்டிருந்தது ஏதோ ஒரு சினிமாப் படத்தில் வரும் காட்சியைப் போல் தோன்றியது.

''சீதாவின் வருங்கால பாக்கியம் எப்படியோ? அவளுடைய மன மாறுதலைப் பற்றி அவள் சொன்னதெல்லாம் உண்மைதானா? அல்லது நம்மிடம் அவ்விதம் சொல்லிவிட்டுச் சென்று, விஷத்தை அருந்திச் சாகப் போகிறாளா? அப்படி நேர்ந்தால் அந்தச் சாவில் நமக்குப் பொறுப்பு இல்லாமல் போகுமா?'' என்று சூரியா எண்ணமிட்டுக் கொண்டிருந்தான்.

பின்னால் தொடர்ந்து வந்துகொண்டிருந்த கார் சூரியாவைத் தாண்டிப் போயிற்று. அதனுடைய நம்பர் 1111 என்பது மறுபடியும் அவனுடைய கண்ணில் பட்டுக் கவனத்தில் பதிந்தது.

வேகமாகச் சென்ற அந்த மோட்டார் கார் சட்டென்று பிரேக் போடப் பட்டுச் சீதாவின் அருகில் நின்றது.

வண்டியிலிருந்து இரண்டு பேர் குதித்தார்கள். சீதாவைப் பலவந்தமாகக் காருக்குள் தள்ளினார்கள். தாங்களும் ஏறிக் கொண்டார்கள். கதவு சாத்தப் பட்டது. வண்டி 'கிர்' என்ற சத்தத்துடன் திரும்பிச் சூரியா நின்ற வழியாக மறுபடியும் வரத் தொடங்கியது.

இவ்வளவும் சுமார் அரை நிமிஷத்துக்குக் குறைவான நேரத்தில் நடந்து விட்டது. சூரியாவின் மூளை சற்று நேரம் செயலிழந்து போயிருந்தது. ஆனால் அந்த வண்டி அவன் நின்ற இடத்தைத் தாண்டிச் சென்றபோது மூளை வேலை செய்ய ஆரம்பித்தது. வண்டிக்குள்ளிருந்து 'அம்மாஞ்சி' என்ற தீனக் குரல் வந்தது போலத் தோன்றியது. சூரியா தன் கால் சட்டைப் பையிலேயே வைத்திருந்த கைத் துப்பாக்கியை எடுத்து அந்த வண்டியின் டயர்களை நோக்கிச் சுட்டான். டயர் மீது குண்டு படவில்லை. சட்டென்று பக்கத்தில் நின்ற டாக்ஸிக்குள் ஏறிக்கொண்டு, ''அதோ அந்த வண்டிக்குப் பின்னால் விடு. உனக்கு வேண்டியதைத் தருகிறேன்! இல்லாவிட்டால் உன்னைச் சுட்டுக் கொன்றுவிடுவேன்!'' என்றான்.

''பெட்ரோல் குறைவாக இருக்கிறது, சாகிப்!'' என்றான் வண்டியின் டிரைவர்.

''அதனால் பரவாயில்லை. பெட்ரோல் இருக்கிற வரையில் வண்டியை ஓட்டு சீக்கிரம்!'' என்றான் சூரியா.


இந்தச் சமயம் பார்த்து ஒரு போலீஸ்காரர் அங்கு வந்து, ''சுட்டது நீதானா? அந்தத் துப்பாக்கியை இப்படிக் கொடு!'' என்று கேட்டார்.

சூரியா அந்தப் போலீஸ்காரரைப் பிடித்து வேகமாக ஒரு தள்ளுத் தள்ளினான். போலீஸ்காரர் தூரப் போய் விழுந்தார். ''ஜாவ்! ஜாவ்!'' என்று சூரியா அதட்டினான். டாக்ஸி டிரைவரும் மூளை குழம்பிப் போய் வண்டியை வேகமாக விட்டுச் சென்றான்.

விழுந்த போலீஸ்காரர் எழுந்து மூன்று தடவை விசில் ஊதினார். சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு ஜீப் வண்டி வந்தது. அதில் நாலு போலீஸ்காரர்கள் இருந்தார்கள். இந்தப் போலீஸ்காரரும் அதில் ஏறிக் கொண்டு ஏதோ சொன்னார். ஜீப் வண்டி இரண்டு வண்டிகளைத் தொடர்ந்து அதிவேகமாகச் சென்றது.

(தொடரும்)


ஒவ்வொரு முறையும் 80 பைசா
மிச்சப்படுத்துங்கள், மீண்டும் பயன்படும்
பிஜ் பேக்கில் 5 முறை நிரப்பி.
BIZ
CLEANING POWDER
ஆகையால், '5-ரீ:பில்' கொண்ட பிஜ் போலிபேக் வாங்கினால், உங்களுக்கு மிச்சம் ரூ. 4!
இந்த சேமிப்பு தவிர, உங்கள் சமையல் அறைப் பாத்திரங்கள், கண்ணாடிச் சாமான்கள், தரைகள் மற்றும் பீங்கான் சாமான்கள் எப்போதையும் விட அதிக பளிச்சிடும்! விரைவில் நுரை தரும், நொடியில் சுத்தம் செய்யும், உன்னத டெடர்ஜென்ட் சக்தி படைத்த காரணத்தால், கண்ணைப் பறிக்கும் பளபளப்பைத் தருகிறது, பிஜ்.
கணக்கு சுலபமானது:
5 பிஜ் பேக்குகள் அல்லது மற்ற க்ளீனிங் பவுடர் பேக்குகளின் விலை சுமார் ரூ. 8.75
'5 ரீ:பில்' கொண்ட ஒரு பிஜ் போலிபேக்கின் விலை சுமார் ரூ. 4.75
மிச்சம் ரூ. 4
BIZ
CLEANING POWDER
WITH SUPER DETERGENT
பிஜ்
கோத்ரெஜ்
தயாரிப்பு.
CMGS-42-182 Tam


ஜாங்கோ ஜக்கு
கதை: குட்டி கிருஷ்ணன்
சித்திரம்: ராஜு
8
"ஜாக் பாக்ஸ் ஜாங்கோ" படப் பிடிப்பு ஆரம்ப மாகிறது.
ஸீன் ஸிக்ஸ் டேக் ஒன்!
ஸீன் ஸிக்ஸ் டேக் ஒன்!
ஜாங்கோ ஏறியுள்ள பஞ்சகல்யாணிக் குதிரை புயல் வேகத்தில் பாய்கிறது.
ஏன் ஸார்? ஜாங்கோ, பொம்மைக் குதிரையிலா ஏறிக்கிட்டு வருவான்?
கவலைப்படாதே! நெஞ்சு வரை தான் க்ளோஸ் அப் எடுக்கறோம். அசல் குதிரை சவாரி மாதிரியே தோன்றும்! நீ நல்லா ஆட்டு!
ஷூட்டிங்குக்கு இடைவேளை....
அடுத்த டேக்கிலே நீ வில்லனோடு மதுக்கடையில் சண்டை போடுகிறாய்!
இந்த ஸெட்டுக்கு ரொம்ப செலவாகி இருக்கு. எல்லாம் நொறுங்கப் போறதை நினைச்சால் என் இருதயமே நொறுங்கிடும் போலிருக்கு!
இதோ, பொன்மொழி வில்லனை அழைச்சுக்கிட்டு வாரானே!
ஐயோ! இவரா?
பின்னே? உன்னோடு சண்டை போட நம்பியாரா வருவார்?
இவர் கணக்குப் பார்க்க ஆரம்பித்தால் நல்லவன் வில்லனாவான், வில்லன் நல்லவனாவான்!
நம்பியார் நல்ல நடிகராயிருக்கலாம். ஆனால் எனக்கு அவர் வில்லன் தான். பிச்சுமணிதான் வேறுபட்டவன்.



ஆமா, எல்லாத்தையும் சிப்பா முடிச்சிருக்கீங்களே கண்ணு மீருக்கிறீங்க. இல்லாத போனா என் அப்பா அப்பண்ணனுக்கு டைரக்டர் நாற்காலியில் அமர என்ன அருகதை?
நாங்க படாதிபதிங்க. எங்களில் ஒருவர் டைரக்டர்னு தீர்மானிச்சோம். அந்த அருகதை போதாதா?
ரெடி ஃபார் ஆக்ஷன்!
இங்கு இப்படிச் சொல்லு: டேய் என் கிட்டே வந்தால் உன் பல்லை உதிர்த்துடுவேன்.
டேய்! என் பல்லை உதிர்த்தால் உன் கிட்டே வந்துடுவேன்!
கட்! கட்! கண்றாவி! பயப்படாதே அக்கு! இவன்தான் அசோகன், நீ தான் எம்.ஜி.ஆர்! இப்படி நினைச்சுக் கிட்டு கூராட்டே தாக்குதல் நடத்து!
அது வேணும் அப்பா! இவர் கருணாநிதி? இவர் எம்.ஜி.ஆர்! அப்படி நினைச்சுக் கட்டும். அப்பத்தான் சூடு பிடிக்கும்!
பிச்சுவாக் கத்தி பிச்சுமணி பாய்ந்தான் ஒரு பாய்ச்சல்...
இன்னிக்கு தான் (கூஜாஸ்) ஜிம்மி, பொன்மொழி, அம்மா எல்லோருக்கும் டாட்டா!
ஆனால் பிச்சுமணி பாய்ந்தது அலமாரியின் நோக்கி....
ஒரு பாட்டிலில் கூட விஸ்கியோ ஜின்னோ இல்லே! எல்லாம் காலி! என்னய்யா செட் போட்டீங்க?
உங்க அப்பன் மகனை சிங்கம்டா!
பிச்சுமணிக்கு வேறு ஞாபகம் வந்து விட்டுப் போய் விட்டான். ஷூட்டிங் ஒத்தி வைக்கப் பட்டது. அன்றிரவு...
பாண்டிச்சேரியிலே ஆப்பிரிக்காவிலிருந்து கள்ளக் கடத்தலில் வந்த வைரங்கள் தயாராயிருக்காம். மஸ்தான் சொல்லிட்டுப் போனான்.
சுங்கச் சோதனைகளை யெல்லாம் ஏமாற்றி அதைக் கொண்டு வர வழி?
பாண்டிச்சேரியிலிருந்து சென்னைக்கு ஜாம்கானாவை ஏற்றிக்கிட்டுக் குதிரை ஓடி வரும். நாமும் அதைப் படம் பிடிச்சுக்கிட்டு வந்துவோம். கூடவே வைரங்களும் வந்துடும்!

தொடரும்

இக் காலத்திய குமரிகளுக்கு உள்ள சுதந்திரமே ஒருவிதத்தில் அவர்களுடைய பேரிழப்பாகும். தாய்மார்களின் கட்டளையை மீறுவதிலுள்ள விஷமக் குறுகுறுப்பு அளிக்கும் அலாதியான ஆனந்தம் இவர்கள் உணர்ந்தறியாத ஒன்று!

பகலுணவு அருந்தி முடிந்ததும் அந்த இரு அமெரிக்க மாதர்களும் மேஜையைவிட்டு எழுந்து அந்த ஹோட்டலின் விசாலமான மாடி வராந்தாவுக்கு வந்து சேர்ந்தார்கள். இருவரும் நடுத்தர வயதைக் கடந்து, முதுமையை எட்டிப் பார்க்கும் பிராயத்தினர். ஆயின் அவர்கள் நன்கு கவனித்துப் பாதுகாக்கப்பட்ட தேகத்தை உடையவர்கள் என்பது புலப்பட்டது. வராந்தாச் சுவரில் சாய்ந்தபடி அவர்கள் தங்கள் முன்னால் பரந்து விரிந்து கிடந்த ரோம் நகரின் மாண்புமிகு காட்சிகளின் மீது பார்வையைச் செலுத்தினர். சரித்திர காலத்தில் ரோமானியர்களின் பிரதிநிதிகள்கூடிச் சட்டமியற்றியும் விவாதித்தும் நீதிவழங்கியும் வந்த 'ஃபோரம்' காட்சி தந்தது. புராதனமானதும் கம்பீரமானதுமான அரண்மனைகள் மிகுந்திருந்த 'பாலடைன்' குன்றுப் பகுதி தென்பட்டது.

அப்போது, கீழே முற்றத்துக்கு இட்டுச் சென்ற மாடிப் படிகளிலிருந்து ஒரு குதூகலக் குரல் எதிரொலித்தது: "அப்படியானால் சரி, வாயேன்! சிறுகள் இரண்டையும் ஸ்வெட்டர் பின்னிக் கொண்டிருக்க விட்டு விட்டுப் புறப்படலாம்!"

இதைக் கேட்டுவிட்டு இந்தக் குரலைப் போலவே புதுமைப் பொலிவு கொண்ட இன்னொரு குரல் கலீரென்று சிரித்தது.

தாய்மார்கள் இருவரும் சங்கடம் மிகுந்த புன்னகையுடன் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள். வயதான தங்கள் தாய்மார்கள் ஸ்வெட்டர் பின்னுவதைத் தவிர வேறு எதற்கும் லாயக்கில்லை என்ற முடிவுக்ல்லவா வந்துவிட்டார்கள், துருதுருப்பு மிக்க அந்த இளம் பெண்கள்! இரு தாய்மார்களில் சற்றுச் சிறியவளாகவும் வெளிறிய தோற்றம் கொண்டவளாயுமிருந்த ஸ்ரீமதி ஆன்ஸ்லே இலேசாக முகத்தில் செம்மை படர, படிக்கட்டில் தன்னைக் கேலி செய்தவளைக் கண்டிக்க எண்ணியவள்போல், "பார்பரா!" என்று அழைத்தாள். அதட்டல் தொனியிருந்தாலும் உரக்கக் குரல் எழும்பாததால் மகளின் காதுக்கு அது எட்டவேயில்லை!

ஸ்ரீமதி ஸ்லேட் — சற்றுப் பருமனாகவும் அழுத்தமான நிறமுடையவளாகவும் விளங்கியவள்; சிறிய உறுதியான மூக்கும் செழித்த கறுப்புப் புருவங்களும் உடையவள் — ஹாஸ்யத்தை ரசித்துச் சிரித்தாள். "நமது பெண்கள் நம்மைப் பற்றி இப்படியா நினைக்கிறார்கள்!"

ஸ்ரீமதி ஆன்ஸ்லே, 'அப்படியில்லை.....' என்பது போல் சைகை காட்டினாள். "அவர்கள் பேசுவது நம் இருவரைப் பற்றி மட்டுமல்ல; அதை ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். பொதுவாக இக்காலத்துத் தாய்மார்களைப் பற்றி இன்றைய இளம் பெண்களின் கருத்து அது. இதோ பார்..." அவள் கொஞ்சம் குற்ற உணர்ச்சியுடனேயே தன் கைப் பையைத் திறந்து பாதிப் பின்னியிருந்த ஸ்வெட்டரையும் ஊசிகளையும் வெளியே எடுத்தாள். "முன்பெல்லாம் பெண்களைக் கவனித்துக் கொள்வதே தாய்மார்களுக்கு முழு நேர வேலையாக இருக்கும். புதிய நடைமுறைகள் நமக்கு நிறைய



ஒய்வைத் தந்திருப்பது என்னவோ வாஸ்தவம்தான். சில சமயங்களில் எனக்குச் சும்மா பார்த்துப் பார்த்துப் போதைக் கழிப்பது அலுத்துச் சலித்து விடுகிறது. இதோ இந்தக் காட்சிகூடத்தான்!'' அவள் தங்கள் எதிரே தென்பட்ட ரோமாபுரியின் அற்புதக் காட்சியைச் சுட்டினாள்.

இதைக் கேட்டுவிட்டு ஸ்ரீமதி ஸ்லேட் மீண்டும் சிரித்தாள். இருவரும் அந்தக் காட்சி பற்றிய மௌனமான சிந்தனையில் ஆழ்ந்து போனார்கள்.

நீண்ட நேரத்துக்குப் பிறகு, ''இந்தப் பெண்கள் எப்போது வருவார்கள்? உனக்கு ஏதாவது தெரியுமா? எங்கிருந்து வருவார்கள் என்றாவது தெரியுமா?'' என்று கேட்டாள் ஸ்ரீமதி ஸ்லேட்.

ஸ்ரீமதி ஆன்ஸ்லே முகத்தில் செம்மை படரப் பதில் உரைத்தாள்: ''தூதராலயத்தில் சந்தித்தோமில்லையா, இத்தாலிய விமானிகளை? அவர்கள் இவர்களை டார்க்வினுவுக்குத் தங்களுடன் விமானத்தில் பறந்து வருமாறு அழைத்தார்கள் என்று நினைக்கிறேன். அங்கு மாலைப் பொழுதைக் கழித்தபின்னர் நிலவொளியில் பறந்து திரும்ப எண்ணித் தாமதிக்கலாம்.''

''நிலவொளி, நிலவொளி! எது மாறினாலும் அதன் பங்கு மட்டும் இன்னும் குறைப்வேயில்லை. நம்மைப் போலவே நம் பெண்களும் மனோராஜ்யங்களுக்கு அடிமையாவார்கள் என்று நினைக்கிறாயா?''

''இந்தப் புது யுகப் பெண்களைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியவில்லை என்ற முடி-

வுக்கு வந்து விட்டேன். பார்க்கப் போனால் நாம் இருவரும் மட்டும் இளம் வயதில் ஒருவரைப் பற்றி ஒருவர் என்னத்தைத் தெரிந்து கொண்டிருந்தோம்?''

''ஆமாம், தெரிந்து கொள்ளவில்லை என்று தான் தோன்றுகிறது'' என்றாள் ஸ்ரீமதி ஸ்லேட். அவள் தொடர்ந்து எண்ணினாள்: 'ஸ்ரீமதி ஆன்ஸ்லே பற்றி என்னிடம் யாராவது கேட்டால் இருபத்தைந்து வருஷங்களுக்குமுன் இவள் ரொம்ப அழகாயிருந்தாள் என்பேன். இன்று இவள் மகள் பார்பரா அளிக்கும் தோற்றத்தைவிட எழில்மிக்கவளாய்த்தான் இருந்தாள். பார்பரா கொஞ்சம் சூடிகையானவள். இக்காலத்தில் அது மிகவும் பயனுடையதாகக் கருதப்படுகிறது. ஆனால் அவள் தாயாரும் சரி, தகப்பனார் ஆன்ஸ்லேயும் சரி, ரொம்ப ரொம்பக் கண்ணியமும்



அடக்கமும் மிக்கவர்களாய் இருந்தார்கள். பழங்காலத்திய நியூயார்க் கனவானும் அவர் மனைவியும் என்ற தலைப்பில் எடுத்துக்காட்டாக மியூஸியத்தில் வைக்கலாம்! அப்படிப்பட்டவர்களுக்கு இத்தகைய ருசிகையான பெண் பிறந்தது வேடிக்கைதான்.'

சிறுமிகளா யிருந்தபோதே சிநேகிதிகளானவர்கள், ஸ்ரீமதி ஸ்லேடாகவும் ஸ்ரீமதி ஆன்ஸ்லேயாகவும் மாறிய பின்னும் நீண்டகாலம் எதிரெதிர் வீடுகளில் வசித்தார்கள். ஆன்ஸ்லே வீட்டு வரவேற்பு அறையின் திரைச்சீலைகள் மாற்றப்பட்டால் எதிர்வீட்டிலிருக்கும் ஸ்ரீமதி ஸ்லேடுக்குத் தெரியாமல் போகாது. ஸ்ரீமதி ஆன்ஸ்லே வாங்கிய சாமான்கள், செய்த பிரயாணங்கள், நடத்திய பிறந்த நாள், திருமண நாள் கொண்டாட்டங்கள், அவர்கள் வீட்டில் யாருக்காவது உடல் நலம் குன்றி டாக்டர் வந்து சேர நேர்ந்த தருணங்கள் எல்லாம் ஸ்ரீமதி ஸ்லேடுக்குத் தெரியும். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ரொம்ப ரொம்பக் கண்ணியமான கனவானாகவும் சீமாட்டியாகவும் அத்தம்பதி நடந்து கொண்டனர். நாளடைவில் இந்தக் கச்சிதம் — கன கச்சிதம் — ஸ்ரீமதி ஸ்லேடுக்கு அலுத்துக்கூடப் போய்விட்டது. ஷேர் மார்க்கெட்டில் திருவாளர் ஸ்லேடுக்கு அதிர்ஷ்டம் அடித்து, அவர்கள் நகரின் இன்னும் கொஞ்சம் சொகுசான பகுதிக்கு இடம் மாறும் வரையில் ஸ்ரீமதி ஸ்லேடுக்கு இந்த அலுப்பு நீடித்தது.

இதற்குச் சில வருஷங்களுக்குப்பின் இருவரும் தங்கள் கணவன்மார்களைச் சில மாதங்கள் இடைவெளியிலேயே இழக்க நேர்ந்தது. ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறிக்கொண்டனர். துக்கத்தினிடையே அவர்களுடைய நட்பு புதுப்பிக்கப்பட்டது.

அப்புறம், மீண்டும் ஓர் இடைவெளிக்குப் பிறகு இப்போது அவர்கள் ரோம் நகரில் ஒருவரை ஒருவர் யதேச்சையாக ஒரே ஹோட்டலில் சந்தித்திருக்கின்றனர். இருவருக்கும் ஏறத்தாழ ஒரே வயதில் பெண்கள். இதுபோன்ற இன்னும் சில ஒற்றுமைகள் அவர்களை மீண்டும் இணைசேர்த்தன. ஹாஸ்யங்களை உதிர்த்துச் சிரித்துப் பேசினர்: ''பழங்காலத்தில் பெண்களைக் கட்டிக் காக்க அவர்களுக்குச் சமதையான சுருசுருப்புடன் தாய்மார்கள் இயங்க வேண்டியிருந்தது. அது ரொம்பச் சிரமமான காரியமா யிருந்ததென்றால் இன்று அவ்வாறு நடந்து கொள்ளாதிருப்பது அலுப்புத்தட்டுவதா யிருக்கிறது'' என்பது போன்ற பேச்சுக்கள்.

திடீரென்று மாதாகோயில்களின் மணியோசைகள் டிங்டாங்கென்று சூழலை நிரப்பின. ரோம் நகருக்கு ஒலிக் கூரை வேய்ந்தாற்போல் அவ்வப்போது இந்த ஒலி அங்கு எழும்.

'' அடேடே ! அதற்குள் மணி ஐந்தாகிவிட்டதே !'' என்றாள் ஸ்ரீமதி ஸ்லேட் கைக் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு.

''தூதராலயத்தில் ஐந்து மணிக்கு பிரிட்ஜ் ஆட்டம் போடுகிறார்கள்'' என்றாள் ஸ்ரீமதி ஆன்ஸ்லே கேள்வி தொனிக்கும் குரலில்.

நீண்ட நேரம் ஸ்ரீமதி ஸ்லேட் பதிலளிக்கவில்லை. பின்னர், ''சீட்டாட்டம் என்று சொல்கிறாய்? உனக்குப் போக வேண்டுமா?'' என்றாள் அரைமனதுடன்.

ஸ்ரீமதி ஆன்ஸ்லே அவசரமாய்ப் பதிலிறுத்தாள்: '' எனக்கு அதில் கொஞ்சமும் அக்கறையில்லை. இங்கே எவ்வளவு அழகாயிருக்கிறது காட்சி ! நீ கூறியது போல் பழைய நினைவுகளை ஏற்படுத்துகிறது.'' அவள் நாற்காலியில் நன்கு சாய்ந்துகொண்டு ஒருவித பரபரப்புடன் ஸ்வெட்டர் பின்னும் காரியத்தைத் தொடர்ந்தாள்.

ஓரக் கண்ணால் இதைக் கவனித்த ஸ்ரீமதி ஸ்லேட் மெல்லப் பேசலுற்றாள்: '' நான் என்ன நினைத்துக் கொண்டிருந்தேன், தெரியுமா ? ஒவ்வொரு தலைமுறையிலும் ரோம் நகருக்கு வருகிற உல்லாசப் பயணிகளின் நோக்கில் எவ்வளவு வித்தியாசம் என்றுதான் ! நமது பாட்டிகளுக்குத் தம் பெண்களுக்கு ரோம் ஜுரம் வந்துவிடக் கூடாதே என்ற கவலை. நம் தாய்மார்களுக்கு இந்தச் சூழல் நம் மனத்தை எப்படியெல்லாம் பாதிக்குமோ என்ற கவலை. நமது மனோராஜ்யங்கள் ஆபத்தை விளைவிக்கும் என்று அஞ்சி எப்படி நம்மைப் பொத்திப் பொத்திப் பாதுகாத்தார்கள் ! ஆனால் நமது குமாரிகளுக்கோ நகரின் பிரதான சாலையைக் கடக்கும்போது ஏற்படக்கூடிய ஆபத்தைத் தவிர வேறெந்த ஆபத்தும் இங்கு இருப்பதாகத் தோன்றவில்லை. பார்க்கப் போனால் அவர்களுக்கு உள்ள இந்தச் சுதந்திரமே ஒருவிதத்தில் அவர்களுடைய பேரிழப்பாகும். இதை அவர்கள் உணரவில்லை.''

மாலை நேர மஞ்சள் வெய்யில் மங்கிக் கொண்டு வந்தது. ஸ்ரீமதி ஆன்ஸ்லே தான் பின்னிக் கொண்டிருந்த ஸ்வெட்டரைத் தன் கண்களுக்கு இன்னும் சற்று அருகே எடுத்துச் சென்றாள். '' ஆமாம் ! நம்மை எவ்வளவு சிரமப்பட்டுக் கண்காணித்தார்கள்!'' என்றாள்.

ஸ்ரீமதி ஸ்லேட் தொடர்ந்தாள்: ''நான் எப்போதும் நினைப்பதுண்டு. ஒப்பு நோக்குகையில் நமது பாட்டிமார்களின் பணியைவிட நமது தாய்மார்களின் பொறுப்பு கடினமாக இருந்ததென்று. ரோம் ஜுரம் நிலவிய காலத்தில் அபாயம் மிக்க நேரத்தில் வெளியே போகக் கூடாதென்று தடை விதித்துப் பெண்களை உள்ளே அடைத்துக் கொள்வது சுலபமாய்த்தான் இருந்திருக்க வேண்டும். ஆனால் நீயும் நானும் குமரிகளாயிருந்த காலத்தில் ரோம் நகரின் எழிலெல்லாம் நமக்கு ஆசை காட்டி அழைக்க, சூரியாஸ்தமனத்துக்குப் பிறகு வெளியே சென்றால் ஜலதோஷம் பிடித்துக் கொள்வதைத் தவிர வேறு பிரமாதமாக ஏதும் உடம்புக்கு வந்துவிடாது என்ற தைரியமும் சேர்ந்து கொள்ள, இத்தனைக்கிடையில் நம்மை வெளியே போக விடாமல் கட்டிக் காப்பதென்பது நமது தாய்மார்களுக்கு ரொம்பக் கடினமான காரியமாகத்தானிருந்தது. இல்லையா ?''

அவள் ஸ்ரீமதி ஆன்ஸ்லேயைப் பார்த்தாள். ஸ்வெட்டர் பின்னுவதில் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டிய ஒரு நளினமான கட்டத்தை அடைந்திருந்தாள்


சுட்ட புண்கள்! வெட்டுக் காயங்கள்!
விரைவில் இட்டுப் பாருங்கள் பர்னல்

குளுமையுடன் இதமளிக்கும் நிவாரணி





பர்னல் பட்டவுடனே சட்டென ஆற்றும்



ஆற்றும் போதே இதம்



வீடு என்றால் விபத்துக்கள் நேரத்தான் செய்யும். அடிக்கடி குழந்தைக்கு அடிக்கடி அடிபடுவது சகஜம். சமையலறையிலோ சுத்தநோத்திரும் கொதி எண்ணெய் தெறிக்கலாம்; காய்கறி நறுக்கும்போது விரலிலே பட்டு விடலாம். எனவே எப்போதும் கையகம் இருக்கட்டும் பர்னல்! குளுமையுடன் இதமளிக்கும் பர்னல். தீப்புண், வெட்டு, சிராய்ப்பு, கட்டி மற்றும் காயங்களை ஆற்றும் பலபயன் நிவாரணி. இட்டவுடன் இதமளித்து ஆற்றுவது பர்னல்.

பர்னல் 40 ஆண்டுகளுக்கும் மேலாக கணக்கற்ற இல்லங்களில் காயமாற்றிவரும் நம்பகமான நிவாரணி




ASP/B/B-15 TM

சாதாரண காப்பிகளுக்கு எதிரான புரட்சியில் சேருங்கள்!

வற்புறுத்தி வாங்குங்கள் ஒரு ஸ்பெஷல் காப்பி

விசேஷ செறிவு:
விசேஷ நிறம்:
விசேஷ பாக்கிங்:

விலை
ரூ. 2.87
வரிகள் தனி.



புதியது!
'அதி-ஸ்ட்ராங்கான'

ரிக்கரி®
இன்ஸ்டன்ட்

இது விசேஷமானது!
நெஸ்கஃபே தயாரிப்பாளர்கள் அளிப்பது

ACIL-R-625 (3) TAM

ஸ்ரீமதி ஆன்ஸ்லே. " ஒன், டூ, த்ரீ—ஸ்லிப் டு" என்று அவள் வாய் முணுமுணுத்தது. பின்னர் கூறினாள்: "ஆமாம், அவர்களுக்குக் கஷ்டமாகத்தான் இருந்திருக்கும்."

ஸ்ரீமதி ஸ்லேட் அவளைக் கூர்ந்து பார்த்தாள். 'மனோரம்மியமான இந்தச் சூழலுக்கும் சுவாரசியமான இந்தப் பேச்சுக்கும் இடையில் இவளால் எப்படி ஸ்வெட்டர் பின்னிக் கொண்டு உட்கார்ந்திருக்க முடிகிறது? ஆயின் இவள் என்றைக்குமே இப்படித்தானே இருந்தாள் ?'

ஸ்ரீமதி ஸ்லேட் நாற்காலியில் பின்னுக்குச் சாய்ந்து திடுமெனச் சிரித்தாள். திடுக்கிட்டவளாக, பின்னிக் கொண்டிருந்த ஸ்வெட்டரை நழுவவிட்ட ஸ்ரீமதி ஆன்ஸ்லே, " என்ன?" என்று கேட்டாள்.

" ஒன்றுமில்லை, சும்மா யோசித்துக் கொண்டிருந்தேன், உன் பெண் பார்பரா எப்படித் தான் நினைத்ததை யெல்லாம் சுலபமாய்ச் சாதித்துக் கொள்கிறாள் என்று. இப்போது அவளை விமானத்தில் அழைத்துப் போயிருக்கிறானே அவன், ரோம் நகரில் திருமணத்துக்குத் தயாராயுள்ள மிகச் சிறந்த இளைஞர்களுள் ஒருவன்..... என்ன ஒன்றுமே தெரியாதவள் போல் பார்க்கிறாய்? அவன் அப்படிப்பட்ட ஒருவன்தான் என்பது உனக்கும் நன்றாகத் தெரியும்! ஆனால் எனக்கு என்ன ஆச்சரியமாயிருக்கிறது என்றால் அடக்கமாகவும் பதவிசாகவும் நடந்து கொள்வதில் எல்லோருக்கும் எடுத்துக்காட்டாக விளங்கிய ஆன்ஸ்லேக்கும் உனக்கும் பார்பராவைப் போன்ற உத்வேகத்துடன் கூடிய ஒரு பெண் எப்படிப் பிறந்தாள் என்பது தான் !" ஸ்ரீமதி ஸ்லேட் மீண்டும் சிரித்தாள் சிறிது முரட்டுத்தனமாக.

ஸ்ரீமதி ஆன்ஸ்லேயின் கரங்கள் செயலற்றுவிட்டன. தன் காலடியில் சரித்திரக் காலத்திய மகோன்னதங்களும் அதிதீவிரமான மனமாச்சர்யங்களும் பாழ்பட்ட நிலையில் கிடப்பதைக் கண்டாள். ஆயினும் அந்தச் சிறிய உருவத்தின் முகத்தில் கொஞ்சமும் உணர்ச்சியில்லை.

ஸ்ரீமதி ஸ்லேட், 'இவளை வெறுக்காமல் இருப்பதற்கு நான் மீண்டும் ஒரு முறை பிரயத்தனப்பட வேண்டும்' என்று நினைத்துக் கொண்டாள். ஆயின் உரக்க அவள் கூறுவாள்: "இங்கிருந்து ஃபோரம் அளிக்கும் தோற்றத்தைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு நீ சொன்ன கதை நினைவுக்கு வருகிறது. பொல்லாதவளான ஒரு சித்திப் பாட்டியைப் பற்றிய கதை."

"ஆமாம்! அவள் தன்னுடைய தங்கையை சூரியாஸ்தமனத்துக்குப் பிறகு ஃபோரத்துக்கு அனுப்பி வைத்ததாகக் கருதுகிறார்கள். இரவில் மலரும் ஒரு பூவைக் கொண்டு வரச் சொல்லி அனுப்பினாளாம். அபூர்வ மலர்களைக் காய வைத்துச் சேகரிப்பது நம் பாட்டிமார்களின் பொழுதுபோக்காக இருந்ததே!"

ஸ்ரீமதி ஸ்லேட் தலையாட்டினாள். "ஆனால் அவள் தன் தங்கையை அனுப்பியதற்கு உண்மைக் காரணம் இருவரும் ஒரே வாலிபனைக் காதலித்தார்கள் என்பதுதான்."

"ஆமாம். அதுதான் பரம்பரைக் கதை. பல்லாண்டுகளுக்குப் பிறகு சித்திப் பாட்டி

ஓடுவார் ஓனஸிஸ்!



சீனாவுக்குச் சென்ற அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் மா சே துங்கிடம் "ஒரு பாவி கென்னடியைச் சுட்டான். அதற்குப் பதில் அவன் குருஷேவைச் சுட்டிருந்தால் என்ன விளைவு ஏற்பட்டிருக்கும்?" என்று கேட்டார்.

"நிச்சயமாக ஓனஸிஸ் ஸ்ரீமதி குருஷேவை மணந்து கொண்டிருக்க மாட்டார்" என்றாராம் சீன ஜனாதிபதி மா சே துங்.

தன் குற்றத்தைத் தானாகவே முன் வந்து ஒப்புக் கொண்டாளாம். அது எப்படியானாலும் பாவம், அவள் தங்கை ரோம் ஜுரம் கண்டு செத்துப் போனாள்."

"நீயும் நானும் குமரிகளாக விளங்கிய போது ஒரு முறை குளிர் காலத்தில் இங்கு வந்திருந்தோம். என் திருமணம் நிச்சயமாகியிருந்த தருணம் அது. அப்போது இந்தக் கதையைக் கூறி என்னைப் பயமுறுத்தி விட்டாய் !"

" நிஜமாகவா? நீ சுலபமாகப் பயந்து விடக் கூடியவள் என்று நான் எப்போதுமே நினைத்ததில்லை."

" சாதாரணமாகப் பயப்பட மாட்டேன். ஆனால் அந்தத் தருணத்தில் பயப்படத்தான் செய்தேன். நான் அப்போது ரொம்ப சந்தோஷமாக இருந்ததால் சுலபத்தில் பயந்து விட்டேன். உனக்குப் புரிகிறதா ?"

"ம்..." ஸ்ரீமதி ஆன்ஸ்லே தடுமாறினாள்.

"அதனாலேயே அந்தக் கதை என் மனத்தில் நன்றாகப் பதிந்துவிட்டது போலும். நான் அன்று எண்ணினேன்: "இப்போதெல்லாம் ரோம் ஜுரம் என்பது கிடையாதுதான். ஆயினும் ஃபோரம் பகுதியில் சூரியாஸ்தமனத்துக்குப் பிறகு அசாத்தியக் குளிர். அதைவிட அதிகமான குளிருடனும் ஈரப் பசையுடனும் கொலிஸீயம் இருக்கும்."

* "கொலிஸீயமா ?"

"ஆமாம், இரவு கேட்டையெல்லாம் பூட்டியான பிறகு அதனுள் புகுவது எளிதல்ல ; ஆயினும் அந்த நாட்களில் அதையும் சாதித்

* ஆதி காலத்தில் ரோமானியர்கள் வீர விளையாட்டுகளில் ஈடுபட்ட வட்ட வடிவமான திறந்த வெளி அரங்கு. 'ஸ்டேடியம்' போன்றது. சிதிலமடைந்த நிலையில் அதனை இன்றும் ரோமில் காணலாம்.

தார்கள் — அடிக்கடி. காதலர்கள், வேறு எங்கும் சந்திக்க முடியாத காதலர்கள் அங்கு சந்தித்தார்கள். உனக்குத்தெரிந்திருக்குமே?''

'' அப்படியா ? எனக்கு நினைவில்லை.''

''நினைவில்லையா? ஒரு நாள் மாலை இருட்டினவுடன் சிதிலமடைந்த சில இடங்களைப் பார்க்கவென்று நீ சென்று வரப் போக உனக்கு ஜலதோஷம், தொண்டைக்கட்டு, ஜுரம் நடுக்கம் எல்லாம் ஏற்பட்டனவே நினைவில்லை ? சந்திரோதயம் ஆவதை நீ பார்க்கச் சென்று ஜுரம் வரவழைத்துக் கொண்டதாக எல்லோரும் பேசிக் கொண்டார்கள்.''

''இருக்கலாம். ரொம்ப நாட்களுக்குமுன் நடந்தது. அது இப்போது உனக்கு ஞாபகம் வருவானேன் ?''

''ஏனென்றால் என்னால் இனிமேல் தாங்க முடியாது, அதனால்தான் !'' ஸ்ரீமதி ஸ்லேட் வெடித்தாள்.

ஸ்ரீமதி ஆன்ஸ்லே தலையை விருட்டென்று உயர்த்தினாள். ''தாங்க முடியாதா? எதை?'' அவள் கண்கள் அகன்றும் மங்கியும் காணப்பட்டன.

''நீ எதற்காக அன்று இரவு வெளியே போனாய் என்பது எனக்குத் தெரியும் என்பதை நீ இன்னும் உணராதிருக்கிறாயே, அதைத்தான் என்னால் தாங்க முடியவில்லை!''

'' எதற்காக நான் போனேன் ?''

''நான் அறிந்து விடுவதாக நீ நினைக்கிறாய் இல்லையா ? ஆனால் எனக்குத் தெரியும். எனக்கு யாருடன் கல்யாணம் நிச்சயமாகி இருந்ததோ அவரை நீ பார்க்கப் போனாய் ! உன்னை அங்கு போகச் செய்த கடிதத்தின் ஒவ்வொரு வார்த்தையையும் என்னால் இப்போது திருப்பிச் சொல்ல முடியும்!''

ஸ்ரீமதி ஸ்லேட் பேசிக் கொண்டிருக்கையில் ஸ்ரீமதி ஆன்ஸ்லே தடுமாறியபடி எழுந்து நின்று விட்டிருந்தாள். அவள் கைப்பை, கையுறைகள், அவள் பின்னிக் கொண்டிருந்த ஸ்வெட்டர் எல்லாம் பீதியுற்ற குவியலாகத் தரையில் கிடந்தன. ஸ்ரீமதி ஸ்லேடைப் பேய் பிசாசைப் பார்ப்பதுபோல் நோக்கினாள்.

''இல்லை.... இல்லை.... வேண்டாம் !'' அவள் குமுறினாள்.

'' ஏன் வேண்டாம் ? என்னை நம்பாவிட்டால் கூறுகிறேன், கேள்! 'என் ஒரே கண்மணி ! இந்த நிலை இப்படியே நீடிக்க முடியாது. உன்னைத் தனிமையில் எனக்குப் பார்த்தாக வேண்டும். இருட்டிய உடனே கொலிஸியத்துக்கு வா. உன்னை உள்ளே அனுமதிக்க அங்கு யாராவது இருப்பார்கள். நீ யாருக்கெல்லாம் பயப்படுகிறாயோ அவர்களில் யாரும் சந்தேகிக்க மாட்டார்கள்!' — கடிதம் கூறியது என்ன என்பதை நீ மறந்து விட்டாயோ, ஒரு வேளை?''

ஸ்ரீமதி ஆன்ஸ்லே இந்தச் சவாலை அசாதாரண நிதானத்துடன் ஏற்றாள். நாற்காலியைப் பற்றித் தன்னை ஒருநிலைப்படுத்திக் கொண்டாள். தன் தோழியைப் பார்த்துச் சொன்னாள்: ''இல்லை, எனக்கும் அந்தக் கடிதம் மனப்பாடம்தான்.''

''கையெழுத்து? டெல்ஃபின் ஸ்லேட் என்பதைக் குறிக்க 'டி. எஸ்.' என்ற இரு எழுத்துக்கள்தாம். நான் கூறுவது சரியா? இந்தக் கடிதம்தானே உன்னை அன்று மாலை இருட்டியதும் வெளியே கிளம்பச் செய்தது?''

உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொண்ட ஸ்ரீமதி ஆன்ஸ்லே முகமூடி தரித்தது போல் காணப்பட்டாள். ''உனக்கு எப்படித் தெரியும் என்று எனக்குப் புரியவில்லை. அந்தக் கடிதத்தை நான் உடனே எரித்து விட்டேனே?''

''நீ ரொம்ப முன்ஜாக்கிரதையாகக் காரியம் செய்பவளாயிற்றே! எரிக்காமலிருப்பாயா?'' — பரிகாசப் புன்னகை வெளிப்படையாகவே தெரிந்தது இப்போது. ''கடிதத்தை நீ எரித்து விட்டிருக்கையில் அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பது எனக்கு எப்படித் தெரியும் என்று நீ ஆச்சரியப்படுகிறாய், இல்லையா?''

பதிலுக்குக் காத்திருந்தாள் ஸ்ரீமதி ஸ்லேட். ஸ்ரீமதி ஆன்ஸ்லே பேசவில்லை.

''நானேதான் அந்தக் கடிதத்தை எழுதினேன்! அதனால்தான் அதில் என்ன எழுதியிருந்தது என்பது எனக்குத் தெரியும்!''

''நீ எழுதினாயா?''

''ஆமாம்!''

மாலை நேர இறுதிப் பொன்னொளியில் இரு மாதர்களும் ஒருவரை யொருவர் ஒரு நிமிஷம் வெறித்துப் பார்த்துக் கொண்டார்கள்.

ஸ்ரீமதி ஆன்ஸ்லே நாற்காலியில் மீண்டும் விழுந்தாள்.

'ஓ' என்று முணுமுணுப்பாகக் கூறி முகத்தை இரு கரங்களாலும் மூடிக்கொண்டாள்.

மறுபடியும் கரங்கள் தாழ்ந்தபோது முகத்தில் கண்ணீர்க் கோடுகள் தெரிந்தன. ''அவரிடமிருந்து எனக்கு வந்த ஒரே ஒரு கடிதம் அதுதான்....''

''அதையும் நான் எழுதினேன்; ஆம்! நான் தான் எழுதினேன்! ஆனால் என்னைத்தான் அவர் திருமணம் செய்து கொள்வதாய் நிச்சயமாகியிருந்தது. அது உனக்கு அன்று நினைவிருந்ததா?''

''நான் சாக்குப் போக்குச் சொல்ல முயலவில்லை; எனக்கு அவ்விஷயம் நினைவிருக்கத் தான் செய்தது....''

''அவ்வாறிருந்தும் நீ போனாய்?''

''அவ்வாறிருந்தும் நான் போனேன்!''

ஸ்ரீமதி ஸ்லேட் தன் அருகில் குனிந்தபடியிருந்த சிறிய உருவத்தைக் கீழ் நோக்கிப் பார்த்தபடி நின்றாள்.

''உனக்குப் புரிகிறதா? நான் கண்டுபிடித்து விட்டேன். அதனால் உன்னை நான் வெறுத்தேன், வெறுத்தேன்! உனக்கு டெல்ஃபின் மீது காதல் என்று தெரிந்து கொண்டு விட்டேன். உடனே பயந்தேன். உன்னைப் பார்த்து, நாஸுக்கான, அமைதியான உன் நடத்தையைப் பார்த்து, இனிமையான தோற்றத்தைப் பார்த்துப் பயந்தேன். என் காதல் பாதையில் நீ குறுக்கிடாதபடி உன்னை ஒதுக்கிவிட வேண்டும் என எண்ணினேன். நீ ரோம் ஜுரம் வந்து இறந்துபோக வேண்டும் என்று நான் கனைப்போது கூட நினைக்கவில்லை. சில வாரங்களுக்கேனும்—அவர் என்னைத் தவிர வேறு யாரையும் லட்சியம் பண்ண மாட்டார் என்பது எனக்கு உறுதிப்படும்வரையில் — உன் இடையூறு இல்லாமல் இருக்க வேண்டும் என்று எண்ணினேன்;

அவ்வளவுதான். அடக்க முடியாத கோபத்தில் அந்தக் கடிதத்தை எழுதினேன். இதையெல்லாம் எதற்காக உன்னிடம் இப்போது சொல்லிக்கொண்டிருக்கிறேனோ, தெரியவில்லை.''

''நீ என்னை எப்போதுமே வெறுத்து வந்திருக்கிறாய்; இப்போதும் வெறுக்கிறாய். அதனால்தான் சொல்கிறாய்.''

''இருக்கலாம்; ஒருவேளை ஒரு சுமையாக என் மனத்தில் இருந்ததை இறக்கிவிட வேண்டும் என்பதாலும் நான் இப்போது இதை வெளியிட்டிருக்கலாம்.'' அவள் பேச்சைச் சற்று நிறுத்திவிட்டு மீண்டும் தொடர்ந்தாள்: ''கடிதத்தை நீ அழித்து விட்டதில் எனக்குச் சந்தோஷமே.''

ஸ்ரீமதி ஆன்ஸ்லே மௌனமானாள். குனிந்து அவளைப் பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீமதி ஸ்லேட் சற்று நேரத்துக்குப் பின், ''என்னை ஓர் அரக்கி என்று நீ நினைக்கிறாய், இல்லையா?'' என்று கேட்டாள்.

''எனக்கு என்ன நினைப்பதென்றே தெரியவில்லை... அவரிடமிருந்து எனக்கு வந்த ஒரே கடிதம் அதுதான். அதையும் அவர் எழுதவில்லை என்கிறாய்!''

''ஆ! அவரிடம் இன்னமும் நீ அக்கறை கொண்டிருக்கிறாய்!''

''அந்த ஒரு நினைவைப் போற்றுவதில் அக்கறை கொண்டிருக்கிறேன்.''

அதிர்ச்சியால் தாக்குண்டு குறுகிக் கிடந்த ஸ்ரீமதி ஆன்ஸ்லேயை ஸ்ரீமதி ஸ்லேட் பார்த்தாள். ஸ்ரீமதி ஆன்ஸ்லே எழுந்திருந்தால் தூசிக் குவியலைச் சிதற அடிப்பது போல் காற்று அவளைத் தூக்கி அடித்து விடுமென்று தோன்றியது.

இதைப் பார்க்க, ஸ்ரீமதி ஸ்லேடின் பொறாமை மீண்டும் குதித்தெழுந்தது. 'இத்தனை ஆண்டுகளாக இவள் அந்தக் கடிதத்தையே எண்ணிக் கொண்டு வாழ்ந்திருக்கிறாள்! அதன் சாம்பலையே இவ்வளவு தூரம் போற்றி, நினைவில் பாதுகாத்து வைப்பதென்றால் இவள் அவரை எவ்வளவு தூரம் காதலித்திருக்க வேண்டும்! தன் தோழி யாரைக் கல்யாணம் செய்து கொள்ளவிருந்தாளோ அந்த மனிதனின் கடிதம்! — ஆ! இவளல்லவா அரக்கி!'

''அவரை என்னிடமிருந்து பிரித்துக் கொண்டு போய்விட ரொம்பத்தான் பிரயத்தனப்பட்டாய் இல்லையா? ஆனால் நீ தோல்வியுற்றாய்! அவரை நான் என்னிடமே இருத்திக் கொள்வதில் வெற்றி அடைந்தேன்! அவ்வளவுதான்.''

''ஆமாம்; அவ்வளவுதான் விஷயம்.''

''இதையெல்லாம் உன்னிடம் சொல்லியிருக்கவே வேண்டாம் என்று இப்போது தோன்றுகிறது. ஆனால் நீ ஏதோ வேடிக்கையாக எடுத்துக் கொள்வாய் என்றுதான் கருதினேன். இவ்வளவு தூரம் பாதிக்கப்படுவாய் என்று நான் நினைக்கவில்லை. எப்படி நினைக்க முடியும்; - அதன்பிறகு இரண்டே மாதங்களுக்குள் உனக்கும் - ஆன்ஸ்லேக்கும் திருமணம் நடந்து விட்டிருக்கும்போது! ஜுரம் இறங்கிப் படுக்கையிலிருந்து நீ எழுந்திருக்க முடியும் என்ற உடனேயே உன் தாயார் உன்னை ஃபிளாரன்ஸுக்கு அழைத்துப் போனாள். அங்கே உனக்குத் திருமணம் நடத்தி வைத்தாள். அப்படி என்னதான் அவசரமோ என்றுகூட நண்பர்கள் ஆச்சரியப் பட்டார்கள். ஆனால் எனக்குத் தெரியும் காரணம். எனக்கு முன்னால் உன் கல்யாணம் நடந்து விட்டது என்று சொல்லிப் பெருமைப் பட்டுக்கொள்ள நினைத்தாய் இல்லையா?''

''இருக்கலாம்.''

நிர்மலமான வானுலகம் தன் பொன்னையெல்லாம் இழந்து நின்றது. இருள் கவிந்து விட்டிருந்தது. கீழே தழைத்து வளர்ந்திருந்த மரக் கிளைகளினூடே இங்குமங்குமாய்ச் சில விளக்குகளின் மினுமினுப்புத் தெரிந்தது.

நீண்ட நேர மௌனத்துக்குப் பிறகு ஸ்ரீமதி ஸ்லேட் மீண்டும் கூறினாள்: ''எல்லாம் ஒரு வேடிக்கை என்றுதான் இன்று நினைக்கத் தோன்றுகிறது.''

''வேடிக்கையா?''

''ஆமாம்! பெண்கள் சில சமயங்களில் பயங்கரமாக நடந்து கொள்ள முடியும் — முக்கியமாகக் காதல் வயப்பட்ட பெண்கள். அன்று இரவு எனக்கு நானே சிரித்துக் கொண்டிருந்தேன், நீ இருளில் தன்னந் தனி

முட்டாள் மேதாவியான கதை!



அவன் மிகவும் அமைதியாக யாருடைய வம்புக்கும் போகாமல் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தான். அதனால் மக்கள் அவனை, ''முட்டாள்! நாட்டுப்புறத்தான்!'' என்று கேலி செய்தனர்.

அந்த முட்டாள் அவர்கள் நினைப்பை மாற்ற எண்ணினான்.

ஒரு நாள் புகழ்பெற்ற ஓர் ஓவியனைப் பிரமாதமாக ஒருவன் பாராட்டிக் கொண்டிருந்தான். அதைக் கண்ட முட்டாள் தடாலடியாக அடித்தான்: ''இந்தக் கலைஞனின் படைப்புகள் மிகப் பழையவையாகி விட்டனவே! இதுகூட உனக்குத் தெரியாதா?''

பாராட்டியவன் பிரமித்துப் போய் வாயடைத்து நின்றான், 'ஒருவேளை இவன் சொல்வதுதான் உண்மையாக இருக்குமோ?' என்ற எண்ணத்தில்.

இன்னொருநாள் வேறு ஒருவன் ஓர் எழுத்தாளர் எழுதிய நூலை வானளாவப் புகழ்ந்தான். முட்டாள் உரத்த குரலில் கூறினான்: ''சீசீ! நீ சுத்தப் பத்தாம்பசலி! அந்த நூல் உப்புக்குப் பயன் இல்லை. நீ எந்த யுகத்தில் இருக்கிறாய்? உருப்படாதவற்றையெல்லாம் தூக்கி வைத்துப் பேசுகிறாயே!''

அந்த ஆள் பயந்து போய் முட்டாளை ஆதரிக்கத் தொடங்கி விட்டான்.

கொஞ்ச நாட்களுக்கெல்லாம் மக்கள் முட்டாளைப் பற்றித் தாங்கள் கொண்டிருந்த கருத்தை அடியோடு மாற்றிக்கொண்டு விட்டனர்: மக்களின் நாவில் புரண்ட சொற்கள்: ''என்ன கூரிய மதி படைத்திருக்கிறான் இவன். உண்மையிலேயே அதி மேதாவிதான் இவன்!''

—இவான் துர்கனேவ்

யாக கொலிசியத்தின் அருகே காத்திருப்பதை எண்ணி. யாராவது தெரிந்தவர்கள் பார்த்துவிடப் போகிறார்களே என்ற பயத்தில் பதுங்கி, உள்ளே நுழைய என்ன வழி என்று புரியாமல் தவித்து எவ்வளவு சிரமப்பட்டிருப்பாய்! ஆனாலும் இதனால் உனக்கு உடம்பு சரியில்லாமல் போய் விட்டது என்று பின்னால் அறிந்தபோது நான் மிகவும் வருத்தப்படத்தான் செய்தேன்.''

நீண்ட நேரமாகவே அசையாதிருந்த ஸ்ரீமதி ஆன்ஸ்லே இப்போது நிதானமாகத் தன் தோழியைப் பார்க்கத் திரும்பினாள். ''ஆனால் நான் காத்திருக்கவில்லையே? அவர் எல்லா முன்னேற்பாடுகளையும் செய்திருந்தாரே! அவர் அங்கு இருந்தார். நாங்கள் உடனே உள்ளே அனுமதிக்கப்பட்டோம்.''

''என்ன? டெல்ஃபின் அங்கு இருந்தாரா? நீங்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டீர்களா? ஆ! நீ பொய் சொல்கிறாய்! நீ அங்கு காத்திருப்பாய் என்று அவருக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்? நீ உளறுகிறாய்!''

ஸ்ரீமதி ஆன்ஸ்லேயின் குரல் தெளிவாக இருந்தது. ''நான் கடிதத்துக்குப் பதில் எழுதினேன். அங்கு அவருக்காக அவசியம் காத்திருப்பதாக எழுதினேன்.''

ஸ்ரீமதி ஸ்லேட் தன் கரங்களை முகத்தை நோக்கி வீசிக் கொண்டாள். ''அட கடவுளே! நீ பதில் எழுதினாயா? நீ பதில் எழுதுவாய் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை!''

''நீ அதுபற்றி யோசிக்காதது ரொம்ப அசாதாரணமான விஷயம்தான்.''

''ஆமாம். கோபத்தினால் குருடாகிவிட்டிருந்தேன்.''

ஸ்ரீமதி ஆன்ஸ்லே எழுந்தாள். சால்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டாள். ''இங்கே ரொம்பக் குளிராக இருக்கிறது: உள்ளே போவோமா?... உனக்காக நான் ரொம்ப வருத்தப்படுகிறேன்.''

இந்தக் கடைசி வார்த்தைகள் ஸ்ரீமதி ஸ்லேடைக் குத்தி வேதனைப்படுத்தின. ''எதற்காக நீ எனக்காக வருத்தப்பட வேண்டும்?'' என்று கேட்டாள் தன் கைப் பையை எடுத்துக் கொண்டு.

ஸ்ரீமதி ஆன்ஸ்லே அவளிடமிருந்து பார்வையை விலக்கித் தொலைவில் தெரிந்த—எத்தனையோ ரகசியங்களைத் தன்னிடத்தில் கொண்டிருப்பது போல் இருளில் கனமான நிழலாகத் தோற்றமளித்த — கொலிஸியத்தைப் பார்த்தாள்.

''நீ எதிர்பார்ப்பது போல் அன்றிரவு நான் காத்திருந்து அவதிப்படவில்லையே? அதனால் தான் சொன்னேன், 'உனக்காகப் பரிதாபப்படுகிறேன்' என்று.''

ஸ்ரீமதி ஸ்லேட் அமைதி இழந்து சிரித்தாள். ''போகட்டும். அதனால் என்ன? இருபத்தைந்து ஆண்டுகள் அவரை எனக்கே முழுக்க முழுக்கச் சொந்தமாக்கிக் கொண்டிருந்தேன் நான். ஆனால் உனக்கோ அவர் எழுதாத அந்த ஒரு கடிதம் தவிர வேறு ஒன்றுமே கிடைக்கவில்லையே?''

ஸ்ரீமதி ஆன்ஸ்லே மீண்டும் மௌனமாயிருந்தாள். நீண்ட நேரத்துக்குப் பின் வராந்தாவிலிருந்து உள்ளே நுழைந்து செல்லும் வாசல் பக்கம் திரும்பினாள். ஓரடி எடுத்து வைத்தவள் நின்று திரும்பித் தோழியைப் பார்த்தாள்.


''எனக்கு பார்பரா கிடைத்தாளே!'' என்று கூறிவிட்டு ஸ்ரீமதி ஸ்லேடுக்கு முன்னால் மாடிப்படியை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

பூனாவில் பட்டாணிக் கடலையை வெள்ளிக்கிழமை தோறும், ''வெள்ளிக் கடலை'' என்று சொல்லி வருகிறார்கள்.

'சுக்ரவார்ச்ச பட்டாணி' என்று வெள்ளிக்கிழமைதோறும் தள்ளு வண்டிக்காரர்கள் சொல்லி விற்றுக் கொண்டே போகிறார்கள்.

வெள்ளிக்கிழமைக்கும் இந்தப் பட்டாணிக் கடலைக்கும் என்ன சம்பந்தம்? தேவிக்கு உகந்த நாள் சுக்கிரவாரம். சுக்கிரவாரத்தன்று பட்டாணிக் கடலைத் தேவிக்கு விசேஷமாகப் படைக்கிறார்கள் மகாராஷ்டிரத்தில்.


— மயிலன்



பார்சல்களைக் கயிற்றினால் கட்டும்போது கயிற்றைத் தண்ணீரில் நனைத்துப் பிழிந்து கட்டுங்கள். காய்ந்த பிறகு நன்றாக இறுகிக் கொள்ளும்.

— டிட்பிட்ஸ் - பாலி

என்ன கச்சேரி வேண்டியிருக்கு ?



'' அந்த நாளில் ராஜரத்தினம் பாட, மதுரை மணி அய்யர் பிடிலும், அரியக்குடி மிருதங்கமும் வாசிக்க அடாடா! எப்படி இருக்கும் தெரியுமா? சே! இதெல்லாம் என்ன கச்சேரி வேண்டியிருக்கு ?''

ராஜாஜியின் ஜெயில் டைரி

1922 ஜனவரி, 8உ

ராமமூர்த்திக்கு அசாத்தியத் தலைவலி; ஆஸ்பத்திரியில் படுத்திருக்கிறார். ஆஸ்பத்திரி ஆபீஸில் அலிகார் கலாசாலையைச் சேர்ந்த ரஹ்மானையும் குண்டூர் வக்கீலான நரசிம்மாச்சாரியையும் கண்டேன். ரஹ்மான் முகத்தைப் பார்த்தால் அவர் தூய நெஞ்சுடையவர் என்றும் நல்ல அறிவுள்ளவர் என்றும் தோன்றுகிறது.

அதோ அந்த வராந்தாவில் படுத்திருப்பவருக்குக் கபசுரம். அங்குள்ள கைதிகள் சிரத்தையுடன் அவரைக் கவனித்துக் கொள்கிறார்கள். அது அவருடைய அதிர்ஷ்டம்தான்.

முகமது ஹுஸேனுக்கும், ரங்கம் செட்டியாருக்கும் சாவர்க்கார் கைதியானதையும் அவர் வழியில் தப்பி ஓடியதையும் பிறகு மறுபடியும் கைது செய்யப்பட்டதையும் அதற்காக ஹேக் என்னும் இடத்திலுள்ள சர்வதேசக் கோர்ட்டில் வழக்கு நடந்ததையும் கூறினேன். அவர்கள் இதையெல்லாம் இதற்குமுன் கேட்டதில்லை.

நானும் முகமது ஹுஸேனும் நம்முடைய சுதந்திர இயக்கப் பிரசாரத்தை எந்த அஸ்திவாரத்தின் மீது அமைக்க வேண்டும் என்பதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். அந்நிய ஆட்சி கொடுமையானதுதான்; அநீதியானதுதான். ஆனால் அந்நிய ஆட்சி ஒழிந்து சுதந்திர ஆட்சி ஏற்படுவதற்கு அவற்றைக் காரணமாகக் கொள்ளாமல் சுதந்



திரம் சகல நாட்டவருக்கும் பிறப்புரிமை என்பதைக் காரணமாகக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தோம். ஆகவே, பிரிட்டிஷ் சர்க்கார் உலகத்திலுள்ள சர்க்கார்களிலெல்லாம் தலைசிறந்ததாக ஆகிப் பஞ்சாப் படுகொலையும் மலபார் அட்டூழியங்களும் நடைபெறாத நிலைமை உண்டானாலும்கூட நாம் சுயராஜ்யத்துக்காக ஆரம்பித்துள்ள போரை விடாமல் நடத்த வேண்டியதே என்று இருவரும் உறுதி செய்து கொண்டோம்.

இராமமூர்த்திக்கு இரவு முழுவதும் தூக்கமில்லாமல் இருந்தது. ஹனுமந்தராவும் முகமது ஹுஸேனும் அவர் அருகில் உட்கார்ந்து ஆறுதல் கூறிக் கொண்டும் உதவி செய்துகொண்டும் இருந்தார்கள். டாக்டர் இரவில் வந்து ஹனுமந்தராவின் மீது சீறி விழுந்தார்.

"அங்கே உட்கார்ந்திருப்பவன் யார்? நீ இங்கே இருக்க வேண்டாம். நெட்டியைப் பிடித்துத் தள்ளுவேன். போ, வெளியே போ!" என்று பலவாறாகக் கத்தினார்.



"ஏதேனும் வேண்டுமானால் ஆஸ்பத்திரி வேலையாளையாவது தோட்டியையாவதுதான் கூப்பிட வேண்டும், தெரியுமா?" என்று இராம மூர்த்தியிடம் கூறினார் டாக்டர்.

மனிதன் கேவலமாக நடப்பதுண்டு என்பதை அறிவேன். ஆனால், இந்த மனிதனுடைய கல்நெஞ்சமும் அற்பத்தனமும் எங்கும் கண்டதில்லை. இவ்வளவு கேவலமாக நடக்க முடியும் என்று நான் கனவில்கூட எண்ணியதில்லை. பாவம், அந்த மனுஷன் சிறை அதிகாரம் என்னும் சேற்றிலேயே அழுந்திப் போய்விட்டார். அவரை டாக்டர் என்று கூறக் கூடாது. சிறை அதிகாரி என்றே கூற வேண்டும். அதுகூடத் தவறு. சித்திரவதை செய்யும் கிராதகன் என்றே கூற வேண்டும். வேறு எதுவும் கூற முடியாது. கல்வி கற்ற இளைஞர் இவ்வளவு அற்ப மனத்தவராயிருப்பார் என்று இதற்குமுன் எந்தக் காலத்திலும் நான் எண்ணியதில்லை. ஆனால் இதுதான் சூழ்நிலை தோஷம் என்பது.

இப்பொழுது முதலாவது சிறைப் பகுதியைப் பகற்காலத்தில்கூடப் பூட்டி

வைப்பதாகத் தெரிகிறது. அப்படிச் செய்தால் இனிமேல் கைதிகளுக்கு எவ்வித உடற்பயிற்சியும் கிடையாமற் போகும். நடக்கக்கூட முடியாது. இத்தகைய கட்டுப்பாடு இருக்குமானால் வெறுங் காவல் தண்டனை பெறுவதைவிடக் கடுங்காவல் தண்டனையே நல்லதாகும். ஆனால் சிறையில் எது கிடைக்குமோ, அதை அனுபவிக்க வேண்டியது தானே? சர்க்கார் ஏற்படுத்தும் கஷ்டங்களைக் கண்டு வருந்துவதாக நாம் காட்டிக் கொண்டால் அதுதானே சர்க்காருக்கு வெற்றி ? அவர்கள் துன்பம் உண்டாக்க விரும்புகிறார்கள். அதைத் தாங்காமல் இருந்தால் அவர்கள் தங்கள் லட்சியத்தை அடைந்து விடுவார்கள். ஆதலால் தனிச் சிறையில் வைத்தாலும் நாள் முழுவதும் அடைத்தாலும் அதிகார மமதையில் எந்தவிதமான இன்னல்களை இழைத்தாலும் நாம் அவற்றை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வோமானால் அவர்கள் எண்ணம் கைகூடாது.

தோல்வி அடைவார்கள். ஆயினும் நாம் தவறான காரியங்களைச் செய்து அத்தகைய தண்டனைகளை அனாவசியமாக உண்டாக்கிக் கொள்ளாதிருக்க வேண்டும்.

பகதூர் ஷா என்னும் சக்கரவர்த்தியைப் பற்றி முகமது ஹுஸேன் சுவாரசியமான கதை ஒன்று கூறினார் :

'' பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர் ஒருவர் பகதூர்ஷாவைக் கேலி செய்வதற்காக அவருடைய மகனின் தலையை வெட்டி ஒரு தட்டில் வைத்துக் கொண்டு வந்து அவர் முன் வைத்தார். அப்பொழுது பகதூர்ஷா அதைக் கண்டு புன்னகை புரிந்தார். பிறகு அவருடைய தோழர்கள் அவர் புன்னகை புரிந்ததன் காரணத்தை வினவினார்கள். ''எனக்கு வருத்தம் உண்டாக்கவே அப்படிச் செய்தான். நான் வருத்தத்தைக் காட்டினால் அவன் எண்ணம் கைகூடிவிடுமல்லவா?'' என்று பகதூர் ஷா பதிலுரைத்தார்.

படித்துப் பாருங்கள்; பாடிப் பாருங்கள்!

ஜி. என். பி. கிருதிகள்

காலஞ்சென்ற சங்கீத கலாநிதி ஸ்ரீ ஜி. என். பாலசுப்பிரமணியம் அவர்களை மேதைகளுள் ஒருவர் என்று கூறலாம். அன்னாரது மின்னல் போன்ற சங்கீதம் இசை உலகை மிக மிகக் கவர்ந்து விளங்கியதாகும். ஸ்ரீ ஜி.என். பி.யின் நினைவு என்றென்றும் சாசுவதமாக இசை உலகில் நிலைத்து நிற்கும் என்பதற்குச் சான்றாக அவர் இயற்றிய இசை வடிவங்களான உருப்படிகள் விளங்குகின்றன. அவைகளில் வர்ணங்கள் இரண்டும், கீர்த்தனங்கள் முப்பதும் இப்புத்தகரூபமாக இசை உலகுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதில் அடங்கியுள்ள உருப்படிகள், பிரசித்தமான ராகங்களில் தவிர, சில அழகான அபூர்வ ராகங்களிலும் அமைத்துள்ளார். அதில் சிவசக்தி, அம்ருதபெஹாக் இந்த இரண்டு ராகங்களும் ஸ்ரீ ஜி. என். பி அவர்களே உண்டாக்கிய ராகங்களாகும். அவை அல்லாமல் ரஞ்ஜனி, வலஜி, கதன குதூகலம் சாரங்கதரங்கிணி முதலான ராகங்களிலும் அமைத்திருக்கிறார். அநேகம் கீர்த்தனங்களுக்கு மிகவும் அழகாகவும் விநயமாகவும் சிட்டை ஸ்வரம் செய்திருப்பது போற்றத் தகுந்தது. முக்கியமாக ஸ்ரீ ஜி. என். பி. அவர்கள் தாம் செய்த கீர்த்தனைகளில் தமது முத்திரையை அதாவது தமது பெயரை வைத்துக்கொள்ளவில்லை என்பதும் தாம் செய்த கீர்த்தனைகளைத் தமது கச்சேரிகளில் அவர் பாடியதே யில்லை என்பதும் குறிப்பிடத் தக்கதாகும். அதற்குக் காரணம் தம் கிருதிகள் மற்றவர்கள் பாடிப் பிரசித்தமடைவதுதான் பொருத்தம் என்ற மனப்பான்மையுடையவராக இருந்தார்.

இந்தக் கீர்த்தனைகளை ஸ்ரீ ஜி. என். பி.யின் சிஷ்யர்களான ஸ்ரீ எம். கல்யாணராமன், வி. இராமச்சந்திரன் ஆகியோர் தமது குருவிடம் நேரில் பாடம் செய்து அவைகளை ஸ்வர தாளக் குறிப்புகளுடன் வெளியிட்டிருக்கிறார்கள். இந்தப் பணியைச் செய்து தங்களது குருநாதருக்குத் தங்கள் காணிக்கையைச் செலுத்தியுள்ளார்கள். ஸ்வர தாளக் குறிப்புகள் யாவரும் எளிதில் பாடம் செய்யத் தக்க முறையில் செய்திருப்பது குறிப்பிடத் தக்கது. - **செம்மங்குடி ரா. ஸ்ரீனிவாசய்யர்**

பிரசுரம் : குணபாலா பப்ளிகேஷன்ஸ், சென்னை — 40, விலை ரூ. 6.

மரகதக் கண்ணன்

சோலையூர் பெருமாள் கோயிலில் உள்ள மரகதக் கண்ணனைத் திருடிச் செல்லப் பணக்கார வேஷத்தில் கருப்பண்ணனும் அவனது சகாக்களான தங்கக்காசிப் பல்லனும் மீசைக்காரனும் முயன்று வெற்றி பெற்றுவிட்டனர். தங்கத்தைத் தேடிச் சென்று கண்ணனை இழந்த பாரி, திருட்டுக் கும்பலைப் பிடிக்க உதவுகிறான். குருட்டுப் பையன் பாரியின் சாதனை அந்த ஊராரின் பாராட்டுதலைப் பெறுகிறது.

சிறுவர்களுக்கான இந்நூல் சம்பவங்களை விறுவிறு என்று வளர்த்துப் படிக்க ஆர்வத்தைத் தூண்டுகிறது. பையன் பாரியைச் சித்திரிக்கும் முறை மனத்தைத் தொடும்படி அமைந்திருக்கிறது.

ஆசிரியர்: பூவண்ணன், பிரசுரம்: பழனியப்பா பிரதர்ஸ், சென்னை - 14; விலை: ரூ. 2.

நாகரீகத்தின் வரலாறு



ஆதி மனிதன், குகைகளில் வசித்து வந்தான்; அங்கு, தான் வாழ்ந்ததை வெளிக்குப் புலப்படுத்த, ஓவியங்களை தன் போக்கில் கிறுக்கிவைத்தான். பின்னர், கட்டிடம் கட்டக் கற்றுக்கொண்ட அவன், சாலச் சிறந்த கட்டிடப் பொருளைத் தேடிக் கண்டறியும் ஆராய்ச்சியில் இறங்கினான்: நூற்றாண்டு காலமாய், களிமண், வைக்கோல், கல், மூங்கில் போன்றவற்றைப் பயன்படுத்தினான்: இன்னமும் மேலான பொருள்களையே தேடி ஆராய்ந்து, இறுதியில் அதைக் கண்டறியவும் செய்தான். நிரந்தரமாக நீடித்திருக்கும், உறுதி வாய்ந்த ராக்ஃபோர்ட் பிராண்ட் டால்மியா சிமெண்டைப் பயன்படுத்தி, இன்று அவன் கட்டிடம் எழுப்புகிறான்.

ராக்ஃபோர்ட்
பிராண்ட்
டால்மியா சிமெண்ட்

டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட்.,
பதிவு அலுவலகம் மற்றும் தொழிற்சாலை:
டால்மியாபுரம், தமிழ்நாடு.
தலைமையகம் 4, சிந்தியா ஹவுஸ், புதுதில்லி-1

குளிர்காலத்திலும் சரி,
கோடைகாலத்திலும் சரி—
மார்கோசோப்
சுத்தம் செய்வதோடு மட்டும்
நிற்பதில்லை—
சருமத்தை பாதுகாக்கிறது.

ஏனெனில் மார்கோவில் மட்டுமே வேப்பெண்ணெய் சேர்ந்துள்ளது.



மார்கோ சோப்

ஒரு கல்கத்தா கெமிகலின் தயாரிப்பு

CCH-4183-A (Rev)

இலக்கிய மலர்கள்

மீ.ப.சோமு

3. கார் பெற்ற பேர்!

தெருவிலே பெரிய சண்டை. ஒரே கூக் குரல். வீட்டுப் பெண்களுடைய குரல்தான் எல்லாம்!

மோர் விற்றுக் கொண்டு போகிறுளே தயிர்க்காரி, அவள் ஒரு கட்சி. வீதியிலே உள்ள அத்தனை வீட்டுப் பெண்களும் சேர்ந்து எதிர்க் கட்சி!

ஆயிரம் ஆண்டுகளாக நடக்கிறது இந்த மகா யுத்தம்! இன்னும் போர் ஓய்ந்தபாடாக இல்லை!

காரணம் என்ன? தயிரில் அளவுக்கு மீறித் தண்ணீர் கலந்து விட்டாளாம் மோர்க்காரி. தயிரில் தண்ணீரைக் கலந்தாளா? அல்லது தண்ணீரில் தயிரைக் கலந்தாளா என்பது கேள்வி!

அடிக்கடி நாம் எல்லா ஊர்களிலும் பார்த் துப் பழகியுள்ள இந்தத் தெருக் காட்சியை மனத்தில் வைத்துக் கொண்டு ஒரு பழைய பாடலைப் பார்ப்போம்.

'ஆகாயத்தைப் பார்த்து, வானத்தில் ஓடு கின்ற மேகத்தைப் பார்த்துப் பாடுகிறுர் கவிஞர்.

கார்என்று பேர்படைத்தாய்
ககனத்து உறும்போது

[கார் — மேகம். ககனம் — வானம். உறும் போது — தங்கும்போதும், ஓடும்போதும்]

ஆகாயத்திலே இருக்கும்போது, ஓ மேகமே, உனக்குக் ''கார்'' என்று பெயர்.

நீர்என்று பேர்படைத்தாய்
நீள்நிலத்தில் வீழ்ந்ததன்பின்

[நீள்நிலம் — இந்தப் பரந்த பூமி. நீர் — தண்ணீர்.]

இந்தப் பூமியில் மழையாக விழுந்த பிறகு மேகமாகிய உனக்குத் தண்ணீர் என்று பெயர் சொல்வார்கள்.

காரென்று பேர்படைத்தாய்
ககனத் துறும்போது
நீரென்று பேர்படைத்தாய்
நீணிலத்தில் வீழ்ந்ததற்பின்

இனித்தான் மூன்றுவதான முக்கிய மான பெயர் வரப்போகிறது.

வார்ஒன்று மென்முலையார்
ஆய்ச்சியர்கை வந்ததன்பின்

தயிர்க்காரப் பெண்களின் கைக்கு வந்ததும் ஏ மேகமே,

மோர்என்று பேர்படைத்தாய்
முப்பேரும் பெற்றுயே!


வானத்திலே இருந்தாய், உனக்கு மேகம் என்று பெயர். பூமிக்கு வந்தாய், தண்ணீர் என்று பெயர். இந்த ஆய்ச்சியருடைய கைக்கு வந்தாயோ இல்லையோ, உன்னுடைய பெயர் மோர் என்று ஆகிவிட்டது!

காரென்று பேர்படைத்தாய்
ககனத் துறும்போது
நீரென்று பேர்படைத்தாய்
நீணிலத்தில் வீழ்ந்ததற்பின்
வாரொன்று மென்முலையர்
ஆய்ச்சியர்கை வந்ததற்பின்
மோரென்று பேர்படைத்தாய்
முப்பேரும் பெற்றுயே!

மோர் ஒரே தண்ணீராக இருக்கிறது என் பதுதான் பாட்டின் உட்கிடை. ஆனுல் அதைச் சொல்லுகிற விதம் இருக்கிறதே, அந்த உத்தி, வானத்தையும் பூமியையும் சேர்த்து வளைக் கிறது. மூன்று பெயர் அல்லவா படைத் துள்ளாய் மேகமே என்று சொல்வதிலே நகைச் சுவையானது கவிச்சுவை கொண்டு துள்ளு கிறது. ஒரு பழைய பாடல். காளமேகப் புலவர் பாடியது என்று குறிப்பு உண்டு. இந்தப் பாடலில் கம்பருடைய முத்திரையே கிடக் கிறது என்று ரசிகமணி டி. கே. சி. அவர்கள் அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறேன்.

(தொடரும்)





தெய்வம்

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்", "அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்". "அவனன்றி ஓரணுவும் அசையாது", "நம்பினோர் கெடுவதில்லை", "எல்லாம் நன்மைக்கே" என்னும் பழமொழிகளின் விளக்கம்தான் தண்டாயுதபாணி பிலிம்ஸ் தயாரிப்பான "தெய்வம்."

தொடக்கம் முதல் இறுதிக் காட்சி வரையில் படத்தில் தலைமைப் பாத்திரம் ஏற்றிருப்பவர் வாரியார்தான்; கணீரென்ற குரலில் தம் தெய்விகப் பணியைச் செவ்வனே ஆற்றியிருக்கிறார்! ஆகவே, "தெய்வ" நாயகர் அவர்தான் என்று கூறுவதில் தவறில்லை!

நடிப்பில் உயர்ந்து நிற்கும் நடிகர்கள் வரிசையில் ஏவி. எம். ராஜன் முதல் இடம் பெறுகிறார். ஆண்டவன் சந்நிதியில் ஆணையிட்ட வாக்கை மீறிய நண்பனின் துரோகச் செயலைக் கண்டு சீறியபோது அற்புதமாக நடித்திருக்கிறார்.

மருதமலை முருகன் கோயிலில் உற்சவ மூர்த்தியின் திருவாபரணங்களைத் திருடப் போய் இறைவன் அருளால் திருந்திய மனிதனாய் வெளிவந்த பாத்திரத்தை ஏற்ற சுந்தரராஜனின் நடிப்பு உருக்கமாயிருக்கிறது.

கைக்குழந்தையோடு கணவனால் கைவிடப்பட்டுக் கண்ணீர் பெருக்கும் காரிகையாக நடிக்கும் சௌகார் ஜானகி தம் பாத்திரத்துக்கு உயிர் கொடுத்திருக்கிறார்.

இந்த வண்ணப் படத்தின் ஒளிப்பதிவு மிகவும் பாராட்டுக்குரியது. மருத மலைத் தைப்பூசத் திருவிழா, ஸ்வாமி மலை வள்ளி கல்யாணம், பழநி பங்குனி உத்தரம், திருச்செந்தூர் கந்த சஷ்டி — சூரசம்ஹாரம், திருப்பரங்குன்றம் தெய்வயானை திருமணம், திருத்தணிகை ஆடிக் கிருத்திகைத் திருவிழாவையும் படமாக்கியிருக்கும் விதமே ஒளிப்பதிவின் சிறப்புக்குச் சான்றாகும். கூட்டத்தில் இடிபடாமல், பிரயாண அலுப்பு சிறிதும் இல்லாமல், அனைத்து முருகன் திருத்தலத் திருவிழாக்களையும் தரிசிக்க முடிகிறதே! ஆனால் சில 'க்ளோசப்' காட்சிகளில் நடிகர்களின் முகங்கள் பூதாகாரத் தோற்றம் அளிக்கின்றன. அதைத் தவிர்த்திருக்கலாம்.

இப்படத்தில் ஒரு விசேஷம்: பின்னணிப் பாடகர்கள் மேடையில் முன்னணியில் இருந்தே பாடியிருக்கிறார்கள்.

காட்சிகளில் ரசிகர்களின் 'சபாஷ்' பெறும் காட்சி: திருத்தணிகை மலையில், அயோக்கியன் ஒருவனால் தாக்கப்பட்டு மானம் இழக்கும் நிலையில் 'முருகா' என்று கதறிய இளம் தம்பதிக்கு முருகன் அருள் புரிந்த காட்சி! ஆலய மதிற்சுவரில் அமர்ந்திருந்த மயில் பக்தர்களின் தீனக் குரலைக் கேட்டுப் பறந்தோடி வந்து பாதகனைத் தன் அலகினால் தாக்கி அவர்களைக் காப்பாற்றும் கட்டம் மெய்சிலிர்க்க வைக்கிறது. புலி, யானை, சிங்கம் முதலிய வன விலங்குகளைத் தம் இச்சைப்படி ஆட்டி வைத்துப் புகழ் பெற்றிருக்கும் தேவர் மயிலையும் படத்தில் சரியானபடி பயன்படுத்தியிருக்கிறார்.

பாராட்டுக்குரிய அம்சம்: தெய்வத்தின் வேடத்தை மனிதர்கள் புனைந்து கொண்டு வந்து பக்தர்களின் மனத்தை வேதனைப்படுத்தாமல் இருந்ததுதான்!

எம். ஏ. திருமுகத்தின் டைரக்ஷன் படத்துக்குத் தனிச் சிறப்பை அளித்திருக்கிறது. குன்னக்குடி வைத்தியநாதனின் இசை அமைப்பு இனிமையாயிருக்கிறது. ஆனால், பல இடங்களில் பின்னணியாகக் கேட்கும் வயலின் இசை மென்மையாக ஒலித்திருந்தால் நன்றாயிராதோ? தெய்வத்தை நொந்து கொள்வதும் தெய்வத்தினிடம் குறை காண்பதும் விவேகமான செயலாகாது. அதுவும் இது "தேவ"ரின் "தெய்வம்!" குறை காண முடியுமா?

— காந்தன்

சத்திய வெள்ளம்

நா.பார்த்தசாரதி

இருபத்தோராவது அத்தியாயம்

மாணவ சமுதாயத்தின் மேல் கொண்டிருக்கும் மனப்பூர்வமான அன்புடனும் அக்கறையுடனும் அந்த வார்த்தைகளைப் பிச்சைமுத்து பேசினார்.

''இந்தச் சமூகத்தைப் பொறுத்த வரை நீங்கள் மிக மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். மாணவர் போராட்டம் என்பது படிப்பைத் தட்டிக் கழிக்கும் ஒரு சாதனம் என்றோ வேறு எதற்கும் லாயக்கில்லாத கழிசடை மாணவர்களின் வேலை என்றோ வெளியே உள்ள தந்தக் கோபுரவாசிகள் சிலர் பேசலாம். பேசுவார்கள். அந்தப் பேச்சுக்கு உங்களில் யாரும் பலியாகி ஒடுங்கிவிடக் கூடாது. போராடுகிற நீங்கள் நீதி நேர்மைக்காகவும், உண்மைக்காகவும் போராடுகிற திறமைசாலிகள் என்பதும் நிரூபிக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் உங்கள் போராட்டங்களை நியாயப்படுத்த முடியாமல் போய் விடும். இதை நன்றாக ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.''

''உங்களுடைய இந்தக் கருத்தை நான் வரவேற்கிறேன் சார்! போராட்டங்களின் அடிப்படை நியாயங்கள் சரியாகவும், திடமாகவும் இருந்தால் அவற்றின் தொடக்கமே ஒரு வெற்றிதான். முடிந்தபின் வரும் வெற்றியை விடத் தொடங்கியதுமே கிடைக்கும் தார்மிக வெற்றி பெரியது சார்!'' என்றான் பாண்டியன்.

கதிரேசனும் பாண்டியனும் அப்போது பிச்சைமுத்துவைத் தங்களோடு மணவாளனின் வீட்டுக்கு வருமாறு அழைத்தார்கள். தம்முடைய பள்ளித் தலைமை ஆசிரியரோடு வந்திருப்பதாலும் அவர் கடைக்குள்ளே தமக்காகக் காத்திருப்பதாலும் தாம் அப்போது அவர்களோடு மணவாளனின் வீட்டுக்கு வர முடியாமலிருப்பதற்கு வருந்தினார் பிச்சைமுத்து. மாணவர்கள் இருவரும் அவரை இதற்கு மேல் வற்புறுத்த விரும்பவில்லை.

'பல்கலைக் கழகம் திறந்ததும் தாமே ஒரு விடுமுறை நாளில் மல்லிகைப் பந்தலுக்கு வந்து மாணவர்களைச் சந்திப்பதாகச் சொல்லி அவர்களிடம் விடைபெற்றார் பிச்சைமுத்து. அவர் விடைபெற்றுக் கடைக்குள்ளே செல்லுமுன் அவசரம் அவசரமாகச் சட்டைப் பையிலிருந்து ஒரு துண்டுத்தாள் எடுத்து அண்ணாச்சி கடை முகவரியை எழுதி அவரிடம் கொடுத்தான் பாண்டியன். பிச்சைமுத்துவுக்கே அண்ணாச்சியைப் பற்றி நன்றாகத் தெரிந்திருந்தது.

''தெரியுமே, இந்த அண்ணாச்சியைப் பற்றி ரொம்பப் பேர் எங்கிட்டச் சொல்லியிருக்காங்க. நான் நிறையக் கேள்விப்பட்டிருக்கேன். இன்றுள்ள சூழ்நிலையில் பல பெரிய வசதியுள்ள மனிதர்கள் முன்வந்து செய்ய அஞ்சும் பொதுக் காரியங்களை ஒவ்வோர் ஊரிலும் இப்படி யாராவது ஓர் ஏழை அண்ணாச்சிதான் கட்டிக் காத்துச் செய்ய வேண்டியிருக்கிறது'' என்றார் அவர்.


மேலக்கோபுர வாசலில் பிச்சைமுத்துவிடம் விடைபெற்றுக் கொண்டு அவர்கள் இருவரும் மணவாளனின் வீட்டை அடைந்தபோது இரவு ஒன்பது மணிக்கு மேலாகி விட்டது. மணவாளன் வீட்டு மொட்டை மாடியில் நூறு மாணவர்களுக்கு மேல் வந்து கூடியிருந்தனர். பாண்டியன் தாமதமாக வந்ததற்காக மணவாளன் அவனைக் கோபித்துக் கொண்டார். கதிரேசன் வழியில் எதிர்பாராத விதமாகப் பிச்சைமுத்துவைச் சந்திக்க நேர்ந்ததை மணவாளனிடம் கூறினான்.

''அவரையும் இங்கே கூப்பிட்டுக் கொண்டு வந்திருக்கலாமே?'' என்று மணவாளன் பிச்சைமுத்து அவர்களோடு வராததற்காக வருத்தப்பட்டார். தலைமை ஆசிரியருடன் வந்திருக்கும் அவருடைய வேலை நிர்ப்பந்தங்களைக் கதிரேசன் மணவாளனிடம் சொன்னான். பட்டமளிப்பு விழாவின் போது மந்திரிக்கு டாக்டர் பட்டம் அளிப்பதை எப்படி எதிர்ப்பது — எந்தெந்த முறைகளில் மறுப்புத் தெரிவிப்பது போன்ற முடிவுகள் அப்போது அங்கு கூடியிருந்த மாணவர்களிடையே எடுக்கப்பட்டன. போராட்ட அறிவிப்புக்காக எழுதப்பட்ட துண்டுப் பிரசுரங்களை நகல் எழுதிப் படித்து யாவரும் அங்கீகரித்து அச்சிடக்கூட முடிவு செய்தாயிற்று. இரவு பதினொரு மணிக்குக் கூடியிருந்த உள்ளூர் மாணவர்கள்

கலந்தார்கள். பாண்டியனும் கதிரேசனும் மல்லிகைப்பந்தலிலிருந்து வந்திருந்த மற்ற மாணவர்களும் இரவில் மணவாளனோடு அவர் வீட்டிலேயே தங்கிக் கொண்டார்கள். இரவு நெடு நேரம் அவர்கள்படுத்தபடியே மாணவர்கள் தொடர்புடைய பல பிரச்னைகளைப் பேசிக் கொண்டிருந்தார்கள். பேச்சு ஓய்ந்து அவர்கள் தூங்கத் தொடங்கியபோது இரண்டாவது காட்சி சினிமா விடுகிற நேரம் ஆகிவிட்டது. அதற்கு மேலும் பேசிக்கொண்டே இருந்தால் அந்தப் பேச்சுக்கு ஒரு முடிவே இல்லை என்று தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொண்டுதான் தூங்கினார்கள் அவர்கள்.

மறுநாள் அதிகாலை நாலு மணிக்கு மணவாளனை எழுப்பிச் சொல்லிக் கொண்டு பாண்டியனும் கதிரேசனும் மற்ற மாணவர்களும் பஸ் நிலையத்துக்கு வந்தார்கள். கதிரேசன் முதலியவர்கள் மல்லிகைப் பந்தலுக்கும் பாண்டியன் பாலவநத்தத்துக்கும் பஸ் ஏறினார்கள்.

மல்லிகைப் பந்தலில் செய்ய வேண்டிய ஏற்பாடுகளை அண்ணாச்சியையும், மற்ற மாணவர்களையும் கலந்து பேசிச் செய்யும்படி கதிரேசனிடமும் பிறரிடமும் கூறி அனுப்பினான் பாண்டியன். மல்லிகைப்பந்தலுக்குப் போகிற பஸ் தான் முதலில் புறப்பட்டுப் போயிற்று. தான் ஊருக்கு விருதுநகர் பஸ்ஸில் போகலாமா, அருப்புக்கோட்டை பஸ்ஸில் போகலாமா என்று யோசித்தான் பாண்டியன். முதலில் அருப்புக்கோட்டை பஸ்லே இருந்தது. அந்த அருப்புக்கோட்டை பஸ் நாலே முக்காலுக்குத்தான் புறப்பட்டது. மதுரை நகர எல்லையைக் கடந்து பஸ் அவனியா



புரம் போகும்போது கிழக்கு வெளுக்கத் தொடங்கியிருந்தது. மேற்குப் பக்கம் அவனியாபுரம் கண்மாய்க்கு அப்பால் இருள் புலர்ந்தும் புலராமலுமிருந்த வைகறைக்கு ஏற்ப மங்கலாகத் திருப்பரங்குன்றும், பசுமலையும் தென்பட்டன. விமான நிலையத்துக்கு வழிபிரிகிற இடம் வந்ததும் கட்டடங்களே அதிகமில்லாத அந்த மேட்டு வெளியிலிருந்து பார்க்கும் போது சூரியோதயத்துக்கு வரவு கூறிக் குங்குமத்தால் அவசரம் அவசரமாக இட்ட கோலம் போல் கீழ்வானம் மெல்ல மெல்லச் சிவக்கத் தொடங்கி யிருந்தது. ஓடுகிற பஸ்ஸில் முகத்தில் சில்லென்று வந்து உராயும் குளிர்ந்த காற்றையும் பொருட்படுத்தாமல் இந்தக் காட்சியை இரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் பாண்டியன். மல்லிகைப்பந்தலில் சூரியோதயத்தை இவ்வளவு அதிகாலையில் பார்க்க முடியாது. காலை எட்டுமணிக்கு மேலானாலும் விடிந்துவிட்ட உணர்வு கூட ஏற்படாத ஊர் மல்லிகைப்பந்தல். மல்லிகைப் பந்தலின் நினைவும், பல்கலைக் கழக நினைவுகளும், அந்த ஆண்டின் புதிய அநுபவங்களான மாணவர் இயக்க எண்ணங்களும் ஞாபகம் வந்தவுடன் கண்ணுக்கினியாளும் ஞாபகத்தில் வந்து தங்கினாள். அவளைச் சந்திக்க நேர்ந்த முதல் சந்திப்பிலிருந்து முந்திய நாள் மதுரையில் சித்திரக்காரத் தெருவில் அவள் வீட்டில் இருந்து உண்டது வரை ஒவ்வோர் அணுவையும் நினைவில் அசை போட்டு மகிழ்ந்தான் அவன். பஸ் அருப்புக்கோட்டையை நெருங்கு முன் ஓரிடம் வந்ததும் அவன் நினைவு ஒரு பழைய நிகழ்ச்சியைத் திரும்ப எண்ணியது. சாலையில் அப்போது போய்க் கொண்டிருந்த இடத்தில்தான் 1965ம் ஆண்டின் தொடக்கத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது மேல்வகுப்பு மாணவர்களும் தானும் சேர்ந்து ஒரு பஸ்ஸுக்கு நெருப்பு வைத்தது ஞாபகம் வந்தது. மாணவ சமூகத்தின் அன்றைய மன நிலைக்கும் இன்றைய மன நிலைக்கும் இடையே ஏற்பட்டுள்ள மாறுதல்களும், வளர்ச்சியும் அவனுக்கு உடன் நிகழ்ச்சியாக மீண்டும் நினைவு வந்தது. பஸ் சாலையில் அந்த இடத்தைக் கடந்ததும் மறுபடியும் அவன் நினைவில் சித்திரக்காரத் தெருவும், நாடகங்களின் ஜிகினா கிரீடங்கள், உடைகள், ஸீன்கள் அடங்கிய அந்த மாடிக் கூடமும், அந்த மாடியிலிருந்து செவிமடுத்த 'ராராம இண்டி தாக' கீதத்தின் குரல் இனிமையும், பொருள் இனிமையும் அதை அவன் அப்போது தேர்ந்தெடுத்துப் பாடியதனால் தனக்குப் புரிய வைத்த குறிப்பின் இனிமையும் தோன்றி இணையற்ற இன்ப அலைகளாய்ச் சிலிர்த்துக் கொண்டிருந்தன.

மாடியில் கண்ணுக்கினியாளின் தந்தையோடு அமர்ந்து பேசிக் கொண்டிருந்தபோது அவர் பழைய காலத்து மனிதர்களுக்கே உரிய முறையில் ஒளிவு மறைவு கூச்சம் எதுவும் இல்லாமல் தமது சாதி, குலம், கோத்திரம் எல்லாவற்றையும் சுற்றி வளைத்துத் தொடங்கி விசாரித்து முடித்ததை நினைத்ததும் இப்போது கூட அவனுக்குச் சிரிப்பு வந்தது.

''எனக்குத் தெரிஞ்ச நம்ம ஆளுங்க 'பாண்டியன்'னு வைக்கிற வளமுறை இல்லியே தம்பி?'' என்று மிகவும் தந்திரமாக விசாரித்திருந்தார் நாயுடு. அப்போதுதான் தன் குடும்பம் பற்றிய ஓர் உண்மையைத் துணிவாகவும், திடமாகவும் அவரிடம் தெரிவித்தான் பாண்டியன்.

'' எங்க அப்பா தேவரு. அம்மா நாயுடு. அந்த நாளிலே எங்க ஊரே அதிசயிக்கிறாப்பிலே நடந்த கலப்பு மணம்னு எங்க அப்பாவே அதைப் பற்றி அடிக்கடி பேசுவாரு. இந்தக் கலப்பு மணத்தாலே ரொம்ப நாள் எங்க குடும்பத்து நல்லது கெட்டதுகளுக்குத் தேவமாருங்களும் வரலே, அம்மா சாதி ஆட்களும் வரலேம்பாங்க.... அப்பாதான் மறவர் சீமை வழக்கப்படி 'பாண்டித் தேவர்'னு எங்க தாத்தா பேரைச் சுருக்கமாகப் 'பாண்டியன்'னு எனக்கு வச்சாராம்.....'' என்று கந்தசாமி நாயுடுவுக்குத் தான் கூறிய மறுமொழியையும் நினைத்துக் கொண்டான் அவன். இந்த உண்மை ஒருவேளை கந்தசாமி நாயுடுவை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி விடுமோ என்ற கூச்சம் அவனுக்கு அப்போது இருந்தது. ஆனால் அடுத்த கணமே, ''கலப்பு மணத்துலே தப்பு ஒண்ணும் இல்லே. ஒரு வகையிலே பார்க்கப் போனா நானும் என் சம்சாரமும்கூடக் கலப்பு மணம்னுதான் சொல்லணும். நாங்க 'கவரை' நாயுடு. அவ கம்மவாரு. தெரிஞ்சிதான் கட்டிக்கிட்டோம்.....'' என்று சுபாவமாக மறுமொழி கூறியிருந்தார் நாயுடு. அதோடு விடாமல் மேலும் அவரே கேட்டார் : ''உன்னோட முழுப் பேரு 'சுபாஷ் சந்திர பாண்டியன்'னுல்ல கண்ணு சொல்லிச்சு.....?''

'' அதுவா ? எங்கப்பா நேதாஜி பக்தர். முத்துராமலிங்கத் தேவர் மேலே ரொம்பப் பிரியம். அந்தப் பிரியத்திலே வெறும் 'பாண்டியன்'னு கூப்பிடாமே பிரியமா சுபாஷ் சந்திர பாண்டியன்னு கூப்பிடுவாரு'' என்று


பனிக் கால சரும வரட்சியா?
உங்களுக்கு உள்ள இப் பிரச்சினை
ரோம், லண்டன், பாரிஸ்
நங்கையருக்கும் உண்டு
அவர்கள் கண்ட வழியே உமக்கும் உசிதம்
POND'S
COLD CREAM
புத்தழகுக்
கோலமுடன்
வருகுது
பாண்ட்ஸ் கோல்டு க்ரீம்
உமது சருமத்தை மென்மையாக்கிப் பாதுகாக்கும்
குளிர் நாட்களிலே வரண்டிடும் சரும மென்மையைக் குழைவுடனே உமக்கு மீட்டுத் தருவது பாண்ட்ஸ் கோல்டு க்ரீம்: உலகெங்குமே அரம்பையர் விரும்பும் அழகுசாதனம் இயற்கை எவ்வாறு செயல்படுகிறதோ அதே முறையில்
உமது சருமத்தைப் பேணிக் காப்பது பாண்ட்ஸ் கோல்டு க்ரீம். வாடாமலரென மென்மையோடு மிளிரத் தேவைப்படும் சருமத் தைலங்களை மீட்டுத் தருகிறது பாண்ட்ஸ் கோல்டு க்ரீம். இட்டுப் பயனடைவீர் இன்றிரவே!
உலகிலேயே உச்ச விற்பனை உடைய கோல்டு க்ரீம்: பாண்ட்ஸ்
சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்க்., (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் அமெரிக்காவிலே இணைக்கப்பட்டது.)
லிண்டாஸ்- CPC. 2-140 TM.



mcm/app/10 tam

விளக்கியிருந்தான் அவன். இன்னும் ஆயிரம் ஆண்டுகள் கழிந்தாலும் இன்னும் ஆயிரம் சீர்திருத்தத் தலைவர்கள் தோன்றினாலும் தமிழ் நாட்டில் சாதிகளைப் பற்றியும், குல முறைகள் பற்றியும் அறிகிற ஆவல் போகாது போல் தோன்றியது பாண்டியனுக்கு. அருப்புக்கோட்டையில் இறங்கிப் பாலவநத்தத்துக்கு வேறு பஸ் மாறி ஏறிக் கொண்டபின்னும் அவன் சிந்தனைகள் தொடர்ந்தன. மனம் முந்திய தினத்து நினைவுகளால் நிரம்பி வழிந்தது.

முதல் நாள் நடந்த இந்த நிகழ்ச்சிகளை மீண்டும் மீண்டும் நினைத்து அவன் சிந்தித்துக் கொண்டிருந்த போதே பஸ் பாலவநத்தத்தில் போய் நின்று இறங்க வேண்டிய நேரம் வந்திருந்தது.

''யாருப்பா சுப்பையாத் தேவரு மகன்தானே? இதென்னப்பா புது நாவரிகம்? நெத்தியே தெரியாம கிராப் வாரியிருக்கே....?'' என்று மேலே சட்டை போடாமல் திறந்த மார்புடன்கூடிய முதியவர் ஒருவர் பஸ்ஸிலிருந்து இறங்கும் போதே அவனை விசாரித்தார். அவர் தோளில் மண்வெட்டி இருந்தது. நின்று அவருக்குப் பதில் சொல்லிவிட்டு அப்புறம் வீட்டுக்கு நடந்தான் அவன். தெருவிலும் பலருக்கு நின்று நின்று பதில் சொல்ல வேண்டியிருந்தது. நடு வழியில் உயர்நிலைப் பள்ளியில் அவனோடு சேர்ந்து படித்த மாணவ நண்பன் ஒருவன் எதிர்ப்பட்டான். இப்போது அவன் விருதுநகர் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். அவன் கையில் பழைய 'திராவிட நாடு' இதழ்கள் அடங்கிய பழுப்பேறின 'பைண்டு' வால்யூம் ஒன்று இருந்தது. அந்தத் தடித்த வால்யூமின் மேலட்டையில் கறுப்பு சிவப்பு நிறம் மேலும் கீழுமாகக் கலந்த எழுத்துக்களில் 'திராவிட நாடு தொகுப்பு ஒன்று' என்றும் பெரிதாக எழுதப்பட்டிருந்தது. பாண்டியன் அவனை விசாரித்தான். குரலில் கேலி இருந்தது: ''என்ன அழகமுத்து? பழசெல்லாம் ஒண்ணு விடாமத் தேடித் தேடிப் படிக்கிறாப்பிலே இருக்கு?''

''ஆமாம்! இல்லாட்டி உன்னைப் போலத் தமிழ் எதிர்ப்பு அணியிலே சேர்ந்திடுவேனு என்ன? வடவர் ஆதிக்க வண்டவாளங்கள் தண்டவாளம் ஏறிடச் செங்குருதி பெருக்கும் பைந்தமிழர் படையின் முதல் போர் முரசு இது! மறந்து விடாதே....'' என்று அழகமுத்து பதிலை ஆரம்பிக்கவே பாண்டியன் அடக்க முடியாமல் சிரித்துவிட்டான். அழகமுத்து இன்னும் கடந்த காலத்திலேயே இருப்பது புரிந்தது.

''இந்தா பாரு... பஸ்ஸிலேருந்து இறங்கினதும் இறங்காததுமா, ஒரு பிரசங்கம் கேட்க எனக்கு நேரமில்லே அழகமுத்து! அர்த்தமுள்ளதா ஏதாவது இருந்தால் சொல்லு'' என்று கூறி அழகமுத்துவிடம் இருந்து தப்பினான் பாண்டியன். அமைச்சர் கரியமாணிக்கத்துக்குக் கௌரவ டாக்டர் பட்டம் தருவதைத் தானும் தன்னைச் சேர்ந்த மாணவர்களும் வரவேற்பதாக அழகமுத்து போகிற போக்கில் பாண்டியனின் காதில் விழும்படி உரத்துக் கூறினான். அவன் தன்னை வம்புக்கு இழுப்பது பாண்டியனுக்குப் புரிந்தது.

பாண்டியன் போய்ச் சேர்ந்தபோது வீட்டில் யாருமில்லை. பின்னால் மாட்டுக் கொட்டத்தில் வீட்டு வேலையாள் அய்யாவு பருத்தி விதை ஆட்டிக்கொண்டிருந்தான்.

''வா தம்பி, ஐயா, அம்மா, தங்கச்சி எல்லாரும் வெள்ளனவே எந்திரிச்சி மொளவாத் தோட்டத்துக்குப் போயிட்டாங்க. இன்னிக்கி மொளவா பறிக்கிறாங்க.... பொழுது சாயறத்துக்கு முன்னேதான் வருவாங்க. நீ வர்றதா கடிதாசி கிடிதாசி எதுவும் போடலியா?'' என்று வரவேற்றான் அய்யாவு.

பையைக் கூடத்துத் திண்ணையில் வைத்துவிட்டுக் கிணற்றடிக்குப் போய்த் தண்ணீர் இறைத்து முகம் கழுவியபின் பல் விளக்குவதற்காக வேப்பங் குச்சி ஒடித்துக் கொண்டு வந்த பாண்டியன், தலையில் முண்டாசும், முழங்காலுக்கு மேலே தூக்கிக் கட்டிய வேட்டியுமாகக் கிழக்குப் பக்கத்து வீட்டுக்காரரான சன்னாசித் தேவரை எதிர்கொள்ள நேர்ந்தது. அந்தக் கிணறு கிழக்கு வீட்டுக்கும் பாண்டியனின் வீட்டுக்கும் பொதுக் கிணறு. சன்னாசித் தேவர் கிணற்றடிக்குக் குளிக்க வந்திருந்தார்.



சத்திய வெள்ளம்

எவ்வளவு செழிப்பாக வளர்ந்திருந்தாலும் ஒவ்வொரு தாய்க்கும் தன் மகனைத் தான் அல்லாத பிறர் பேணிய வேளைகளில் எல்லாமே அவனை இழக்கச் செய்துவிட்டது போல் தோன்றுவது தவிர்க்க முடியாதது போலிருக்கிறது. □

அவரை அன்போடு விசாரித்தான் பாண்டியன்.

''ஏன் தம்பீ! யூனிவர்ஸிடியிலே அத்தினி கலாட்டாவுக்கும் நீதான் காரணம்னு பேசிக்கிறாங்களே...? ஒழுங்கா லட்சணமா படிப்பைக் கவனிப்பீங்களா, அதை விட்டுப்பிட்டு விடிஞ்சு எந்திரிச்சா போராட்டம், கிராட்டம்னு ஏன் அலையணும்? தேவமாருலே இப்பத்தான் ஏதோ நாலு பேரு வக்கீல், டாக்டரு, அது, இதுன்னு படிச்சு முன்னுக்கு வந்துக்கிட்டிருக்கோம்.... அது பொறுக்கலியா உனக்கு?'' என்று ஆரம்பித்தார் சன்னாசித் தேவர். சன்னாசித் தேவர் உள்ளூர் ஃபார்வர்ட்பிளாக் பிரமுகர். அப்பாவுக்கு நண்பர். அவருடைய மன நிலையைப் பாண்டியன் அறிவான். பக்கத்து வீட்டுக்காரரை விரோதித்துக் கொண்டு விவாதிப்பதிலிருந்து பல் துலக்குகிற காரியம் அவனை வசதியாகத் தப்புவித்தது. அவன் பல் துலக்கி முடித்தபோது சன்னாசித்தேவர் குளிக்கத் தொடங்கியிருந்தார். அவரிடம் கையசைத்துக் குறிப்பினாலேயே சொல்லிக் கொண்டு வீட்டுக்குள் வந்தான் பாண்டியன். சமையல் அறையில் கம்பங்கஞ்சி இருந்தது. மடக்கில் தயிரை ஊற்றிக் கம்பங்கஞ்சியை ஒரு கை பார்த்ததும் சுகமாகத் தூக்கம் வந்தது. அய்யாவுவிடம் சொல்லிவிட்டுத் திண்ணையில் போய்ப் படுத்த பாண்டியன் மறுபடியும் கண் விழித்தபோது பகல் இரண்டு மணிக்கு மேலாகியிருந்தது. முதல் நாள் இரவு மணவாளனின் வீட்டில் பேசியே கழித்துவிட்டதால் நல்ல உறக்கமில்லாமல் சோர்ந்திருந்த அவனை பஸ் பயணம் வேறு களைப்படையச் செய்திருந்ததால் அடித்துப் போட்ட மாதிரித் தூங்கியிருந்தான். அவன் விழித்தபோது கோணிப் பைகளோடு மிளகாய்த் தோட்டத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான் அய்யாவு. குளித்துவிட்டு வீட்டைப் பூட்டிக் கொண்டு தானும் அங்கே வருவதாக அவனிடம் சொல்லி அனுப்பிவிட்டுக் கிணற்றடிக்குச் சென்றான் பாண்டியன்.

சில மாதங்களாக ஹாஸ்டல் பாத்ரூமில் ஒரு வாளி வெந்நீரில் குளித்துப் பழகிவிட்டுத் திடீரென்று வாளியால் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்துக் குளிப்பது சிரமமாகவும் அசௌகரியமாகவும் இருப்பது போல் பட்டது. இறவைக் கயிறு கைகளில் அறுப்பது போல் உறுத்தியது. அரையில் சின்னஞ் சிறு துண்டுடன் அவன் குளித்துக் கொண்டிருக்கும் போது சன்னாசித் தேவர் மகள் கருப்பாயி குடத்தோடு தண்ணீருக்கு வந்தாள். ஊரிலிருந்து இரண்டரை மைல் தள்ளி இருக்கிற பருத்திக் காட்டுக்குத் தனியே போய்ப் பருத்தி எடுத்துக் கொண்டு இருட்டியபின் வீடு திரும்புகிற அளவு தைரியமுள்ள அவள் தான் குளித்துக் கொண்டிருந்ததைப் பார்த்துக் கூச்சத்தோடு திரும்ப முயலுவதைக் கண்டு அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது.

''ஏ, கருப்பாயி.... ஏன் திரும்பறே? வந்து தண்ணி எடுத்துக்கிட்டுப் போ......''

அவள் திரும்பிப் பார்த்துச் சிரித்துவிட்டு, ''குளியுங்க... பெறவு வந்து தண்ணி எடுத்துக்கிடுதேன்'' என்று கூறிக் கொண்டே ஓட்டமும் நடையுமாக விரைந்தபோது அவளை அவனால் புரிந்து கொள்ள முடியாமலிருந்தது. சாதாரணமாக 'நீ, நான்' என்று ஒருமையில் பேசுகிறவள் திடீரென்று மரியாதைப் பன்மையில் 'குளியுங்க' என்றதும், இயல்பை மீறி வெட்கப்பட்டதும் அவனுக்குப் புதுமையாயிருந்தன.

சின்ன வயதில் ஒரு சமயம் இந்தக் கருப்பாயி வாய்த் துடுக்கோடு 'நீளமூக்குப் பாண்டி' என்று தன் மூக்கு நீளமாயிருப்பதை நையாண்டியாக நாலைந்து வேறு தெருச் சிறுமிகளையும் உடன் வைத்துக் கொண்டு கேலி செய்தபோது அவளைத் தான் ஓட ஓட விரட்டிக் கன்னத்தைத் திருகியிருப்பதை நினைத்துக் கொண்டான் பாண்டியன். இப்போது அவள் மிகவும் அந்நியமாக நடந்து கொண்டவிதம் அவனுக்குப் புரியாத புதிராகவே இருந்தது.

குளித்துவிட்டு உள்ளே சென்று கைக்குக் கிடைத்த ஒரு கைலியைக் கட்டிக் கொண்டு, கை வைத்த கலர் பனியன் ஒன்றையும் போட்டுக் கொண்டபின் வேண்டுமென்றே அவன் மீண்டும் கிணற்றடிக்குப் போனான். கருப்பாயி குடத்தின் கழுத்தில் கயிற்றைச் சுருக்குப் போட்டுக் கொண்டிருந்தாள்.

''என்னது.... கருப்பாயி...? நீ அப்பிடிப் பயந்துக்கிட்டு ஓடினதை நினைச்சா சிரிப்பு வருது எனக்கு! ரொம்ப நாளைக்கு முன்னே 'நீளமூக்குப் பாண்டி'ன்னு சொல்லிப்பிட்டு நான் துரத்தறப்ப ஓடற மாதிரியில்லே ஓடினே.....?'' என்று பேச்சுக் கொடுத்தான் அவன். அவள் சிரித்தாள். அவனை நேருக்கு நேர் ஏறிட்டுப் பார்க்கப் பயந்தாற்போல் கிணற்றில் இறங்கும் குடத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''வீட்டிலே எல்லாரும் மொளவா எடுக்கப் போயிட்டாங்க போலிருக்கே? எங்ஙனே மதியத்துக்குச் சாப்பிடப்



சந்திரிகாவுடன் மட்டுமே
அழகு நிறைவு பெறுகிறது
சந்திரிகா
ஆயுர்வேதிக் டாய்லட் சோப்
CHANDRIKA
AYURVEDIC SOAP
சந்திரிகா பிராடக்டஸ் சென்னை-10







அன்னை அபிராமி-என்ற பேசும் படத்தைப் பார்த்தேன். அதில் வரும் உரையாடல், பாடல்கள், இசை இம்மூன்றும் தரமானவை. கலைப் பாங்குடையவை. கவிஞர் சுப்பு ஆறுமுகம் இயற்றிய காவடிச் சிந்து ஒன்றே போதும்.

பகுத்தறிவுக்கு ஒவ்வாத அற்புதங்களைக் காட்டிப் பக்தியை வளர்க்கக் கூடாது என்ற கொள்கையுடையவன் நான். ஆனால், இந்தப் படத்திலே இம்மென்றால் அற்புதம். ஏன் என்றால் அற்புதம். தடுக்கி விழுந்தால் அற்புதங்களின் மேல்தான் விழ வேண்டும். இந்த அசாதாரணமான அற்புதக் கோவையைக் கருவியாகக்கொண்டு எப்படியோ மயிர்க்கூச்செறிக்கும் பக்தியை உண்டாக்கி விருக்கிறார் டைரக்டர் வேலுமணி. அற்புதத்தில் எல்லாம் அற்புதம் அவருடைய சாதனை, அந்தச் சாதனைக்கு என் பாராட்டு.

எஸ். மகராஜன்
நீதிபதி
உயர்நீதி மன்றம், சென்னை

'அன்னை அபிராமி' என்னும் படத்தைப் பார்த்து மகிழ்ந்தோம். சமூக, சமய அரசியல் பிணைப்பு உள்ள கதைக்கு, சிறந்த வசனங்களும், கருத்துச் செறிவுள்ள பாடல்களும், ஆங்காங்கு உயிரூட்டி வியக்க வைக்கின்றன. அபிராமி, அந்தாதி, பட்டினத்தார் பாடல்களுக்கு விளக்கம் தரும் வகையில் சிறப்பான அம்சங்கள் சிருஷ்டிக்கப் பட்டிருக்கின்றன. ஆஸ்திக, நாஸ்திக சம்வாதம் மிகச் சிறந்த அம்சம். தற்கால அறிவுலகத்திற்கும் பகுத்தறிவு என்றால் பக்தியோடு இணைந்த அறிவுதான் பகுத்தறிவு என்பதைத் தெளிவூட்டும் சித்திரம்.

பக்தர்களும், பண்டிதர்களும், பாமரர்களும், பகுத்தறிவாளர்களும் அவசியம் பார்க்க வேண்டிய சித்திரம்.

இதைத் தயாரித்த அனைவருக்கும் எம் பாராட்டுதலும், ஆசிகளும்.

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத
ஸ்வாமிகள்

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை

'அன்னை அபிராமி' என்னும் திரைப்படம் மிகச் சிறப்பாக இருக்கிறது. இதில் திருக்கடவூர் அபிராமியின் அருள்பெற்ற ''அன்னை அபிராமி''யாக நடிக்கும் கே. ஆர். விஜயா அவர்கள் அன்னை அபிராமியாகவே மாறிவிட்டிருக்கிறார். திரைக்கதையும், வசனமும், பாடல்களும் உள்ளத்தைக் கவர்கின்றன.

நாத்திகம் தலை தூக்கி விருக்கும் இக்காலத்தில் ஆத்திகத்தைத் தூண்டி மக்களிடையே பக்தியைப் பரப்பும் வகையில் இப்படம் முன்னணியில் நிற்கிறது. தேவியின் அருளின் சிறப்பு படத்தில் ஆரம்பம் முதல் கடைசி வரை துலங்குகிறது. அனைவரும் குடும்பத்துடன் சென்று கண்டு களிக்க வேண்டிய முதல் தரமான படம். இதில் வரும் சிவ சக்தி நடனம் போற்றத்தக்கது. வேலுமணி அவர்களின் டைரக்ஷன் அபாரம்.

ஒரு சிறுவன் அன்னை அபிராமியின் சமாதியின் முன் அமர்ந்து பாடும்போது அவன் கையிலுள்ள கஞ்சிராவில் அபிராமியின் வாழ்க்கைச் சம்பவங்கள் கண்ணாடியில் தெரிவதுபோல் தெரிகின்றன. மற்றும் அபிராமி, சிவபார்வதி நடனத்தைக் கண்டு கொண்டிருக்கையில் அபிராமியின் கண்களில் வெறும் பார்வையும் தோற்ற மளிக்கிறார்கள். இவை சிறந்த டைரக்ஷனுக்கு நற்சான்றுகள்.

அனைவரும் பார்த்து அம்பிகையின் அருள் பெறவேண்டிய முதல் தரமான படம்.

ஹர. கி. வாலம்



அசோக் பிரதர்ஸ்
அளிக்கும்

ஸ்ரீ காமாக்ஷி ஏஜென்ஸீஸ்

சென்னை
சித்ரா
ஸ்ரீமுருகன்
சயானி
கமலா
மற்றும் தமிழ்நாடெங்கும்

அன்னை அபிராமி

திரைக்கதை, டைரக்ஷன்
ஜி.என்.வேலுமணி

aries


போறீங்க....? எங்க வீட்டுக்கு வாரீங்களா?'' என்று அவன் முகத்தைப் பாராமலே கேட்டாள் அவள்.

''நீ கேட்டதிலேயே பசி ஆறிப் போச்சு தாயே! அருமையான கம்பங் களியும் தயிரும்.... வயித்திலே அப்பிடியே இருக்கு.... மூக்குக் கடையிலே ஒரு டீ குடிச்சுப் போட்டு நானும் மொளகாத் தோட்டத்துக்குப் போறேன் ஆத்தா.'' வேண்டுமென்றே அவளைச் சண்டைக்கு இழுப்பதற்காக உள்ளூர் வழக்கான ஆத்தா, தாயே, போன்ற மரியாதைச் சொற்களைப் போட்டுப் பேசினான் அவன். அவள் சகஜமாகத் தன்னை நீ, உன்னை என்று ஒருமையில் பேசாமல் திடீர் மரியாதை கொடுத்ததற்குப் பழி வாங்குவது போலவே அவன் பேசியது அமைந்திருந்தது. ஆனால் அந்தக் கிண்டலை யெல்லாம் அவள் புரிந்து கொண்டதாகவே காண்பித்துக் கொள்ளவில்லை.

''காலேஜிலே படிக்கிறவுகளுக்கு, மொளவாத் தோட்டத்துலே என்ன வேலை.....?'' என்று திரும்பிப் பார்த்துக் கேட்டுவிட்டு வெளேரென்ற அழகான பல் வரிசை தெரியச் சிரித்தாள் கருப்பாயி.

''ஆமா... நீ இப்பல்லாம் பருத்தி எடுக்கப் போறதில்லையா?''

''வயசுக்கு வந்தப்புறம் ஐயா போவக் கூடாதின்னிட்டாக....'' — இதையும் எங்கோ பார்த்தபடிதான் சொன்னாள் அவள். சொல்லிவிட்டுச் சிறிது தயங்கி நின்றபின், ''நான் வாரேன்'' என்று போய்ச் சேர்ந்தாள். அவளுடைய மாறுதல்களும், புதிய மரியாதைகளையும் புதிய வெட்கங்களையும் அடைந்திருந்த பருவமும் இரசிக்கத் தக்கவையாக இருந்தன. தெரு முக்குக் கடையில் டீ குடித்துவிட்டு மிளகாய்த் தோட்டத்துக்குப் புறப்பட்டான் பாண்டியன். இருபுறமும் இடையிடையே கொத்துமல்லி பயிரிட்டு வளர்த்திருந்த சின்னப் பருத்திச் செடிகளின் நடுவே ஒற்றையடிப் பாதையில் நடந்து செல்லும் அநுபவம் சுகமானதாக இருந்தது. பருத்தி பூத்திருக்க அழகும் கம்மென்று பச்சைக் கொத்துமல்லி மணந்த மணமும் இதமான உணர்வைத் தந்தன. பருத்திக் காட்டில் வேலை செய்து கொண்டிருந்த இரண்டொரு கிராமத்துப் பெண்கள் அவனை நிமிர்ந்து பார்த்துவிட்டு மறுபடியும் தங்கள் வேலைகளில் ஈடுபட்டார்கள். மல்லிகைப் பந்தலின் மலை வளமும், ஈரமும், குளிர்ச்சியும் அளித்த மந்தமான சுகத்தைவிட இந்தக் கரிசல் காட்டு வெப்பமும், செவற்காட்டுச் செம்மையும், மண்



வாசனைகளும் அவனை இயல்பான அறிமுகமான இடத்தில் இருக்கும் சுபாவமான உணர்வுகளைக் கொள்ளச் செய்தன. உலகின் நாகரிக வேகங்களையும், ஃபாஷன்களையும் பற்றிய கவலையோ, அக்கறையோ இல்லாமல் மண்ணை நம்பி உழுது பயிரிட்டுக் களை எடுத்து அமைதியாகவும், பேராசைப்படாமலும் வாழும் ஒரு மக்கள் கூட்டத்தைப் பார்ப்பது மனத்துக்குத் தெம்பளித்தது. மூவாயிரம் ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்கும் மல்லிகைப் பந்தல் பல்கலைக் கழகத் துணைவேந்தரைவிட அரைப்படி கேழ்வரகுக்காகவோ, முக்கால் படி சோளத்துக்காகவோ காட்டில் வெயிலில் வேலை செய்யும் இந்த விவசாயக் குடி மக்கள் நாணயமானவர்களாக இருக்க முடியும் என்று தெரிந்தது. ஒழுக்கமும், நேர்மையும், நாணயமும், இல்லாத படித்தவர்களைவிடப் படிப்பில்லாமல் ஒழுக்கமும், நேர்மையும் நாணயமும் உள்ள பாமரர்களே சமூகத்தைப் பலப்படுத்துகிறவர்களாக இருப்பார்கள் போலிருந்தது. மல்லை. இராவணசாமியைப் போல் உழைக்காமல் பிறரைச் சுரண்டிக் கொழுக்கிறவர்கள் இந்தக் கரிசல் காட்டில் இல்லை. பண்புச் செழியனையும், பொழில்வளவனையும் போல் மற்றவர்களுக்கு வெறும் மொழி இன வெறிகளை ஏற்றி அதில் தாங்கள் குளிர் காய வசதி செய்து கொள்ளும் தளுக்குப் பேர்வழிகளும் இந்தக் கரிசல்காட்டு உழைப்பாளிகளில் இருக்க வழியில்லை. விரிவுரையாளர் மதனகோபாலைப்போல் பிற பெண்களைக் கழுகுக் கண்களோடு வட்டமிடும் சமூகக் கயவர்களை இங்கே காண முடியாது. இது கிராமம். எல்லாரும், எல்லாரையும் அறிந்துகொண்டு எல்லாருக்கும் உதவும் நெருக்கமானதோர் எல்லையில் யாரும் யாரையும் ஏமாற்றி வளர வாய்ப்பில்லை என்பது போல் கண்ணுக்கெட்டிய தூரம் பரவிக் கிடந்த அந்தக் கரிசல் காட்டில் ஆட்கள் நெருங்கி நின்று உழைத்துக் கொண்டிருந்தார்கள்.

அவன் தங்களுக்குச் சொந்தமான மிளகாய்த் தோட்டத்துக் கிணற்றடிக்குப் போய்ச் சேர்ந்தபோது பகல் கழிந்து மாலை நேரம் வந்து வெயில் தணிந்திருந்தது. ஊரிலிருந்து அந்த இடம் சில மைல்கள் தள்ளியிருந்தது. கிணற்றடி மேட்டில் செக்கச் செவேரென்று மிளகாய்ப்பழம் அம்பாரம் குவித்திருந்தது. தங்கை மாரியம்மாள் தொலைவில் அவனைப் பார்த்ததுமே எதிர்கொண்டு ஓடி வந்தாள். முகம் மலர வரவேற்றாள்.

''ஏண்டா இப்பிடி இளைச்சுப் போயிச் சோகை தட்டின மாதிரி வெளுத்திருக்கே.....?'' என்று தாய் அவன் உடம்பைச் சுட்டிக்காட்டி விசாரித்தாள். எவ்வளவு செழிப்பாக இருந்தாலும் ஒவ்வொரு தாய்க்கும் தன் மகனைத் தான் அல்லாத பிறர் பேணிய வேளைகளில் எல்லாமே அவனை இளைக்கச் செய்துவிட்டது போல் தோன்றுவது தவிர்க்க முடியாதது போலிருக்கிறது. அவனுடைய மதியச் சாப்பாட்டைப் பற்றி உடனே விசாரித்தாள் தாய். வீட்டில் அவளே வைத்துவிட்டு வந்திருந்த கம்பங்களியையும் .தயிரையும் பிசைந்து சாப்பிட்டதைச் சொன்னான் அவன். சன்னாசித் தேவர் மகள் தன்னைச் சாப்பிடக் கூப்பிட்டதையும் அளவு கடந்து வெட்கப்பட்டதையும்கூட அவன் தாயிடம் சிரித்துக் கொண்டே தெரிவித்தான்.

''வயசு வந்த பொண்ணு வெக்கப் படாம என்ன செய்யும்? நீ மட்டும் என்னவாம்? இன்னும் சின்னப் பையனின்னு நினைச்சுக்கிட்டிருக்கே? உனக்கு என்ன வயசு இப்ப....? கல்யாணங் கட்டிக்கிட்டிருந்தா இதுக்குள்ளார...?''

அவன் தாய் இப்படி எல்லாம் தாராளமாக அவனிடம் பேசுவது உண்டு. நல்ல வேளையாக அப்போது சற்றே விலகித் தொலைவில் மிளகாய் பறித்துக் கொண்டிருந்த அவன் தந்தை சுப்பையாத் தேவர் ஒரு கோணிப் பையோடு அவனருகே வந்து, ''இந்தா நீயும் ஒரு சால் பிரித்துக் கொண்டு மொளகா எடு. நேரமாகுது..பொழுது சாயிறதுக்குள்ளே முடியணும்.....'' என்று கோணிப் பையை அவன் கையில் கொடுத்தார்.

''ஊரிலே இருந்து இப்பத்தான் வந்திருக்கான். உடனே அவனெ உங்க வெள்ளாமைக் காரியத்துக்கு வேலை ஏவுறீங்களே....?'' என்று தேவரைக் கண்டித்தாள் பாண்டியனின் தாய்.

தேவர் அதைப் பொருட்படுத்தவில்லை. அவர் சுபாவமே அப்படித்தான். வியக்கவும், உபசரிக்கவும், சம்பிரதாயமாக வரவேற்கவும் தெரியாத முரட்டு உழைப்பாளி அவர். உரமேறிய சரியான கரிசற்காட்டு விவசாயியான அவர் காலேஜில் படிக்கிற மகனை 'வந்தியா? சௌக்கியமா?' என்றுகூட விசாரிக்காமல் உடனே சால் பிரித்துக் கொடுத்து மிளகாய் எடுக்கச் சொல்லியது அவர் மனைவிக்குக் கோபமூட்டியது. பாண்டியனோ ஆத்தாளின் கோபத்தைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே தந்தை சொல்லியபடி சால் பிரித்து மிளகாய் எடுக்கத் தொடங்கினான். (தொடரும்)

ஈடில்லா இன்பம் காண ஆடவருக்கு உறுதுணை



எல்லையில்லா இன்பம், எங்கெங்கும் வெற்றி காணும் ஆடவருக்கே. உங்களுக்காகவே காத்திருக்கிறது ஆரோக்கியம்-வலிமை. வீரியம். வழிகாட்டுவது ஒகாஸா. வற்றாத இன்ப ஊற்று—அதுவல்லவா வாழ்வு! ஆடவருக்கு உண்டு ஒகாஸா. பெண்மணிக்கும் இருக்கிறது ஒகாஸா. தென்பைமீட்டு இன்பமூட்ட என்றுமே உண்டு நவீன டானிக் மாத்திரைகளான ஒகாஸா.

ஒகாஸா-ஹார்மோ-பார்மா லிமிடெட் லண்டன்-பெர்லின் தயாரிப்பு.

எல்லா முக்கிய மருந்துக் கடைகளிலும் கிடைக்கிறது.

ஒகாஸா பற்றிய இலவசத் துண்டுப் புத்தகம் பெற, எழுதுக:

OKASA CO. PVT. LTD.
P.O. BOX NO. 396, BOMBAY-1.



டாக்டர் என். எஸ். நரசிம்மன் வைத்தியத் துறையில் சிறந்த அனுபவமும் புகழும் பெற்று விளங்கியவர். எலும்புச் சிகிச்சைத் துறையில் வல்லுநரான இவர் சென்னை அரசாங்க பொது மருத்துவமனையில் சர்ஜனாகப் பணியாற்றினர். இந்திய சர்ஜன்கள் கழகத்தின் முன்னாள் தலைவர். அவரது பிரிவால் வருந்தும் அவரது மனைவியாருக்கும் மூன்று புதல்விகளுக்கும் நம் ஆழ்ந்த அனுதாபங்கள். இவரது மறைவைக் குறித்து ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஆர்த்தோபீடிக் டிபார்ட்மெண்டில், பிரின்ஸிபால் டாக்டர் எம். நடராஜன் தலைமையில் அனுதாபத் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. இவரது குமாரத்தி, Dr. Mrs. சங்கரி, பம்பாயில் வைத்தியத் துறையில் பிரபலமானவர்.

மூல நோயை

முற்றவிடாமல் நம்பிக்கையான

ஹெடன்ஸா

களிம்பு உபயோகித்து நிவாரணம் அடையுங்கள்;

—ரண சிகிச்சையையும் தடுங்கள்

Bensons-2141 TAM



துப்பறிவு

கோனஷ்டை

கோனஷ்டை தம் பெயருக்கேற்பக் கோனஷ்டை யான குணம் படைத்தவரோ, என்னவோ! கதை களில் மட்டும் கோனஷ்டைத்தனத்துக்குக் குறை வில்லை. அவரும் அவர் மனைவியும் சேர்ந்து நடத்தும் இந்தத் துப்பறிவு கன ஜோர்!

''இதைக் காட்டிலும் அழகான கதைகள் எத் தனையோ நான் படித்திருக்கிறேனே என்று சொல்லியும் மற்றும் பலவிதத்திலும் எனக்குத் தைரியம் உண்டாக்கி, இருகன்தனமிருந்தவனை இக்கதைகள் எழுதும்படி செய்வித்த என் னுடைய மனைவிக்கு!' என்று தமது கதைத் தொகுதியைச் சமர்ப்பணம் செய்யும் கோனஷ் டையைத் துப்பறிவு செய்து இலக்கியத் தரத் தைக் கண்டுபிடிப்பது உங்கள் பொறுப்பு. □

ஸஸ ரிரி கக மம
பப தத நிநி ஸஸ

என்று ஜண்டை வரிசை நீண்டு கொண்டே இருந்தது. என்னால் பொறுக்க முடியவில்லை.

''லலிதா! லலிதே! லலிதா! தே! தா! தே!'' என்று கூப்பிட்டேன்.

''வந்துவிட்டேன்! டேன்! டேன்! டேன்!'' என்று அவள் பதிலுக்குக் கத்தினாள். ஒரு நிமிஷத்துக்குள் நேரே வந்து நின்றாள்.

''பாட்டுப் படித்தது போதும். வீணை வாத் தியாரை அனுப்பிவிடு. உன்னிடம் ஒரு சமா சாரம் சொல்ல வேண்டும்.''

''அவரை நான் அனுப்ப வேண்டாம். உங்களுடைய குரலின் கருதியைக் கேட்ட வுடன் அவர் தாமாகவே'எழுந்து போய்விட் டார். என்ன சமாசாரம், சொல்லுங்கள்!'',

''வேறொன்றுமில்லை. தெருக் கோடியில் ரோஜா வர்ணத்தில் ஒரு வீடு கட்டியிருக் கிறார்களே, அந்த வீட்டில் நேற்று ராத்திரி திருட்டுப் போய் விட்டதாம்...''

''அங்கேயா! இதற்குள் அந்த வீட்டுக்கு யார் குடி வந்தார்கள்? இன்னும் கட்டி முடிய வில்லை என்றல்லவா எண்ணி யிருந்தேன்?''

''அது அப்பவே முடிந்து விட்டதே! குடி வந்து ஒரு வாரம்தான் ஆகிறது. அதற்குள் ஒரு திருட்டு! நல்ல கமல மோதிரமாம்.''

''பாவந்தான். ஆனால் அந்த விஷயத்தை இவ்வளவு ஆவலுடன் என்னிடம் சொல்லு வானேன்? நான் ஒரு கமல மோதிரம் வேண்டு மென்று கேட்டுக் கொண்டிருக்கிறேனே. இப் பொழுது இந்த மாதிரி திருட்டுக்குப் பயந்து அந்த ஆசையை விட்டுவிடுவதற்காகவா?''

''நன்றாயிருக்கு. நகைப் பைத்தியத்தை அவ்வளவு சுலபத்தில் மாற்ற முடியுமா?'.

''எனக்கு ஒன்றும் நகைப் பைத்தியம் கிடையாது. வீணை வாசிக்கிற விரலில் ஒரு மோதிரம் இட்டால் அழகா யிருக்குமே என்று கேட்டேன்...''

''வீணை வாசிக்கிற விரல் அல்ல, வீணை வாசிக்கப் போவதாக நீ எண்ணுகிற விரல். இன்னும் ஜண்டை வரிசையில்தான் அது சஞ் சாரம் செய்து கொண்டிருக்கிறது. ஒரு கீர்த் தனையைப் பிடிப்பதற்கு முன்னே, நல்லவேளை யாய், எனக்கு வயது நிரம்பிக் காது மந்த மாய்ப் போய்விடும்.''

''அது இருக்கட்டும். அந்த வீட்டுக்கார ருடைய பெயர் என்ன?''

''பெயரா? ராமச்சந்திர சாஸ்திரிகள் என்று யாரோ சொல்லிக் கேட்ட மாதிரி இருக்கிறது.''

''வக்கீல்தானே?''

''இருக்கலாம். ஏனென்றால் வாசலில் ஒரு 'போர்டு' பார்த்த ஞாபகமா யிருக்கிறது.''

''அப்படியானால் அவருடைய சம்சாரத் தின் பெயர் சீதாலக்ஷ்மி யல்லவா?''

இந்தக் குறுக்குக் கேள்விகளை யெல்லாம் நான் எதிர்பார்க்கவில்லை; தயாராக இல்லை. ''இதெல்லாம் எனக்கு என்னமாகத் தெரி யும்? எதற்காகக் கேட்கிறாய்?'' என்றேன்.

''அவர்களா யிருந்தால் எனக்கு நல்ல அறி முகம் உண்டு. என்னுடைய பாட்டி வீட்டுக்கு அடிக்கடி வருவார்கள். பால்யம் முதல் எனக் குத் தெரியும்.''

''அதற்காக என்ன செய்யப் போகிறாய்?''

''என்ன செய்வது? நமக்கு வேண்டிய வர்களுடைய வீட்டில் திருட்டு நடந்தால், அதைப் பற்றி அவர்களிடம் போய் விசாரிக்க வேண்டியது மரியாதை யல்லவா?''

''ஏதடா, இது! நீ போய்த் திடீரென்று எவர் வீட்டுக்குள்ளேயாவது நுழைந்த பிறகு, அவர்கள், நீ முன்பின் பாராத வேற்று மனி தர்களா யிருக்கப் போகிறார்கள். நீ எங்கே வந்தாய் என்று கேட்டால் பதில் சொல்ல முடியாமல் விழிக்கவேண்டி யிருக்கும்.''

'ஒன்றும் விழிக்க மாட்டேன். முதலி லேயே அங்கே போவேனா? அந்த வீட்டுக்கு

எதிர்த்த கட்டிடம்தானே எங்களுடைய லேடீஸ் கிளப். அங்கேயிருந்து வேலைக்காரப் பையனைப் போய் ஜாடையாய் விசாரித்து வரச் சொல்லி விட்டு, நான் பிறகுதான் போவேன். நீங்கள் ஒன்றும் கவலைப்பட வேண்டாம்.''


கவலைப்பட வேண்டாமாவது! நான் வேறு என்ன செய்கிறது? லலிதா ஒன்றைப் பிடித்து விட்டால், என்ன சொல்லியும் உபயோகமில்லை என்று எனக்குத் தெரியும். ஆகையால் ஆனது ஆகட்டும் என்று அத்துடன் விட்டு விட்டேன்.

அன்று சாயங்காலம் அவள் 'கிளப்'பிலிருந்து திரும்பி வருவதை நான் சற்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். என்ன நடந்ததோ, என்ன சொல்லப் போகிறாளோ என்று யோசனை. சந்தோஷத்துடன் கையைக் கொட்டிக் கொண்டு வந்தாள்.

''நான் விசாரித்தது நல்லதாய்ப் போய் விட்டது. அந்த அம்மாள்தான் என் பாட்டியின் சிநேகிதி சீதாலக்ஷ்மி. அவளை இன்றைக்குக் கிளப்பில் அங்கத்தினராகச் சேர்த்து விட்டேன்.''

''அது போகட்டும். திருட்டைப் பற்றி என்ன சொன்னாள்?''

''என்ன சொன்னாளா? என்ன சொல்லவில்லை? உங்களுக்குப் பாதி விஷயந்தான் தெரியும் போலிருக்கிறது. முழுதும் அந்த அம்மாள் என்னிடம் சொல்லி விட்டாள். ஆனால் போலீசாரிடம் இன்னும் ஒன்றும் தெரிவிக்கவில்லையாம். என்னைப் போக வேண்டாம் என்றீர்களே! போனதால்தானே சுவாரசியமான முழு சமாசாரமும் தெரிய வந்தது?''



''முழு சமாசாரம் என்ன? எனக்குத் தெரிந்த பாதி சமாசாரம் என்ன?''

''பெட்டியி லிருந்து கமல மோதிரம் திருட்டுப் போனதைத்தானே நீங்கள் கேள்விப்பட்டீர்கள்? ஆனால் அது வைத்திருந்த இடத்தில் எதைக் கண்டார்கள் தெரியுமா? அதற்குப் பதிலாக, திருடன் ஒரு பச்சை மோதிரத்தை வைத்து விட்டுப் போயிருக்கிறானாம். அது உங்களுக்குத் தெரியாதே? அவன் ஏன் அப்படிச் செய்தானோ; மறதியோ, கைப்பிசகோ, அல்லது வேண்டுமென்று செய்த காரியமோ, பகவானுக்குத்தான் அது வெளிச்சம்.''

இதை யெல்லாம் கேட்கக் கேட்க, எனக்கு உண்டான ஆச்சரியத்தைச் சொல்லி முடியாது. ''பச்சையாவது, மோதிரமாவது, வைத்து விட்டுப் போகவாவது! நல்ல பச்சையானால் கமலத்தைக் காட்டிலும் கிராக்கியாச்சே!'' என்றேன்.

''தன்னுடைய கல்லைப் போல் இதற்கு இரண்டு பங்காவது விலை இருக்குமென்று அந்த அம்மாள் சந்தோஷப்பட்டுக்கொண்டிருக்கிறாள்.''

''அப்படியானால் அதை உடனே போலீசாரிடம் தெரிவிக்க வேண்டாமா?''

''எதற்காகவாம்? ஒரு நஷ்டம் ஏற்பட்டால் போலீசாருடைய துணையைத் தேட வேண்டியதுதான். ஒரு லாபம் கிடைத்தால் அதைத் தமுக்குப் போடுவானேன்? தைரியம் இருந்தால் அந்தத் திருடன் வந்து தன் மோதிரத்தைக் கேட்கட்டுமே!''

''ரொம்ப நன்றா யிருக்கிறது உன்னுடைய வாதம்! திருடன் வைத்துவிட்டுப் போனதும் ஒரு திருட்டுச் சொத்தாகத்தானே இருக்கும்? அதை நாமே எடுத்துக் கொள்வதா? சொந்தக்காரனைக் கண்டுபிடிக்க வேண்டாமா?''

''இந்த மாதிரிதான் அவளுடைய புருஷனும் சட்டம் பேசினாராம். ஆகையால், வேறொன்றும் செய்ய வேண்டாம், சொந்தக்காரனையும் திருடனையும் நான் கண்டுபிடித்து விடுகிறேன் என்று அந்த அம்மாளிடம் ஏற்றுக் கொண்டு வந்திருக்கிறேன்.''

''நீயா?'' என்று ஆச்சரியப்பட்டேன்.

லலிதா பதில் சொல்லாமல், கண்ணாடிக்கு எதிராக உட்கார்ந்து கொண்டு, தன்னுடைய கோணல் வகிட்டைத் தொட்டுத் தொட்டுப் பிரியத்துடன் தடவிக் கொடுத்து இன்னும் சற்றுக் கோணலாக்கிப் பார்த்தாள்.

''வகிட்டின் காரியத்தைக் கொஞ்சம் நிறுத்தி, இதை எனக்குத் தெளிவாகச் சற்று சொல்லு. நீ ஏற்றுக் கொள்ளவாவது? நீ வீடு வீடாகப் போய் விசாரிக்கப் போகிறாயா, அல்லது இருந்த இடத்திலிருந்து மனோ சக்தியைச் செலுத்தப் போகிறாயா?'' என்று பரிகசித்தேன்.

''அது எப்படியோ? துப்பு அறிவதில் மற்றவர்களுக்குத் தெரிந்தது எனக்குத் தெரிகிறதா, இல்லையா, பாருங்களேன். வேறு ஒன்றும் இல்லாத போனாலும், உங்களுடைய சிநேகிதர், இன்ஸ்பெக்டர் மௌனிக்கு உள்ள சாமர்த்தியம் எனக்கு இல்லாமல் போகிறதா, பார்க்கலாம்.''

''ஏனென்றால் சில துப்பறியும் கதைகளை நீ படித்து விட்டதிலிருந்தோ?''

''சில கதைகளா? இந்த ஐந்தாறு வருஷங்களாய், மூன்று பாஷைகளிலும் வெளி வருகிற கதைகளை ஒன்று விடாமல் படித்துக் கொண்டு வந்திருக்கிறேனே?''

''மூன்று பாஷைகளா? உனக்கு மூன்று பாஷைகள் என்ன தெரியும்?''

''ஆமாம், தமிழ் ஒன்று, இங்கிலீஷ் ஒன்று. இதைத் தவிர, சில பேர்கள் சில பேரென்றால் நீங்களில்லை, உங்களைச் சொல்வேனா? — வேறு சில பேர்கள் தாங்கள் அசல் தமிழ் எழுதுவதாகச் சொல்லிக் கொண்டு எழுதுகிற பாஷை இருக்கிறதே, அது ஒன்று. ஆக மூன்று.''

நான் சற்றுக் கண்டித்துப் பேசினேன். ''இதோ பார், லலிதா! இது ஒரு பெண்ணாய்ப் பிறந்தவள் செய்யக் கூடிய காரியமில்லை. விளையாட்டுத்தனமாய், நீ தலையிட்டுக்கொள்ளாதே. நாளைக்குக் காலையில் நான் போய் விசாரித்து விட்டு வருகிறேன்.''

''உங்களிடம் அவர்களுக்குப் பரிச்சயம் இல்லையே. நீங்கள் கேட்டால் சொல்லுவார்களா? நானும் கூட வருகிறேன்.''

''வேண்டாம்! மௌனியிடமிருந்து ஓர் இன்ஸ்பெக்டர் யூனிபாரத்தைக் கடன் வாங்கிப் போட்டுக் கொண்டு, போலீஸ் தோரணையில் போய்க் கேட்கிறேன். அப்பொழுது ஒன்றையும் மறைக்க மாட்டார்கள்'' என்று சொல்லி, மேல் பேச்சை நிறுத்தினேன்.

மறுநாள் காலையில் நான் கிளம்பிப்போய் விசாரித்துவிட்டு வருவதற்கு முன் மணி பதினொன்று ஆகி விட்டது. இன்னும் போஜனம் செய்யாமல் நான் சொல்லப் போவதைக் கேட்பதற்காக லலிதா ஆசையுடன் காத்திருந்தாள்.


''நான் அப்பொழுதே சொன்னேனே, இது ஒரு ஸ்திரீ ஏற்றுக் கொள்ளக் கூடிய காரியமில்லை என்று? அந்த வீட்டுப் புருஷரை மடக்கி வெருட்டிக் கேட்டபோதுதான் முழு உண்மையும் வெளிப்பட்டது. அவர்கள் பெட்டியில் என்ன இருந்தது தெரியுமோ? அந்தப் பச்சை மோதிரத்தையும் தவிர? ஜாடாவாக அடிக் கணுவில் வெட்டப்பட்ட யாருடைய மோதிர விரலோ ஒன்று இருந்ததாம்! ஆகையால்தான் அவர்கள் பயந்து கொண்டு உடனே போலீசாரிடம் சொல்லவில்லை. கமல மோதிரம் கெட்டுப் போனதைப் போலீஸ்காரர்கள் நம்பாமல், தாங்கள்தான் நகைக்கு ஆசைப்பட்டு மற்றொருவருடைய விரலை வெட்டினதாகத் தங்கள் மேல் குற்றம் சுமத்தி விட்டால் என்ன செய்கிறது என்கிற அச்சந்தான்'' என்று நான் கேள்விப்பட்டதையும், வகிப்பதையும் சொன்னேன்.

''வெட்டின விரலா? ஐயோ! பெட்டியெல்லாம் ரத்தம் கொட்டி யிருக்குமே? நல்ல வேளை, நான் பெட்டியைப் பார்க்கவில்லை'' என்று சொல்லி லலிதா, தேகம் முழுவதும் சிலிர்த்தாள்.

''அது நிஜம். இனிமேலாவது இந்த விஷயத்தை விட்டுவிடு. நமக்கு என்னத்திற்கு இது? வா, நேரமாகி விட்டது, சாப்பிடப் போகலாம்'' என்று அழைத்துக் கொண்டு போனேன்.

இருந்தாலும் அன்று சாயங்காலம் லலிதா என்ன செய்யப் போகிறாளோ என்று எனக்


நியூட்ரின் வண்ணம் தீட்டும் போட்டி!
444 முத்திரைப் பரிசுகள் பெறலாம்!
போட்டி முடிவு தேதி
டிசம்பர் 31, 1972
உங்கள் டீலரிடமிருந்து போட்டித்தாளை இன்றே வாங்குங்கள்!
NCH-39A/72 TAM
வயதுக்கேற்ப, மூன்று குழுக்கள்:
'ஏ' 8 வயதுக்குள்
'பி' 9லிருந்து 10 வயதுக்குள்
'சி' 11லிருந்து 14 வயதுக்குள்
முதல் பரிசுகள்-3
ஒவ்வொன்றுக்கும் ரூ. 501/-
ரொக்கம் + கைக்கடிகாரம் + பாக்கெட் ட்ரான்ஸிஸ்டர்
இரண்டாம் பரிசுகள்-9
கைக்கடிகாரங்கள்
மூன்றாம் பரிசுகள்-99
பாக்கெட் ட்ரான்ஸிஸ்டர்கள்
மற்றும் 333 சிறப்புப் பரிசுகள்
மிகவும் சுலபம்!
"நியூட்ரின் வண்ணம் தீட்டும் போட்டி"
பரிசுக்குரிய ஓவியங்கள், சிறந்த ஓவியர்களின் குழுவால் தேர்ந்தெடுக்கப்படும்.
இன்றே வண்ண ஓவியம் தீட்டுங்கள்—
நீங்களே பரிசைப் பெறுபவராகலாம்!





மூன்றாவது பரிசுகள் பெறுவோர் :
(ஒவ்வொருவருக்கும் ரூ. 15-00 அனுப்பப்படுகிறது)

1. திரு ஆர். சுந்தரம்
9, திருவேங்கடநாயகன் தெரு
ராயபுரம், சென்னை-13

''கலசங்களும் தரையில் பதித்துள்ள கற்களும் தவிர மற்றவை பிளாஸ்டர் ஆஃப் பாரிஸினால் ஆனவை. புத்தகம் தைக்கும் ஊசி, சிறிய கத்தி முதலியவைகளைக் கொண்டு சிறிய பாகங்களாகத் தயாரித்து இணைக்கப்பட்டது கோயில்'' என்று எழுதியுள்ளார் திரு ஆர். சுந்தரம்.



2. குமாரி வி. எஸ். நிர்மலா
மேற்பார்வை திரு வி. ஆர். ஸ்ரீநிவாஸன்
சப்-போஸ்ட்மாஸ்டர்
காட்பாடி எக்ஸ்டென்ஷன்
வட ஆர்க்காடு மா.வ. 632006

நெருப்புக் குச்சிகளினாலேயே தயாரான வீடு.

3. திரு தி. ச. வேங்கடராமன்
ஏ-64, அமர் காலனி
லஜ்பத் நகர்-4, புது தில்லி-24

வீடு கட்டும்போது கழிக்கப்பட்ட நாக்பூர் தேக்கு மரத் துண்டுகளில் மொத்தம் எழுபத்தோரு துண்டுகளைத் தக்கபடி செதுக்கி ஒருங்கிணைக்கப்பட்டது. உயரம் ஓர் அடி பத்து அங்குலம். செய்து முடிக்க ஒரு மாதம் ஆயிற்று.

குக் கவலைதான். ஆனால் பலவிதம் எண்ணினேனே ஒழிய யதார்த்தத்தில் அன்று நடக்கப்போவதை நான் எதிர்பார்க்கவில்லை.

தீபம் ஏற்றுகிற வேளையாக இருக்கும். லலிதா கண்களைப் பிசைந்து கொண்டு மூச்சுத் திணற மாடிப் படி ஏறி வந்து, ''ஐயோ! அந்தப் பாவியிடம் உங்களைக் காட்டிக் கொடுத்து விட்டேனே! இனி நாம் ஒரு க்ஷணம் இங்கே தாமதிக்கக் கூடாது. எங்கேயாவது ஓடிப் போக வேண்டும். புறப்படுங்கள் சீக்கிரம் புறப்படுங்கள்'' என்று வாய் குழற மன்றாடினாள்.

நான் திடுக்கிட்டு, ''என்ன சமாசாரம்?'' என்று கேட்டேன்.

''அந்த சீதாலட்சுமியிடம், இந்த மாதிரி 'என்னுடைய அகத்துக்காரரல்லவா இன்று காலையில் இன்ஸ்பெக்டர் வேஷம் போட்டுக் கொண்டு உங்களை வெருட்டி உண்மையைக் கண்டுபிடித்தார்?' என்று என்னுடைய பெருமையை வெளியிட்டேன். அப்பொழுது அந்தப் பாவி என்ன செய்தாள், தெரியுமோ? இதுதான் நாங்கள் தப்பித்துக்கொள்வதற்கு வழி என்று தீர்மானித்து, உடனே ஜிளப்பில் எல்லாரையும் வைத்துக் கொண்டு ஒரு பெரும் புளுகாய்ப் புளுகி விட்டாள்: திருட்டுப் போன பெட்டியில் முதலில் அவர்கள் ஒன்றையும் காணவில்லையாம். ஆனால் இன்று காலையில் நீங்கள் வந்து பெட்டியைப் பரிசோதித்து விட்டுப் போன பிறகு, அவள் தற்செயலாகப் பெட்டியைத் திறந்து பார்த்தாளாம். அப்பொழுதுதான் ஒரு வெட்டுப்பட்ட மோதிர விரல் மாத்திரம் அதில் இருந்ததாம். ஆகையால் 'நீங்கள்தான் அதைக் கொண்டு வந்து பெட்டியில் வைத்திருக்க வேண்டுமாம்,





பரிசுப் பரிசுகள் பெறுவோர்:

(ஒவ்வொருவருக்கும் ரூ. 10-00 அனுப்பப்படுகிறது)

ஸ்ரீமதி ஆர். லக்ஷ்மி
பிளாட் 6, 4வது மெயின் ரோடு
நேரு நகர், சென்னை-20

ரங்கோலி சித்திரம்.

O

டாக்டர், ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி சேகர்
14, ராகவேந்திரபுரம்
ஸ்ரீரங்கம், திருச்சி-6

அட்டை, பஞ்சு, துணி, க்ரேப் நூல் முதலியவை கொண்டு தயாரிக்கப்பட்ட ஜப்பானியப் பெண்மணியின் உருவம்.

நகைக்கு ஆசைப்பட்டோ, க்ஷாத்திரத்தினாலேயோ நீங்கள் குற்றம் செய்துவிட்டு, பிறகு நீங்கள் தப்பித்துக் கொள்வதற்கு நல்ல வழி கிடைத்தது என்று எண்ணி, ஒரு போலீஸ்காரர் அவர்கள் வீட்டுத் திருட்டை விசாரிக்க வருகிற மாதிரி பாவனை பண்ணி நீங்கள் இவ்வளவையும் செய்திருக்க வேண்டுமாம். இல்லாத போனால் நீங்கள் வேஷம் போட்டுக் கொள்வானேன்? அவர்கள் வீட்டுக்குப் போவானேன்? நீங்கள் போலீஸ்காரரில்லை என்று இப்பொழுது தெரிந்ததன் பேரில்தான் அவளுக்கு இருந்த திகில் நீங்கியதாம். இப்படியே இதெல்லாம் நிஜப் போலீஸ்காரர்களிடம் சொல்லப் போகிறாளாம். ஐயோ! இப்படிப் பேசிக் கொண்டு பொழுதைப் போக்கிவிடுகிறேனே! சீக்கிரம் புறப்படுங்கள். உங்களுக்கு அவசியமான சாமானை எடுத்து இந்தப் பெட்டியில் வைக்கிறேன். எத்தனை வேஷ்டிகள் வேண்டும்?'' என்று கேட்டுக் கொண்டு, அலமாரியைத் திறந்து, அதில் உள்ள உருப்படிகளை எடுத்துக் கன்னா பின்னாவென்று, ஒரு பெட்டியில் திணிக்கத் தொடங்கினாள்.

நான் ஒரு க்ஷணமே ஆலோசித்தேன். ஏனென்றால் ஒரு க்ஷணத்துக்குள் தீர்மானித்து முடிவுக்கு வரவேண்டிய காரியமாக இருந்தது. அவ்விதமே தீர்மானித்து, லலிதாவின் கைகளைப் பிடித்து நிறுத்தினேன்.

''இதோ பார், லலிதா! இதுவரையில் உன்னுடைய கற்பனா சக்தியையும் நடிப்புத் திறமையையும் முழுதும் ரசித்தேன். ஆனால் நீ இப்படி என்னுடைய சலவை செய்த பட்டுச் சட்டைகளைக் கசக்குகிறது என்றால்... அதை என்னால் பார்த்துச் சகிக்க முடியாது. இந்தக்

ஏழைமையே ஒழிந்து போ!

(இம்மாதம் 19ந் தேதி 'ஏழைமை ஒழிப்பு' தின மாகக் கொண்டாடப்பட்டது!)

- ☐ "ஆமாம், 'வறுமையை ஒழிப்போம்' என்று கூறிக் கொண்டு 'லஞ்சம்' வாங்குகிறீர்களே, முதலாளிகளிடமெல்லாம்?"

"பின்னே எப்படிப் பணக்காரர்களை ஏழைகளாக மாற்றுவது?"

- ☐ "இன்னும் ஐந்தே ஆண்டுகளில் நாங்கள் 'ஏழை-பணக்காரன்' வித்தியாசம் இல்லாமல் செய்து விடுவோம்!"

"அதெப்படி எல்லோரையும் பணக்காரராக்கிவிட முடியும்?"

"எல்லாரையும் பணக்காரராக்க முடியா விட்டாலும், எல்லாரையும் ஏழையாக்கிவிட முடியுமே!"

- ☐ "நீங்கள் ஆட்சிக்கு வந்தால் எல்லோரையும் பணக்காரராக்கிக் காட்டுவோம் என்றீர்களே! என்ன ஆயிற்று!"



"ஏன் நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு புதிதாக 180 பேர் லட்சாதிபதியாகி யிருக்கின்றனரே! இதுதான் 'ஆரம்ப கட்டம்!"

"180 பேரா? அதெப்படி அவ்வளவு சரியாகச் சொல்கிறீர்கள்?"

"எங்கள் கட்சியில் 180 எம். எல். ஏ.க்கள்தானே இருக்கின்றனர்!"

- சம்பத்குமாரி

கஷ்டத்தைக் காட்டினும் நான் உண்மையை ஒப்புக் கொண்டு விடுகிறேன். அந்த ராம கப்பா தீக்ஷிதரை நான் இதுவரையில் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை!"

"அது யார் ராமகப்பா தீக்ஷிதர்? ரோஜா வீட்டுக்குக் குடி வந்ததாக நீங்கள் முன் சொன்ன மனிதனைக் குறிக்கிறீர்களோ? அவருடைய பெயர் ராமச்சந்திர சாஸ்திரிகள் என்றல்லவா சொன்னீர்கள்?"

"அவரும் அவருடைய பெயரும் அடி மாண்டு போகட்டும். எந்தப் பெயராயிருந்தால் எனக்கென்ன? அந்த மாதிரி ஒரு மனிதன் இருந்தால்தானே? வீடே இன்னும் கட்டி முடியவில்லை. ஒருவரும் குடி வரவில்லை. திருட்டும் நேரவில்லை. என்னுடைய சட்டைகளைக் கசக்காமல் கொடுத்துவிடு."

"அப்படியானால் அவரே இடையாது என்று நீங்கள் சொல்லி விட்டால் அவருக்கு சீதாலட்சுமி என்று சம்சாரம் இடையாது. அவர்களை என் பாட்டிக்கும் தெரியாது. எனக்கும் தெரியாது. பரோபகாரியாக ஒரு திருடனும் பச்சை மோதிரத்தை வைத்துவிட்டுப் போக வில்லை என்று நானும் ஒப்புக்கொள்கிறேன். இந்தாருங்கள். உங்களுடைய சட்டைகளை அரவணைத்து மடித்துவையுங்கள். ஆனால் அநியாயமாய் ஒரு விரலை அறுத்து அதைப் பெட்டியில் கொண்டு வந்து வைத்தீர்களே, அந்தப் பாவத்துக்கு என்ன செய்கிறது? அதை நினைத்தால்தான் எனக்குப் பரிதாபமாக இருக்கிறது."

"அதுவா அது இஷ்டப்படி செய்யட்டும். சொந்தக் கையை விட்டுப் பிரிந்து வந்த மாதிரியிலேயே திரும்பிப் போய் ஒட்டிக் கொள்ளட்டும். அதைக் குறித்து எனக்குக் கவலை இல்லை. உன்னுடைய சுபாவத்தைப் பற்றி நினைத்தால்தான் எனக்குத் திகிலாயிருக்கிறது. நீ ஜன்னட வரிசையை ஓயாமல் வாசித்ததை நிறுத்துவதற்காக உன்னை நான் கூப்பிட்டு, சாதாரணமாய் நடக்கக் கூடிய ஒரு திருட்டைக் கற்பனை செய்து ஒரு வார்த்தை சொன்னால், நீ அதற்கு மேல் எவ்வளவோ சிருஷ்டித்து அண்டப் புளுகுகளாய் ஜோடித்து விட்டாயே..."

"பர்த்தாவை அனுசரித்துப் போவது ஓர் உத்தம ஸ்திரீயின் கடமை. வேண்டுமானால் என்னுடைய பாட்டியைக் கேட்டுப் பாருங்கள். அவள் எத்தனையோ தடவை இப்படி என்னிடம் புத்திமதி சொல்லியிருக்கிறாள்."

"நல்ல கடமை! அவசியத்தின் மேல் நான், ஒரு புருஷன், ஒரு சின்னப் பொய்யைச் சொன்னால், நீ போட்டி போட்டுக் கொண்டு பொய் பேசலாமா? நீ, ஸ்திரீயாய், லக்ஷணமாய்....."

"என்னுடைய லக்ஷணத்துக்கு என்ன குறைவாம்?" என்று நிலைக் கண்ணாடியைப் பார்த்தபடியே அதிகப்பிரசங்கித்தனமாய் அவள் கேட்டாள். "இருந்தாலும் ஒரு குறையை ஒப்புக் கொள்ள வேண்டியதுதான். இந்த விரலில் ஒரு மோதிரம் இல்லாதது ஒரு குறைதான்" என்று காற்றுள்ள போதே தூற்றிக் கொண்டாள்.

ஆனால் அதற்குத் தக்கபடி பதில் சொல்ல எனக்குத் தெரியும். "இதோ பார்! நீ இவ்வளவு துப்பு கண்டுபிடித்தாயே, உனக்காக வாங்கி, இங்கே ஒரு வேஷ்டிக்கு அடியில் நான் ஒளித்து வைத்திருந்த இந்த மோதிரத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லையே?" என்றேன்.

"அது இருக்கும் இடத்தை நான் இன்னும் தேடத் தொடங்கவில்லையே ஒழிய அது வரப் போகிறது என்று எனக்கு அப்பொழுதே தெரியுமே."

"என்னமாய்த் தெரியுமாம்?"

"நாலாவது ராத்திரி நான் தூங்கிக் கொண்டிருக்கையில் என் விரலுடைய அளவை எடுத்தீர்களே, அப்பொழுதே எனக்குத் தெரிந்துவிட்டது."

இது ஓர் அபாண்டப் புளுகு. நான் அளவு எடுக்கவே இல்லை. கண் திட்டமாகத்தான் மோதிரத்தைப் பொறுக்கி வாங்கினேன் என்று வாஸ்தவமாய்ச் சொல்லுகிறேன். ஆனால் நான் என்ன சத்தியம் செய்தால் என்ன? அவள் சொன்னதையே சாதித்துக் கொண்டு அதற்காக இன்னும் ஒரு நாடகத்தை நடிக்கப் போகிறாள். நான் தோற்றுப் போய்விட்டேன் என்று ஒப்புக் கொள்வதே நல்லது.

தரமிக்க துணிகள் எவை?

டுவின் டஸ்கர்

டிரில் • பாப்ளின் • காபர்டைன் • டஸூர்
முதலியன

மதுரை மில்ஸ் மதுரை, தென் இந்தியா.

Bensons 2155-TAM



இன்றைய முன்னணி பிரபல

பழனி டாக்டர் எஸ். காளிமுத்து

R. M. P., (Ind.) V. V. C., A. M. I. H

அவர்களின் விஜயம்

சந்திக்கும் விலாசங்கள்

1-ந் தேதி திருநெல்வேலி: நெல்லை லாட்ஜ், காலை 8 மணி முதல் 12 மணி வரை.
1-ந் தேதி நாகர்கோவில்: உடுப்பி ஸ்ரீ கிருஷ்ணபவன், மாலை 2 மணி முதல் 4 மணி வரை.
2-ந் தேதி மதுரை: மணீஸ் கபே, காலை 8 மணி முதல் மாலை 2 மணி வரை.
2-ந் தேதி புதுக்கோட்டை: வஸந்தா லாட்ஜ், மாலை 4 மணி முதல் 5-30 மணி வரை.
3 ந் தேதி காரைக்குடி: AVM. PL. ரெஸ்ட் ஹவுஸ், காலை 8 மணி முதல் 11 மணி வரை.
3-ந் தேதி அறந்தாங்கி: கோகுலம் லாட்ஜ், பகல் 12 மணி முதல் 1 மணி வரை.
3-ந் தேதி பட்டுக்கோட்டை: அசோகா லாட்ஜ், பகல் 2 மணி முதல் 3-30 மணி வரை.
3-ந் தேதி மன்னார்குடி: மன்னை லாட்ஜ், மாலை 4-30 மணி முதல் 6 மணி வரை.
4-ந் தேதி திருச்சி: ஹோட்டல் அஜந்தா, காலை 8 மணி முதல் 2 மணி வரை.
4-ந் தேதி கரூர்: பெரியார் உணவு விடுதி, மாலை 3-30 முதல் மாலை 5 மணி வரை.
5-ந் தேதி தஞ்சை: ராஜா ரெஸ்ட் ஹவுஸ், காலை 8 மணி முதல் பகல் 12 மணி வரை.
5-ந் தேதி திருவாரூர்: அபூபக்கர் பில்டிங், மாலை 2 மணி முதல் 4 மணி வரை.
5-ந் தேதி நாகை: தினகர விலாஸ், மாலை 5 மணி முதல் 7 மணி வரை.
6-ந் தேதி காரைக்கால்: அசோக் லாட்ஜ், காலை 8 மணி முதல் 10 மணி வரை.
6-ந் தேதி கும்பகோணம்: தாஜ்மஹால் லாட்ஜ், காலை 11 முதல் 2 மணி வரை.
6-ந் தேதி மாயவரம்: காளியாகுடி லாட்ஜ், பகல் 3 மணி முதல் 4-30 மணி வரை.
6-ந் தேதி கடலூர் N. T.: ஹோட்டல் பிருந்தாவனம், இரவு 7 முதல் 8-30 மணி வரை.
7-ந் தேதி பாண்டிச்சேரி: அருணா லாட்ஜ், காலை 8 மணி முதல் 10 மணி வரை.

பழனி சித்தர் வைத்தியசாலை, பழனி போன்: 316] [தந்தி: சித்தர்

செர்ரி மலர்கள் சிரித்தன!

பெண் உள்ளத்தைப் புரிந்து கொள்வது படுசிரமம். அதன் ஆழத்தை அறிந்தவர் அன்றும் இல்லை; இன்றும் இல்லை. இந்த ஜப்பானிய நாடோடிக் கதையில் வரும் அரசியின் பேச்சும் செயலும்.... அப்பப்பா! பெண்மை பழி வாங்க முனைந்தால்....?

அரசி நோய்ப் படுக்கையில் படுத்து மூன்று ஆண்டுகள் ஓடிவிட்டன. இனிப் பிழைத்து எழுவாள் என்ற நம்பிக்கையே போய்விட்டது. நோயைக் காட்டிலும் மன நோயே அவளை அப்படி அரித்து விட்டது; படுத்த படுக்கையாகப் போட்டு விட்டது. எத்தனையோ வைத்தியம் செய்து பார்த்தும் பயன் இல்லை. சாவு நெருங்கிவிட்டதாகவே எண்ணினாள் அரசி. அவளுக்குத் தன் அருமைக் குழந்தைகளின் நினைவு வந்தது; ஆருயிர்க் கணவரின் நினைவு வந்தது. அது மட்டுமா? ஆருயிர்க் கணவரின் ஆசைநாயகிகளின் நினைவும் வந்தது. குறிப்பாகக் கூறப் போனால் பத்தொன்பதே வயதான யூகிகோவை அவளால் என்ன முயன்றும் மறக்க முடியவில்லை. அவள் அழகிகளுக்கெல்லாம் அழகியாகத் திகழ்ந்தாள். அரசரின் ஆசைநாயகிகளுக்குள்ளே அக்ர ஸ்தானம் வகித்தாள். அவளை ஆசை தீரப் பார்க்கவேண்டும் என்று அரசிக்கு ஆசை! அந்த ஆசைக்குக் காரணம்....? அவளது ஆத்மாவுக்கே தெரியுமோ, தெரியாதோ?

அரசர் அருகில்தான் அமர்ந்திருந்தார். அரசி அவரை இன்னும் நெருங்கி வருமாறு அழைத்தாள். அவள் குரல் மிகவும் தெம்பிழந்து போயிருந்தது. உரத்துப் பேச முடியாத நிலையில்தான் அரசருக்கு அந்தச் சிரமத்தை அளித்தாள் அவள். அரசர் அருகில் வந்ததும், "அரசே! நீங்கள் எனக்காக எவ்வளவோ செய்திருக்கிறீர்கள்! உங்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். சாகும் தறுவாயில் கடைசி நேர ஆசை ஒன்று என் மனத்தில் அலைபாய்கிறது. நான் என் கடமைகளிலிருந்து கடைசிக் காலத்திலும் தவற விரும்பவில்லை. எனது வேண்டுகோளை கடைசி விருப்பத்தை நிறைவேற்றி வைப்பீர்களா?" என்று கேட்டாள்.

அரசர் நெகிழ்ந்து போய் விட்டார். "சொல்! உன் ஆசை எதுவானாலும் நிறைவேற்றி வைக்கிறேன்!" என்றார்.

"தயவுசெய்து யூகிகோவை என்னிடம் அனுப்பி வையுங்கள்! அவளை நான் எவ்வளவு நேசிக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியும். எனது பணிப்பெண்ணாக இருந்த காலத்திலேயே அவளை நான் என் தங்கையாக மதித்து வந்தேன். உங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டபின் அவள் உண்மையாகவே என் தங்கை ஆகிவிட்டாள்! நான் என் தங்கையைச் சாவதற்கு முன்னால் ஒரு தடவை பார்க்க விரும்புகிறேன். அவளுக்குச் சில பொறுப்புக்களை எடுத்துக் கூற விரும்புகிறேன்!"

இதைக் கூறி முடிப்பதற்குள் அரசிக்கு மூச்சு இரைத்தது.

அவள் வேண்டுகோளைக் கேட்டு அரசர் உருகிவிட்டார். என்ன நல்ல குணம் அரசிக்கு! அவளுக்கு அடிமையாக இருந்தவளை நாம் நம் மனத்துக்குகந்தவளாக ஆக்கிக் கொண்டு விட்டோமே! அதற்காகப் பொறுமைப்படவில்லை! மாறாக அவளுக்கு நல்லுபதேசங்கள் செய்ய அல்லவா துடிக்கிறாள்! அவளது கடைசி ஆசையை உடனே நிறைவேற்ற எண்ணி யூ கி கோவுக்குச் சொல்லி அனுப்பினார். அரசரின் ஆணை கேட்டு யூகிகோ ஓடோடி வந்தாள்.

ஆயாசத்தினால் மூடியிருந்த கண்களை அரசி திறந்தாள். விழிகள் விரிய, "வந்துவிட்டாயா, யூகிகோ? என் அருகில் வா, யூகிகோ! என் இறுதிக் காலம் நெருங்கி விட்டது. எல்லோரைக் காட்டிலும் எனக்கு நீதான் வேண்டியவள் என்று நம்புகிறேன். நம்பிக்கைக்குப் பாத்திரமானவள் நீ! உன்னைக் காட்டிலும் அரசருக்கு வேண்டியவர்கள் யார் இருக்க முடியும்? நான் இறந்தபிறகு, என் ஸ்தானத்தில் நீதான் சகல பொறுப்புக்களையும் ஏற்க வேண்டும் என்பது என் ஆசை. அரசரும் உன்னைப் பெரிதும் விரும்புகிறார். என்னைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு அவருடைய அன்பு உனக்குக் கிடைத்திருக்கிறது. அவரும் உன்னைத்தான் பட்டத்தரசியாக்கிக் கொள்ள விரும்புவார். அதனால் நான் சொல்வது

ஜப்பானிய நாடோடிக்கதை



என்ன என்றால், இன்று போலவே என்றும் அவருக்கு உன் இதயத்திலே இடம் கொடுத்துப் போற்று !'' என்றான்.

'' அரசியாரே ! என்ன இப்படிப் பேசுகிறீர்கள் ? என் தலையிலே இத்தனை பெரும் பழி சுமத்தாதீர்கள் ! உங்கள் பேச்சைக் கேட்டு எனக்கு வியப்பு ஏற்படுகிறது. அரசர் எங்கே, ஏழை நான் எங்கே? கேட்டிலும் கேடு கெட்ட ஜீவன் நான் ! அவர் தயவில் வாழுகிறேன் நான். கனவிலும் இதுபோல் நினைக்கவில்லை; விரும்பவும் இல்லை!'' என்று யூகிகோ மறுத்தாள்.

அரசி இடைப்பட்டு, ''இப்படி எல்லாம் சொல் அடுக்கும் நேரம் இல்லை இது. இப்பொழுது நாம் இருவரும் ஒளிவு மறைவின்றி உண்மையே பேச வேண்டும். எனக்குப் பின் அரசரும் உன்னைத்தான் அரசியாக்க விரும்புவார். என் மனத்தாசையும் அதுவே தான். அடாடா ! ஒன்று கூற மறந்துவிட்டேனே, நான்! சிரமத்தைப் பொருட்படுத்தாமல் எனக்காக ஒரு காரியம் செய்வாயா, யூகிகோ? இரண்டு ஆண்டுகளுக்குமுன் நாம் மலையிலிருந்து ஒரு புதுவகைச் செர்ரி மரம் வரவழைத்தோமே, உனக்கு நினைவிருக்கிறதா? அதில் இரு வகை மலர்கள் பூக்கின்றனவே, தெரியும் அல்லவா? இத்தடவை அது பூத்துக் குலுங்குகிறது என்று கேள்விப்பட்டேன். மரத்தில் மலர்களைத் தவிர வேறு எதுவுமே தெரியவில்லையாம்: நான் இறப்பதற்கு முன்னால் பூத்துக் குலுங்கும் அந்த மரத்தை ஒரு முறை கண்



ளைப் பார்க்க விரும்புகிறேன். யூகிகோ! அதனால் எப்படியாவது என்னைத் தோட்டத்துக்கு இட்டுச் சென்று அந்த மரத்தைக் காட்டு. உடனே, இப்பொழுதே அழைத்துச் செல்! இனியும் நேரம் இல்லை. எமன் எப்பொழுது வேண்டுமானாலும் என்னைச் சிறைப் படுத்தலாம். என்னை உன் முதுகில் தூக்கிக் கொண்டு, ஆமாம், முதுகில் தூக்கிக் கொண்டாவது உடனே அவ்விடத்துக்கு இட்டுச் செல்!'' என்றாள். கூடவே விம்மி விம்மி அழவும் தொடங்கி விட்டாள்.

யூகிகோ விக்கித்துப் போய்விட்டாள். என்ன செய்வாள் அவள்? ஒன்றும் புரியாமல் விழித்தாள். இரக்க உணர்வால் உந்தப்பட்ட அரசர் தலையசைத்து அவள் ஆசையை நிறைவேற்றுமாறு யூகிகோவுக்குச் சமிக்ஞை செய்தார்.

யூகிகோ கட்டிலின் புறமாக முதுகைக் கொண்டு சென்றாள். கழுத்தை நன்றாகக் கீழே குனிந்து கொண்டாள். திடீரென்று அரசிக்கு எங்கிருந்துதான் அப்படி ஓர் அசுர பலம் வந்ததோ, தெரியவில்லை! ஒரு தாவாகத் தாவி யூகிகோவின் தோள் மீது அமர்ந்து கொண்டாள். அவளுடைய உலர்ந்த குச்சிக் கைகள் நீண்டு யூகிகோவின் ஆடைக்குள் புகுந்து அவளது மார்பகத்தை இறுகப் பற்றிக் கொண்டன. பிறகு அவள் பயங்கரமாக ஒரு பேய்ச் சிரிப்பு சிரித்துக் கேலி தொனிக்க உரக்கவே கூறினாள்: ''அரசர் உன்னிடம் தவித்து உருகியதற்குக் காரணம் இளமை ததும்பும் இந்தச் செர்ரி மலர்களே அல்லவா....?'' சொற்களை முடிப்பதற்குள்ளாகவே அரசி தோள்களில் சாய்ந்துவிட்டாள்; சாய்ந்தவள் அப்படியே செத்தும் விட்டாள்.

பணியாட்கள் அரசியின் சடலத்தை யூகிகோவின் தோள்களிலிருந்து இறக்கிக் கட்டிலில் கிடத்த முயன்றனர். ஆனால் கூரிய நகங்களுடன் ஆழப் பதிந்து குளிர்ந்து போன அரசியின் கைகளை எத்தனை முயன்றும் யூகிகோவின் உடலிலிருந்து அவர்களால் பிரிக்க முடியவில்லை!

மரணப் பிடியில் சிக்கி நீலம் பாரித்துப் போன யூகிகோவின் உடலுக்கும் அரசியோடு சேர்த்து ஈமச் சடங்கு செய்யும்படி ஆயிற்று!

'பெண்மை பழி வாங்க முனைந்தால், அது இவ்வளவு பயங்கரமாகவா இருக்கும்?'

வியந்து பெருமூச்சுவிட்டார் அரசர்.

அரண்மனைத் தோட்டத்தில் செர்ரி மலர்கள் சிரித்தன!

தமிழாக்கம்: அக்ஷயம்

பக்தித் துணுக்குகள்

நரேந்திரநாத்தை - அதாவது ஸ்வாமி விவேகானந்தரை - ஒருபுறமாக அழைத்து ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் கூறினார்: ''நான் உனக்கு அஷ்டமா சித்திகளையும் அளிக்கிறேன். நீ பற்பல அறச் செயல்களைச் செய்யவேண்டியிருக்கும். அதற்கு இவை பெரிதும் பயன்படும். வேண்டுமா, சொல்!''

ஒரு நிமிஷம் நரேந்திரநாத் மௌனம் சாதித்தார். பிறகு, ''இதனைக் கொண்டு ஆண்டவனை அடைய முடியுமா?'' என்று கேட்டார்.

''முடியாது. ஆண்டவனை அடைய முடியாது!'' என்றார் பரமஹம்ஸர்.

நரேந்திரநாத் பற்றற்ற குரலில், ''அப்படியானால் எனக்குமட்டும் பெருமை சேர்த்துத் தரும் இவ்வரிய சக்தி எனக்கு வேண்டாம்!'' என்று மறுத்துவிட்டார்.

- அசிந்திய குமார் ஸென்குப்த.

★

''பார்த்தாயா, லக்ஷ்மணா! பம்பாசரஸில் உள்ள கொக்குகூட எவ்வளவு அற உணர்வு கொண்டிருக்கிறது! பார்த்துப் பார்த்து அடி எடுத்து வைக்கிறதே, ஏன் தெரியுமா? எந்த உயிர் இனமும் தன் கால்களுக்கு அடியில் நசுங்கிவிடக் கூடாதே என்ற கவலைதான்!'' என்றார் இராமர். அவரது இயல்பு அவரை அப்படிப் பேச வைத்தது!

அவரது இந்தக் கூற்றைக் கேட்டது, ஏரிக்கரையிலே அமர்ந்திருந்த ஒரு தவளை. அதற்குச் சிரிப்புச் சிரிப்பாக வந்தது.

''ஏன் சிரிக்கிறாய்?'' என்று கேட்டார் இராமர்.

''ஒருவரது உண்மையான இயல்பை அவரோடுகூட இருப்பவர்கள்தான் நன்கு உணர முடியும்! உங்கள் சிந்தனைப் போக்கில் நீங்கள் கூறிவிட்டீர்கள்! இப்படிப் பொத்திப் பொத்தி நடந்தே இந்தக் கொக்கு என் குடும்பத்தையே சுவாஹாம் செய்துவிட்டது!'' என்று பதில் இறுத்தது தவளை.

- வடமொழி கவிலோகத்திலிருந்து

★

காந்தியடிகளுக்கு ஒருவர் கடிதம் எழுதினார்: ''நீங்கள் இவ்வுலகில் இன்னும் சிறிது காலமே இருப்பீர்கள். உங்கள் முடிவு நெருங்கிவிட்டதாக நான் கனவு கண்டேன். அதனால் எல்லா வேலைகளையும் 'ஏறக்கட்டி'விட்டுக் கடவுளைத் துதிப்பதில் உங்கள் கடைசி நாட்களைக் கழித்தால் பரத்துக்கு நல்லது!''

காந்தியடிகள் உடனே அவருக்குப் பதில் எழுதினார்: ''நீங்கள் நல்லதே எழுதினீர்கள். ஆனால் நாம் நமது கடைசி நாட்களை மட்டும் கடவுளைத் துதிப்பதில் கழிப்பது என்று சொல்வது தவறு. வாழ்க்கை முழுவதும் கவலையற்றுக் கழித்துவிட்டுக் கடைசி நாட்களை மட்டும் கடவுளுக்குத் தருவது என்ற எண்ணமே பிசகானது. உண்மையில் நமது வாழ்வின் ஒவ்வொரு கணமுமே நமது கடைசி மூச்சாகவும் முடியக் கூடும். எனவே, எப்பொழுதுமே கடவுள் நினைவோடு கருத்தோடு இருப்பதுதான் இகத்துக்கும் லாபம் பரத்துக்கும் லாபம்!''

- ரா. வீ.









பம்பாய், மாதுங்கா S.I.E.S. உயர் நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ஸ்ரீ S. ராமகிருஷ்ணன் அவர்கள் குமாரத்தி செள. லக்ஷ்மிக்கும், ஸ்ரீ K. V. சுப்ரமணிய அய்யர் குமாரர் சிரஞ்சீவி K.S. கிருஷ்ணன் (மானேஜர், ஸிண்டிகேட், பாங்க் பம்பாய்) அவர்களுக்கும் திருமணம் சமீபத்தில் பம்பாயில் சிறப்பாக நடைபெற்றது.


வாழ்க மணமக்கள்


இந்திய டேவிஸ் கப் விளையாட்டு வீரர் விஜய் அமிர்தராஜ் பிலிப்ஸ் சைக்கிள் உதவியினால் தன் உடல் வளத்தை தெம்புடன் வைத்திருக்கிறார்

டென்னிஸ் விளையாட்டில் அமிர்தராஜ் பாய்ந்தோடி பதிலடி கொடுப்பதில் வல்லவர். அவராது விளையாடுவதற்கு தம்முடைய உடல் எப்பொழுதும் தெம்புடன் இருக்கவேண்டிய அவசியத்தை அவர் அறிவார். இதற்காக அவர் தினமும் பிலிப்ஸ் சைக்கிளில் சவாரி செய்யத் தவறுவதில்லை. உலகப் புகழ்வாய்ந்த பிலிப்ஸ் லக்ஷமிரு வாலிபர்களுக்கு உகந்தது. அது கவர்ச்சியானது. அனாயாசமாக சவாரி செய்ய வல்லது.

இதர பிலிப்ஸ் மாடல்கள்:

பிலிப்ஸ் ஒலிம்பியா [சுபர்ப் மாடல்]
பிலிப்ஸ் லேடீஸ் மாடல்
லக்ஷமிரு வாலிபர்கள் உகந்து வாங்குவது பிலிப்ஸ்





இந்தியாவில் தயாரிப்போர்:
டி.ஐ. சைக்கிள்ஸ் ஆஃப் இந்தியா
அம்பத்தூர், சென்னை 53
உரிமையாளர்கள்:
டியூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ஆஃப் இந்தியா லிமிடெட், சென்னை
பதிவுபெற்ற உபயோகிப்போர்.

TICPH/7038



பாவர்ச்சி

'சந்தோஷமான வாழ்க்கை நடத்துவது மிக எளிது; ஆனால் எளிய வாழ்க்கை நடத்துவது மிகக் கடினம்' என்கிறான் கதாநாயகன்.

'தரக் குறைவான படங்களை எடுத்து மக்களைச் சந்தோஷப்படுத்துவது ரொம்ப எளிது; ஆனால் எளிமையான படங்களை எடுத்து மகிழ்விப்பது ரொம்பக் கடினம்' என்று நமக்குத் திரித்துக் கூறத் தோன்றுகிறது. இந்தக் கடினமான பணியில் முழு வெற்றியடைந்துள்ளார் ரிஷிகேஷ் முகர்ஜி.

ஜெயாபாதுரியைத் திரையில் பார்க்கும் போது அங்கேயே திருஷ்டி கழிக்கும்விதமாக நெற்றிப் பொட்டில் விரல்களை அழுத்திச் சொடுக்கலாம் போலிருக்கிறது — நடிப்பு, அழகு இரண்டுக்காகவும்தான்.

'சண்டையும் பூசலுமாக உள்ள எத்தனையோ பல குடும்பங்களில் மகிழ்ச்சி நிலவச் செய்ய நான் போகிறேன்' என்று கூறியபடி கதாநாயகன் ரகு (ராஜேஷ்கன்னா) கடைசிக் காட்சியில் விடைபெறுகிறான். ஆனால் நம் இதயங்களிலிருந்து அவனால் விடைபெற முடியவில்லை.

ரிஷிகேஷ் முகர்ஜி — பெயரைக் கேட்டதும் குட்டி, ஆனந்த் முதலிய படங்களின் நினைவு வரும். அவரது மற்றோர் உன்னதமான தயாரிப்புத்தான் பாவர்ச்சி; அதாவது சமையல்காரன்.

சமையல்காரனுக்கு ஆரம்பத்திலிருந்தே அக்குடும்பத்தின் நகைப் பெட்டியின் மீது ஒரு 'கண்' இருப்பதாகக் காட்டுகிறார்கள். பல முறை காட்டாமல் 'ஸஜெஸ்டிவ்' ஆக விட்டிருக்கலாம். சமையல்காரன் திருடனா அல்லது நல்லவனா என்று பலவாறு நம்மைச் சிந்திக்க வைக்கிறார்கள் படத்தை உருவாக்கியவர்கள். இப்படிப் படம் பார்ப்பவர்களின் சிந்தனைக்கு வேலை கொடுப்பது இது வரையில் நமது படங்களில் நாம் உணர்ந்தறியாத உயர்ந்த கலை நுணுக்கம்.

உயர்வு என்பது இந்த ஓர் அம்சத்தில் மட்டுமா? இரண்டு நைட் கிளப் டான்ஸ், ஒரு படுக்கையறைக் காட்சி, இரண்டு காதல் ஸீன் — டூயட் என்றெல்லாம் சூத்திரம் வகுத்துக் கொண்டு படம் எடுக்கிறார்களே; படத்தின் வெற்றிக்கு, மக்களின் ஆதரவுக்கு, நஷ்டம் வராமலிருப்பதற்கு இதெல்லாம் அவசியம் என்று காரணம் சொல்கிறார்களே — இது எவ்வளவு அபத்தம் என்று நிரூபிக்கிறார் ரிஷிகேஷ் முகர்ஜி. நல்ல கதை அமைப்பு; கதையோடு ஒட்டிய தரமான ஹாஸ்யம், சிறந்த டைரக்ஷன், நடிப்பாற்றல் இவைதாம் படத்தின் வெற்றிக்கு — வசூல் விஷயத்திலும் கூட — அவசியம் என்று தெளிவாக்குகிறார். 'நியூவேவ்' என்று கூறிக் கொண்டு வேண்டாத ஆபாசத்தையெல்லாம் புகுத்துவதும் 'மக்கள் விரும்புகிறார்கள்' என்று ரசிகர்கள் பேரில் பழியைப் போடுவதும் படத் தயாரிப்பாளர்களின் திறமையின்மையை மறைக்க ஒரு திரை என்பதை ரிஷிகேஷ் முகர்ஜியின் படங்களைப் பார்க்கும்போது மிக நன்றாக உணர்கிறோம்.

குடும்பத் தலைவர் சிவநாத்தாக நடிக்கும் ஹரீந்திரநாத், நடிப்பிலும் தாம் ஒரு கலைஞர் என்பதை நிரூபிக்கிறார். தபன்சின்ஹாவின் கதை, குல்ஸாரின் வசனம், ரிஷிகேஷ் முகர்ஜியின் டைரக்ஷன், நடிக — நடிகையர்களின் ஒத்துழைப்பு எல்லாமாகச் சேர்ந்து அறுசுவையை அருஞ் சுவையாகத் தருகின்றன.

சமையல்காரனின் ருசி மிக்க தயாரிப்புக்களை அவ்வீட்டிலுள்ளவர்கள் ரசித்து மகிழும் போது நமக்கும் நாக்கில் ஜலம் ஊறுகிறது; மனத்திலோ இதே போன்ற பல தரமான படங்களைப் பார்க்க மாட்டோமா என்று ஆசை பெருக்கெடுக்கிறது. -குட்டிகிருஷ்ணன்



மனிதன் எத்தனைதான் தீயவனாகி விட்டாலும்,
அவனுள் ஒரு நல்லவன் ஒளிந்தே இருக்கிறான்.
இடையிடையே அந்த நல்லவன் தலைகாட்டுவதால்
தான் உலகத்தில் வாழத் தோன்றுகிறது ;
வாழ முடிகிறது.
உயிரை வெல்லமாக நினைத்துத் தனக்கு உயிர்
அளித்தவனையே தீர்த்துக் கட்டுகிறான் அவன் !
ஆனால் பச்சாத்தாபத் தீயில் வெந்து தன் தீராக்
கடனைத் தீர்க்க முயலும் ஒருவனை
நல்லவன் என்பதா, தீயவன் என்பதா ?

நாங்கள் சேர்ந்தே பயணம் செய்து கொண்டிருந்தோம். என்னோடு ஒரு குதிரை ; மிகவும் நல்ல குதிரை. என்னோடு வந்தவன் வெள்ளை நிறப் பெண் குதிரையின் மீது வந்து கொண்டிருந்தான். அவனோடு நான்கைந்து மட்டக் குதிரைகளும் இருந்தன. அவை அவனுக்குப் பின்னாலேயே வந்து கொண்டிருந்தன. ஆனால் அவற்றின் மீது சுமை ஏதும் இல்லை.

அவன் நல்ல பலசாலி; வாகான உடல். உயரத்துக்கேற்ற பருமன். பருமனுக்கேற்ற அகன்ற தோள் பட்டைகள். ஆனால் அவன் முகம் வாட்டமுற்று வெளிறியிருந்தது. அவன் தனது நாட்டு உடையில் இருந்தான். அவன் சட்டையில் முன் பக்கம் பளபளக்கும் பொத்தான்கள் வரிசையாகக் காட்சி தந்தன. தலையிலே தகதகக்கும் பட்டுக் குட்டையைத் தலைப்பாவாகச் சுற்றியிருந்தான். அதன் இருமுனைகளும் தலையின் இரு புறங்களிலும் தொங்கித் தோள்களையும் மார்பையும் தடவி விட்டுக் கொண்டிருந்தன.

அவன் பெயர் டைக்கோ மிராவோவிச்.

நான் அவனைப் பற்றிப் பல விந்தைக் கதைகள் கேட்டிருந்தேன். அவன் 'பெருங் கொள்ளைக்காரன்' என்று பெயர் வாங்கி யிருந்தான். மக்கள் ஒருபுறம் அவன் வீரத்தைப் பாராட்டினர்; மறுபுறம் அவன் பெயரைக் கேட்டுச் சிம்ம சொப்பனம் கண்டவர் போல் நடுநடுங்கினர்.

''நீ உன்னுடன் இத்தனை மட்டக் குதிரைகளை ஏன் வைத்திருக்கிறாய்? இவற்றின் மீது நீ ஒன்றும் சுமைகூட ஏற்றக் காணோமே!'' — வெகு நேர மௌனத்தைக் கலைத்துப் பேச்சுக் கொடுக்கும் எண்ணத்தோடு அவனைக் கேட்டேன்.

'' நான் இவற்றின் மீது சுமை ஏற்றி நகரத்துக்குப் போயிருந்தேன். அங்கிருந்துதான் இப்பொழுது திரும்பிக் கொண்டிருக்கிறேன்!''

''என்ன பொருள்கள் எடுத்துச் சென்றிருந்தாய் ?''

''எத்தனையோ பொருள்கள். ரொட்டி, உருளைக் கிழங்கு, முட்டைக்கோஸ் என்று !''

''யாருக்காக?''



* 1919ம் ஆண்டு முதல் சர்பியா தேசம் யுகோஸ்லேவியாவின் ஓர் அங்கமாகி விட்டது.



கடன்

ஸ்விதீஸர் கோரோவிச்



"காலஞ்சென்ற
அலி முயாவிச்சின் சின்னஞ்
சிறு குழந்தைகளுக்காக!"

நான் துணுக்குற்றேன். வியப்பு மிகுதியில் அவனையே வைத்த கண் வாங்காமல் பார்க்கலானேன்.

அலி முயாவிச் மாபெரும் வீரன், கொடுமையே உருவான துருக்கியர்களில் ஒருவன். எல்லாவற்றிலும் விசேஷம் என்னவென்றால், அவன் மிராவோவிச்சுகளின் உயிர்ச் சத்துரு.

"நீ அவன் வயல்களில் எதையாவது குத்தகைக்கு எடுத்திருக்கிறாயா, என்ன?"

"இல்லை. நான் அவர்களுக்குக் கடன்பட்டவன்; மிக மிகக் கடமைப்பட்டவன்."

அவன் தலை குனிந்தான். குதிரையின் மூக்கில் சவுக்கால் அடித்தான். பார்க்கப்போனால் அதை அப்படி அடிக்கத் தேவையில்லை. அது வேகமாகத்தான் ஓடிக் கொண்டிருந்தது.

அதைக் கண்டபின், மேலே எதுவும் கேட்க எனக்குத் துணிவு உண்டாகவில்லை. என் குதிரையின் கடிவாளத்தைத் தளர்த்திவிட்டு, நான் மெதுவாகக் குரல் எடுத்துப் பாடத் தொடங்கினேன்.

அவனுக்கு என் பாட்டு பிடித்து விட்டது என்று தோன்றியது. ஏனென்றால் அவன் தன் குதிரையை என் குதிரைக்கு அருகில் கொண்டு வந்தான். உன்னிப்பாக என் பாடலைக் கேட்கலானான்.

"சற்று உரக்கப் பாடேன்!"

நான் என் குரலை உயர்த்தினேன். அவன் தலையில் கட்டியிருந்த குட்டையைக் கழுத்துக்குக் கீழே இழுத்துவிட்டுக் கொண்டான்; பாடலுக்கேற்பத் தலை அசைத்து ரசிக்கலானான்.

"மேலே பாடு!"

"இதற்கு மேல் எனக்குத் தெரியாதே!"

"நீ எங்கே போகிறாய்?"

"காட்டுக்கு!"

"வா, சிறிது நேரம் இளைப்பாறி விட்டுச் செல்வோம்."

நான் அவன் பின் சென்றேன். காட்டை அடைந்ததும் நாங்கள் குதிரையிலிருந்து இறங்கினோம். அவற்றை மேய விட்டுவிட்டு, விசாலமான ஒரு மரத்தடியில் நிழலில் உட்கார்ந்தோம். புகையிலைப் பையை அவிழ்த்து எங்கள் புகைக்கும் குழாயைப் புகையிலைத் தூளினால் கெட்டித்து நிரப்பினோம்.

"நீ அலிக்குக் கடனாளியாக எப்பொழுது ஆனாய்?" நான் மௌனத்தைக் கலைத்து மீண்டும் பேச்சைத் தொடங்கினேன்.

டைக்கோவின் புருவங்கள் நெரிந்தன. அவன் கையை ஆட்டி, "எத்தனையோ நாட்கள் ஆகிவிட்டன!" என்றான்.

"நீ உன் கடனைத் தீர்த்துவிட்டாயா?"

''ஜனுறாம். அவன் கடனைத் தீர்க்கும் தகுதி பெறவே காலம் பிடிக்கும்.''

இரண்டு மூன்று முறை புகையை உறிஞ்சினன் அவன். பிறகு ஒரு கணம் என்னை உற்று நோக்கிவிட்டு, '' அது பெரிய கதை. எனக்குப் பிடிக்கவில்லையாயினும் அதை உனக்குக் கூறுகிறேன்!'' என்ருன்.

துருக்கியர்களின் கொடுமைதான் என்னைக் கொள்ளைக்காரனுக்கும் புண்ணியத்தைக் கட்டிக் கொண்டது. எல்லாவிதமான மனித உரிமைகளிலிருந்தும் வஞ்சிக்கப்பட்டு, துருக்கியர்களுக்குக் குற்றேவல் புரிந்து நான் வெறுத்துப் போனேன். ஒவ்வொருவனுக்கும் தலைவணங்கி, அவமானங்கள் பலவற்றுக்கு ஆளாகி என் மனம் மிகவும் புண்பட்டுவிட்டது. எனவே, நான் துப்பாக்கியைப் பிடித்தேன். அரை டஜன் கூட்டாளிகளைச் சேர்த்துக் கொண்டு மலைக் காடுகளைச் சென்றடைந்தேன். இங்கு நாங்கள் துருக்கியர்களின் தேட்டத்தில் காத்திருப்போம். எங்கேயாவது கண்டுவிட்டால், அவர்கள் மீது பாய்ந்துவிடுவோம். சண்டை — இன்டையின்றி ஒரு நாள்கூடப் போகாது. அடித்துப் போட்டு அகப்பட்டதைச் சுருட்டிக் கொள்ளாமல் நாங்கள் யாரையும் விட்டதில்லை, கடைசியில் நாங்கள் முயாவிச்சை எதிர்கொள்ள நேர்ந்தது. எங்கள் பழங்கணக்கைத் தீர்த்துக் கொள்ளும் வாய்ப்புக் கிட்டியது. நாங்கள் அவன் வீட்டைச் சூழ்ந்து முற்றுகையிட்டோம். அவன் குடும்பத்தைச் சேர்ந்த மூன்று நபர்களைக் கொன்று போட்டோம். ஆனல் அலி தப்பிவிட்டான். நாங்கள் அவனை வெகுநேரம் சல்லடை போட்டுச் சலித்துத் தேடினேம். ஆனல் அவன் கிடைக்கவில்லை. நாங்கள் அவன் வீட்டைச் சூறையாடி ஏராளமான பொருள்களை எடுத்துக் கொண்டு எங்கள் குகைக்குத் திரும்பினேம்.

'' ஆனல் அந்தப் பேரம் எங்களுக்குப் பேராபத்தாக முடிந்தது. அலி எங்களைக் காட்டிலும் சக்தி வாய்ந்த ஒரு கோஷ்டியைச் சேர்த்துக் கொண்டு வந்து எங்களை மலைகளிலும் காடுகளிலும் விரட்டி விரட்டி அடித்தான். உயிருக்குப் பயந்து நாங்கள் ஒரு பயங்கரக் காட்டைத் தஞ்சம் புகுந்தோம். அங்கே மலையாடுகளோ காட்டு ஆடுகளோ போவது கூடக் கஷ்டம். நாங்கள் அக்காட்டை எங்கள் தகர்க்க வொண்ணுத கோட்டையாக்கிக் கொண்டு, சாகிற வரைக்கும் சண்டை போடுவது என்று தீர்மானித்தோம். அலியும் அவனுடைய தோழர்களும் எங்களை நாற்புறமும் வளைத்துக் கொண்டார்கள். எங்களுக்கு அது பேராபத்தாக முடிந்தது. தின்ன ரொட்டி கிடைக்கவில்லை; குடிக்க நீர் கிடைக்க வில்லை. தெரியாமல் வெளியே சென்று ஏதாவது கொண்டு வரலாம் என்ருல் அதற்கு யாருக்குமே துணிவு ஏற்படவில்லை. நாங்கள் பசி — தாகத்தினுல் செத்துப் பிழைத்துக் கொண்டிருந்தோம். தோழர்களோ வாட்டமாக இங்கும் அங்கும் காட்டுக்குள்ளேயே வளைய வந்து கொண்டிருந்தார்கள்.

இப்படி இருந்தால் காரியம் நடக்காது என்ற முடிவுக்கு வந்தேன் நான்: அதனுல் நான் என் தோழர்களைக் கூட்டி,

''தோழர்களே! பசி தாகத்தினுல் செத்து மடிவதைக் காட்டிலும் நாம் ஒன்றுகூடி எதிரிகளைத் தாக்குவதுதான் சிறந்தது. அவர்களைப் பழி வாங்கிவிட்டு ஆண்மையோடு உயிர் துறப்பதுதான் மேல். எப்படியும் நாம் சாகப் போகிறேம். அப்படி இருக்கும்பொழுது போரிட்டு ஏன் மடியக் கூடாது? துருக்கியர்களின் ரத்தத்தைப் பெருக்கும் ஆசையை மனத்தில் தேக்கிக் கொண்டு விண்ணுலகம் செல்வதைக் காட்டிலும் இந்த உலகத்திலேயே அந்த ஆசையை நிறைவேற்றிவிட்டு ஏன் மரிக்கக் கூடாது?'' என்று கேட்டேன்.

இதைத் தவிர வேறு வழி தோன்ருமற் போகவே, எல்லோரும் என் ஆசையை மனப்பூர்வமாக ஆதரித்தனர்.

கையில் ஈட்டி ஏந்தி முதலில் களத்தில் குதித்தவன் நான்தான். என்னைத் தொடர்ந்து என் மற்றத் தோழர்களும் வந்தார்கள். துருக்கியர்கள் குண்டுகளைக் கொண்டு எங்களை வரவேற்ருர்கள். நான் எனது இரண்டு தோழர்கள் விழுவதைக் கண்டேன். வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்தவன் எதிரிகளின் மேல் பாய்ந்தேன். மற்றத் தோழர்களும் என்னைப் பின்பற்றினுர்கள். என் விழிகள் ரத்தமேறிச் சிவந்தன. என்னுல் எதையும் பார்க்க முடியவில்லை. நான் ஈட்டியைக் காற்றில் சுழற்றியவண்ணம் முன்னே பாய்ந்தேன். திடீரென்று பின்னுலிருந்து யாரோ என்னை ஓங்கி அடித்தார்கள். நான் மூர்ச்சையுற்றுச் சாய்ந்தேன்.

எனக்குப் பிரக்ஞை வந்து கண் விழித்த பொழுது நான் முயாவிச்சின் வீட்டில் இருப்பதை உணர்ந்தேன். நான் ஒரு பாயில் கிடந்தேன். என்னைச் சுற்றிப் பல துருக்கியர்கள். அவர்களோடு அலிமுயாவிச்சும் இருந்தான். அவர்கள் ஏதோ தலையை ஆட்டி ஆட்டிப் பேசிக் கொண்டிருந்தனர். நான் நன்ருகக் கண் விழித்ததும், அலிமுயாவிச் என் அருகில் வந்து குனிந்து என் கையை அன்போடு பற்றிக் கொண்டான்.

''உடல் நிலை எப்படி இருக்கிறது?'' என்று கேட்டான் அவன்.

''நான் எழுந்து உட்கார முயன்றேன். திடீரென்று உயிர் போய்விடும் போல வலித்தது. புதிதாக மீண்டும் அடிபட்டாற்போலத் துடித்துப் போனேன். அடுத்த கணம் அப்படியே மீண்டும் மூர்ச்சையாகிப் போனேன். வள்ளிசாக ஒரு மாதம் நான் மரணப் படுக்கையில் கிடந்தேன். அலி ஒருகணம்கூட என்னை விட்டு அந்தண்டை இந்தண்டை அகலவில்லை. அவன் கவனித்துக் கவனித்து எனக்குப் பணிவிடை செய்தான். என் தந்தையே அப்படிக் கவனித்திருப்பாரோ, என்னவோ ! அவன் தன் கைகளாலேயே என் கட்டுக்களைப் பிரித்து மாற்றுக் கட்டுப் போடுவான். குழந்தைகளுக்கு ஊட்டுவது போல் ஊட்டுவான். பசி இல்லாவிட்டாலும் நேரத்தில் வற்புறுத்தி உணவு அருந்த வைப்பான். சிற்சில போழ்து என் தலையைத் தன் தொடையில் தூக்கி வைத்துக் கொண்டு முட்டை, மாமிசம் ஆகிய வற்றை வற்புறுத்திச் சாப்பிடச் செய்வான்.

கடைசியில் நான் குணம் அடையலானேன். என் கால்கள் வலுப்பெற்று எழுந்து நிற்கும் சக்தியைப் பெற்றதும், நான் கவரைப் பிடித்

இன்னுமொரு குழந்தையைப் பெறுவதற்குமுன் சற்று

யோசியுங்கள்



இக்குழந்தையை நன்றாக படிக்க வைக்க வேண்டாமா? உங்கள் விருப்பப்படி, குழந்தைக்கு வசதிகள் அனைத்தும் அளிக்க வேண்டாமா? இன்னொரு குழந்தையை உடனே பெற்றால், இதெல்லாம் முடியுமா? சிரமம் தான். அடுத்த குழந்தை உடனே வேண்டாம் என்று நீங்கள் கருதுவது இயற்கைதானே.

நீங்கள் மட்டுமல்ல; உலகெங்கிலும் தம்பதிகள் இவ்விதம்தான் கருதுகிறார்கள். வளமுடன் வளர்க்க வசதிகள் பெருகும் வரை, அவர்கள் இன்னொரு குழந்தையைப் பெறுவதில்லை. நீங்களும் 'நிரோத்' உபயோகித்து குழந்தை பெறுவதைத் தள்ளிப்போடலாம். அனைவரும் விரும்பி ஏற்கும் ரப்பர் கருத்தடைச் சாதனம் நிரோத்; இது ஆண்களுக்கானது. தலைமுறை தலைமுறையாக உபயோகத்தில் இருந்துவரும் சிறந்த, எளிய, பாதுகாப்பான கருத்தடைச் சாதனம் நிரோத். நீங்களும் நிரோத் உபயோகியுங்கள்.

நிரோத் எங்கும் கிடைக்கிறது. அரசாங்க ஆதரவு விலை 15 பைசாவுக்கு 3



இன்னொரு குழந்தையை வளர்க்க வசதி பெறும் வரை
உபயோகியுங்கள்

நிரோத்

லட்சக்கணக்கான பேர் விரும்பி ஏற்கும் எளிய, பாதுகாப்பான கருத்தடைச் சாதனம் நிரோத்.

71/466

பலசரக்குக் கடைகள், மருந்தகங்கள், வெற்றிலைபாக்குக்கடைகள் இங்கெல்லாம் நிரோத் விற்பனையாகிறது

> ஏழைக்குத் தன் வருங்காலத்தைப் பற்றிக் கனவு காண்பது இன்பம் பயப்பதாக அமையும். என்றைக்காவது நாமும் பணக்காரராகலாம், சௌகரியமாக வாழலாம் என்று எண்ணுவான். ஆனால் பணக்காரர்கள் கனவு துன்பமாக முடியும். எங்கேயாவது நாம் ஏழையாகி விட்டால் என்ன ஆவது என்று கனவு கண்டு தங்களை வருத்திக் கொள்வார்கள்.

துக் கொண்டு அறையில் உலாவத் தொடங்கினேன். அலி பெரும்பாலும் ஆதரவோடு கைலாகு கொடுத்து எனக்கு உதவுவான். என்னை முற்றம் வரையில் இட்டுச் செல்வான்; தோட்டத்து மரத்தின் அடிக்கும் அழைத்துச் செல்வான். மர நிழலில் உட்கார்ந்து நான் களைப்பாறுவேன்.

நாட்கள் ஆக ஆக, நான் உடல் வலிமை பெற்றேன். அலி என்னை முறுவலோடு நோக்குவான். அவன் உள்ளமே மகிழ்ச்சியில் களிநடம் புரிவதாகத் தோன்றும்.

ஒரு நாள் நான் மகிழ்ச்சியோடு ஆடிப் பாடுவதைக் கண்ட அலி குதூகலம் ததும்பிய குரலில், ''நீ நன்றாகக் குணமாகிவிட்டாய் என்று பொருள் இதற்கு!'' என்றான்.

பிறகு தோட்டத்திலேயே என்னை விட்டு விட்டு உள்ளே போனான். நான் வியப்புடன் அவனையே பார்க்கலானேன். சில கணங்களில், அவன் குண்டுகள் நிறைந்த இரு துப்பாக்கிகளோடு வந்தான். அவன் முகம் வெறிக் காட்சி தந்தது. விழிகள் பசித்த பூனையைப் போலப் பயங்கரமாகப் பளிச்சிட்டன.

அவன் என் எதிரில் வந்து நின்றுகொண்டு கூறினான்: ''நான் உன்னைக் குணமாக்கிவிட்டேன். உன் காலில் நிற்கும் அளவுக்கு உன்னைச் சீர்ப்படுத்திவிட்டேன். இப்பொழுது நீ முன்போலவே குணமாகிவிட்டாய். என் கடனைத் தீர்க்கும் அளவுக்கு நீ வலுப்பெற்று விட்டாய். நீ எனக்கு மிகவும் கடன்பட்டவன், உனக்கு இது தெரியும். நீ மூன்று தலைகளை எனக்குத் தந்தாக வேண்டும். ஏனென்றால், எனது இரண்டு சகோதரர்களை நீ கொன்றிருக்கிறாய்.''

இதைக் கூறும்பொழுது அவன் விழிகள் பயங்கரமாகத் தீயைக் கக்கிக் கொண்டிருந்தன. அவன் உதடுகள் துடித்துக் கொண்டிருந்தன.

''நான் உன்னை அப்பொழுதே தீர்த்துக் கட்டியிருக்கலாம். என் எதிரே காயமுற்றுக் கிடந்த பொழுது நான் வெகு இலகுவாக என் காரியத்தை முடித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் நான் அப்படிச் செய்யவில்லை. உன்னை நன்றாகக் குணப்படுத்திவிட்டே கொல்ல விரும்பினேன் நான். அலிமுயாலிச் எந்த நாளும் அநாதையான, ஆதரவற்ற எதிரியைக் கொன்றதில்லை. அவன் உன் விஷயத்திலும் இந்த நியாயத்தை மீற விரும்பவில்லை.''

அவன் என்னிடம் ஒரு துப்பாக்கியைக் கொடுத்தான். ''இந்தா, துப்பாக்கி! வா, காட்டுக்குப் போவோம். அங்கே போய் நமது ஆயுதங்களின் பலப் பரீட்சையை வைத்துக் கொள்ளுவோம்!'' என்றான்.

கடைசியில் நாங்கள் இருவரும் காட்டுக்குச் சென்றோம்.

''நீ இருக்கும் இடத்திலேயே நில்'' என்றவன், ''நான் இங்கே நின்று கொள்ளுகிறேன். எதிரும் புதிருமாக நிற்க இதுதான் சௌகரியம். இங்கு நின்ற வண்ணமே நாம் இருவரும் சேர்ந்தாற்போலத் துப்பாக்கியின் குதிரையை அழுத்துவோம்!'' என்றான்.

இதற்குள் என் அறிவு தன் நிலை பெற்று விட்டது.

நான் என் துப்பாக்கியை ஒரு புறம் விட்டெறிந்தேன்.

ஓர் ஓரமாகப் போய் ஒதுங்கி நின்று கொண்டேன்.

''உனக்கு எதிராக நான் ஆயுதம் தூக்குவதா? என்னை என்ன அவ்வளவு நீசன் என்று எண்ணிவிட்டாயா? நான் உன்னைத் துப்பாக்கியினால் சுடுவேன் என்று நினைக்கிறாயா? உலகத்திலேயே கிடைக்கக் கூடாத அரும் பொருளே கிடைத்தாலும் உன்னைக் கொல்ல மாட்டேன்!'' என்றேன் நான்.

''நீ இதைச் செய்தே ஆக வேண்டும். உன்னை எப்படியாவது நிர்ப்பந்தப்படுத்தி இதைச் செய்ய வைத்தே தீருவேன்!'' அவன் வெறுப்போடு சிரித்தான். ''நான் இந்தத் துவந்தப் போரைத் தவிர்க்க முடியாது. நான் ஆயுதம் இல்லாதவனைச் சுடவும் விரும்பவில்லை. எடு, துப்பாக்கியை! நான் வேடிக்கை செய்யவில்லை!'' என்றான்.

நான் அசையாமல் நின்று கொண்டிருந்தேன்.

''நான் சொல்கிறேன், எடு துப்பாக்கியை!'' என்று அவன் இடிக் குரலில் முழக்கினான்: ''எடுக்காவிட்டால், உன்னைக் கோழை, குள்ள நரி என்பேன்!''

நான் குனிந்து துப்பாக்கியை எடுத்தேன்.

''இந்தப் பக்கம் திரும்பு!''

நான் திரும்பினேன்.

''என் மீது குறி வை!''

அவன் என் மீது குறி வைத்தான். நான் என்னை அறியாமலே என் துப்பாக்கியின் முனையை அவன் எதிரே நீட்டினேன்.


நான் துப்பாக்கியின் குதிரையை அமுக்கினேனா இல்லையா என்பது எனக்கு நினைவில்லை. ஆனால் நான் அவனைப் பார்க்கும்பொழுது, அவன் தடுமாறி விழுந்து கொண்டிருந்தான். உயிர்ப் பாசம் என்னை அந்நிலைக் கயவனாக்கி விட்டதா? நான் வேதனையினால் கதறிவிட்டேன். அவனை நோக்கி ஓடினேன், அதற்குள் அவன் மரித்துவிட்டான்.

''அது முதற்கொண்டு நான் ஒவ்வோர் ஆண்டும், அவன் மகன்களுக்காக உருளைக் கிழங்கும் கோசும் கொண்டு தருகிறேன். ஆடுகளும் பசுக்களும் அவர்களுக்கு அனுப்பி வைக்கிறேன்.''

டைக்கோ தன் கதையை முடித்துவிட்டான். அப்படியே தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டான். அவன் தன் கன்னங்களில் வழிந்து கொண்டிருந்த கண்ணீரைக் கட்டுப்படுத்த முயன்று கொண்டிருந்தான். ஆனால் அம்முயற்சியில் தோல்வியே கண்டான்.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031
Managing Editor: T. Sadasivam

மெல்ல மெல்ல மெதுவா எழுந்து, நில்லு, கண்ணு!



அமுல்ஸ்ப்ரேயின் ஆதாரத்தின் பேரில் எழுந்து நிற்கும் இந்தச் செல்வன், பத்து மாதம் நிறைந்த நீகில். அவனை சற்றுக் கவனித்துப் பாருங்கள்—வலிமையான கை கால்கள், அழகான சருமம், மற்றும் பிரகாசமான கண்கள்! அமுல்ஸ்ப்ரேயின் சிறப்புக்குக் கண்ணெதிரே காணும் உயிரோவியம் நீகில்.

சாப்பிடும் நேரம் ஆச்சு. என் அமுல்ஸ்ப்ரே கொண்டுவா.





துவக்கமே படுவேகம்.

உங்கள் குழந்தைக்கு, பிறந்த முதல் வாரத்திலிருந்தே அமுல்ஸ்ப்ரே தரலாம். அமுல்-ஸ்ப்ரே எளிதில் சீரணிக்கக் கூடியது. சரிவிகித ஊட்டச் சத்துக்கள் நிறைந்தது. அவசியமான வைட்டமின்கள், தாதுப் பொருள்கள் மற்றும் சீரான வளர்ச்சிக்காக அதிக அளவிலே தரமுயர்ந்த புரதச் சத்துக்கள் கொண்டது.



அமுல்ஸ்ப்ரே

தாய்ப்பாலுக்குப் பதிலாகப் புகட்டச் சிறந்தது

ASP/AS-20

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)

